விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 19, ஞாயிற்றுக்கிழமை 04.12.2016 | கதிர் 29

யாழ்.நகரில்
புத்தம் புதிய நவீன ஆடைத்
தெரிவுகளுக்கு
றோயல்
கலெக்ஷன்ஸ்
இல.223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5573

# பொதுபலசேனாவின் ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் தடை!

கொழும்பு,டிசெம்பர் 04

மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி தனித்துவிடப்பட்டுள்ளார் எனத் தெரிவித்து, அவருக்கு ஆதரவும் பக்கபலமும் வெளிப்படுத்தும் விதத்தில் மட்டக்களப்பு நகருக்குச் சென்று அங்கு நேற்று ஆர்ப்பாட்டம் செய்யத் திட்டமிட்டிருந்த பொதுபலசேனா அமைப்பின் முயற்சிக்கு நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் தடைவிதித்தது. அதனால் நகரத்தில் பொதுபல சேனாவினால் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்த முடியவில்லை.

பக்கம் 23 »

# பொலனறுவையுடன் தடுத்து நிறுத்தப்பட்டது ஞானசாரர் பிக்கு அணி!

கொழும்பு, டிசெ.04

பொதுபலசேனாவின் செயலாளர் வண.கலகொட அத்த ஞானசார தேரர் தலைமையில் 5 பஸ்களிலும் மேலும் பல வாகனங்களிலும் தெற்கிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த சுமார் 250க்கு மேற்பட்ட பிக்குமார்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நீதிமன்ற உத்தரவை அடுத்து, பொலனறுவையின்



பக்கம் 24 »

'காலைக்கதிர்' கோரிக்கையின்படி

# சுமந்திரனுடன் விவாதத்துக்கு கஜேந்திரகுமார் தயாராம்!

யாழ்ப்பாணம், டிசெ.04

"தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையில், விடயங்களை தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக – தெரியப்படுத்துவதற்காக – தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்பேச்சாளரும், யாழ். மாவட்ட எம்.பியுமான எம்.ஏ. சுமந்திரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பொருத்தமான ஒழுங்கமைப்பா

பக்கம் 23 »

# இனக் கலவர முயற்சி; ஆகவே கவனம்!

கிழக்கு முதல்வர் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.04

"மட்டக்களப்பில் பொதுபல சேனாவினர் ஆர்ப்பாட்டம் நடத்தினாலும் மக்கள் அமைதிகாக்க வேண்டும். சில சக்திகள் சிறுபான்மை மக்களைத் தூண்டி

பக்கம் 24 »

# தனியார் பேருந்துகளின் பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

கொழும்பு, டிசெ.04

தனியார் பேருந்து உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் முதல் முன்னெடுத்த பணிப் புறக்கணிப்பு நடவடிக்கை நேற்று மாலையிலே கைவிடப்பட்டது.

பேருந்து உரிமையாளர் சங்கங்களின் பிரதி நிதிகள் நேற்றுக் காலை ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றியடைந்தமையடுத்தே இம்முடிவைத் தாங்கள் எடுத்தனர் என அவர்கள் தெரிவித்தனர். *(விரிவான செய்தி 6 ஆம் பக்கத்தில்)*

அளப்பு அருணாசலம்




பௌத்த சீலம் தடை தாண்டிப் பாயுற அழகைப் பாருங்கோ ...!

# மட்டு. தேரர் ஆக்ரோஷம்!

*நேற்று முழுநாளும் நகரில் பதற்றம்*

மட்டக்களப்பு, டிசெ.04

பொதுபலசேனா குழுவினர் மட்டக்களப்பு நகருக்குள்நுழைவதற்கு நீதிமன்றம் தடை விதித்திருக்கும் நிலையில், அந்த அமைப்பினரை மட்டக்களப்பு நகருக்குள்வருவதைத்தடுக்கக் கூடாது என வற்புறுத்தி மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி வண.அம்பிட்டிய சுமண ரத்னதேரர் நேற்று ஆக்ரோஷமான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அதனால் மட்டக்களப்பு நகரத்தில் நேற்று பெரும் பதற்றம் ஏற்பட்டது.



நேற்றுக் காலையில் வேறு சில தேரர்களையும் சிங்களப்

பக்கம் 23 »



மட்டு. நகரில் நேற்று குவிக்கப்பட்டிருந்த பொலிஸார்

# தமிழ் ஊடகவியலாளர்களை திட்டித் தீர்த்த மட்டு. தேரர்!

கொழும்பு,டிசெ.04


'பொதுபலசேனா' உறுப்பினர்களை மட்டக்களப்புக்கு வர அனுமதிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் மட்டக்களப்பு மங்களராமய விகாரைக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தவிகாரையின்விகாராதிபதி வண. அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் தமிழ் ஊடகவியலாளர்களைத்திட்டித்தீர்த்தார் என அங்

பக்கம் 24 »

*சம்பந்தன், சுமந்திரன் மீது சுரேஷ் பாய்ச்சல்*



# அடிப்படையே சறுக்கி விட்டது! இனியும் மௌனம் வேண்டாம்



*மக்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள்!!*


யாழ்ப்பாணம், டிசெ.04

"பொதுத் தேர்தலின் போது, தீர்வுக்கான அடிப்படைகள் குறித்து தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் சில வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள். அவைஎல்லாம் இப்போது அடியோடு தகர்ந்துவிட்டன. இனி மேலும் எந்த நம்பிக்கையுடன் – எந்த முகத்துடன் – தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றீர்கள்? இனியும் நீங்கள் மௌனம் காக்க முடியாது. உரிய வேளை வந்து விட்டது. தமிழ் மக்களிடம் உண்மையைச் சொல்லுங்கள்."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

பக்கம் 23 »

# உள்வீட்டு இரகசியங்களை கக்குவதற்கு கருணா முடிவு!



கொழும்பு, டிசெ.04

'நல்லாட்சி அரசின்' செயற்போக்கில் அதிருப்தி அடைந்துள்ள முன்னாள் பிரதி அமைச்சரும் புலிகளின் முன்னாள் தளபதியுமான கருணா அம்மான், இதுவரை காலமும் மறைத்து வைக்கப்பட்டிந்த பல இரகசியங்களை விரைவில் வெளியிடத் தீர்மானித்திருக்கின்றார் எனக் கொழும்புச் செய்தி வட்டாரங்களில் தகவல் கசிந்திருக்கின்றது.

கருணாவுக்கு நெருக்கமான சில சகாக்களை மேற்கோள் காட்டி இந்தத் தகவலை அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாகனம் ஒன்றைத் தவறான முறையில் பயன்படுத்தியமை தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கெனக் கூறியே நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு அழைக் கப்பட்டு கருணா கைதுசெய்யப்பட்டார்.

அவர் பிரதி அமைச்சராகச் செயற்பட்ட காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட வாகனம் இதுவரையில் ஒப்படைக்கப் படவில்லை என அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டது.

எனினும் இது தொடர்பிலான சட்டரீதியான ஆவணங்கள் தன்னிடம் உள்ளன எனவும் அவற்றைக் கருத்திற் கொள்ளாமல் தன்னைக் கைது செய்துள்ளனர் எனவும் அவர் தனக்கு நெருக்கமானவர்களிடம் கருணா குறிப்பிட்டுள்ளார்.

அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்து அவருக்குப் பிணை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் நாளை திங்கட்கிழமை கொழும்பு பிரதம நீதிவானால் தீர்ப்பு வழங்கப் படவிருக்கின்றது.

இதேவேளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கருணாவை கூட்டு எதிர்க்கட்சியின் முக்கியஸ்தர்கள் நேரில் சென்று சந்தித்திருந்தனர்.

அதன் பின்னரே கருணா பல பழைய இரகசியங்களை வெளியிடவிருக்கின்றார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பல அரசியல் கொலைகளுடன் கருணா குழுவைத் தொடர்பு படுத்தும் செய்திகள் அண்மைக் காலத்தில் அரசுத் தரப்பின் ஆதரவுடன் பரபரப்பாக வெளியிடப்பட்டுவருவதை அடுத்தே கருணா பல இரகசியங்கள் மற்றும் உண்மைகளைக் கக்குவதற்குத் தயாராகி வருகின்றார் என்று கூறப்படுகின்றது. (உ)

# இன்று காலை சிவபூஜா மாநாடு

யாழ்ப்பாணம் டிசெ.04

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை நடத்தும் சிவபூஜா மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு, பேரவையின் நடராஜர் மண்டபத்தில் சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் திருமுறைப் பாராயணம் இந்து சமயப் பேரவை ஓதுவார் மூர்த்திகளாலும், சிவ பூஜையின் தொடக்கவுரையை இந்து சமயப் பேரவையின் செயலாளர் ஸ்ரீ சக்திகிரீவனும் வழங்குவர்.

ஆசியுரைகளை நகுலேஸ்வரம் ஆதீன கர்த்தா ராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள், மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷ இரத்தினசபாபதி தீக்ஷிதர், சிவகாம ஞானபாஸ்கரன் இணுவில் சாஸ்தா குருகுலத்தின் அதிபர் சிவஸ்ரீ.தா.மகாதேவக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கலாநிதி சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ ச.மனோகரக்குருக்கள், சுன்னாகம் கிரியாக்கிரமஜோதி சிவஸ்ரீ ஞா.சர்வேஸ்வரக் குருக்கள் மற்றும் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி தேசிகர் ஆகியோர் வழங்குவர். (இ-7)

# தாஜுதீன் படுகொலை தொடர்பாக சி.சி.ரி.வி. கமராவின் புதிய படங்கள்!

## கொலையாளிகளை அடையாளம் காண வாய்ப்பு

கொழும்பு, டிசெ.04

பிரபல றக்பி வீரர் தாஜுதீன் கொலை தொடர்பாக சி.சி.ரி.வி. கமராவின் புதிய படங்கள் கிடைத்திருக்கின்றன என்றும் -

அவற்றில் தெளிவாகத் தெரியும் தனிநபரை தாஜுதீனின் உறவினர்கள் அடையாளம் காணும் பட்சத்தில் கொலைச் சந்தேக நபரை இலகுவில் மடக்கிவிடலாம் எனப் பொலிஸார் நம்புகின்றனர் என்றும் -

கொழும்பு செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கின்றது.

தாஜுதீன் கொலை தொடர்பாக அப்பகுதியில்எடுக்கப் பட்ட முன்னைய சி.சி.ரி.வி. கமரா படங்களில் காணப்படும் உருவங்களைச் சரியாக அடையாளம் காணமுடியாத நிலைமை இருந்தமையால் அந்தக் கொலை தொடர்பான புலனாய்வு விசாரணைகளில் தேக்க நிலை காணப்பட்டது.

பழைய படங்களை மேம்படுத்தி ஆய்வு செய்யும் நோக்குடன் அந்தப் பதிவுகள் வெளிநாட்டுக்கு அனுப்பப் பட்டன. எனினும் அதில் தெரிந்த உருவங்களைச் சரியாக அடையாளம் காணமுடியாத நிலையே நீடித்தது.

இந்தப் பின்புலத்திலேயே குறைந்த பட்சம் ஒருவரின் உருவத்தையாவது தெளிவாக நோக்கக் கூடிய வகையில் புதிய படங்கள் கிடைத்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தச் சூழலில் தாஜுதீன் கொலையில் பின்னால் உள்ள மர்ம முடிச்சுகள் அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் கட்டவிழும் எனப் பொலிஸார் நம்புகின்றனர்.

தாஜுதீனின் குடும்பத்தினர் சட்டத்தரணியான ஏ.சத்தார் எம்.மிஸ்பாவும் அடுத்த வருடம் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இந்தக் கொலை பற்றிய மர்மங்கள் துலங்கும் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார். (உ)

### சரஸ்வதி முன்பள்ளியின் கலைவிழா இன்று

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளி மற்றும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலை ஆகிய வற்றின்கலைவிழாஇன்றுஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அறிவாலய மண்டபத்தில் இடம்பெறும்.

சரஸ்வதி முன்பள்ளி மற்றும் பொற்பதி அறிவாலயத்தின்தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத்தலைவர் பேராசிரியர் க. தேவராசா, கந்தர்மடம் சைவப் பிரகாசவித்தியாலய அதிபர் நா.சிவசிதம்பரம் ஆகியோரும்; கௌரவ விருந்தினர்களாக கே.ரி.சி. கல்வி நிறுவன இயக்குநர் ஞான திருக்கேதீஸ்வரன், தொழிலதிபர் சி.சதானந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-7)

# ஞானசார தேரருக்கு எதிராக அமைச்சர் றிஷாட் முறைப்பாடு

## பொலிஸ் தலைமையகத்துக்கு நேரில் சென்று



கொழும்பு . டிசெ.04

'பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் வண. கலகொட அத்த ஞானசாரதேரர், இஸ்லாத்துக்கும் அதன் தூதர் முஹமது நபிக்கும் எதிராக அசிங்கமான முறையிலும், உலக வாழ் முஸ்லிம்களின் மனதைப்புண்படுத்தும் வகையிலும் செயற்படுகின்றார்.எனவே அதற்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுங்கள்.'

-இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் சென்ற இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உயர் மட்டக்குழு பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கிறது.பொலிஸ் தலைமயக்கத்திற்கு மேற்படி கட்சியின் தேசியத்தலைவர் ரிஷாத் பதியுதீன், கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் அமீர் அலி,மேல் மாகாண சபை உறுப் பினர் பாயிஸ், சட்டத்தரணி றுஸ்தி ஹபீஸ் ஆகியோர் கொண்ட குழுவே இந்த முறைப்பாட்டை செய்தது. (உ)

# வாள் வெட்டுக் குழுவினரா? மாணவன் உட்பட ஐவர் கைது!

## கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை



யாழில் உள்ள பிரபல பாடசாலை மாணவன் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாள் வெட்டுக் குழுவை சேர்ந்தவர்கள் எனும் சந்தேகத்தில் கோப்பாய் பொலிஸாரினால் இவர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான விஷேட பொலிஸ் குழுவினரால் குறித்த் ஐந்து நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த இருவர் மற்றும் கோப்பாய் மத்தி, திருநெல்வேலி, சுன்னாகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குழுவில் கைது செய்யப்பட்டவர்கள் 16, தொடக்கம் 20 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும், இவர்களே அண்மையில் கோண்டாவில் பகுதியில் உள்ள கடை ஒன்றினுள் புகுந்து வாள் வெட்டினை மேற்கொண்டவர்கள் எனவும் அவர்களிடம் இருந்து இரு வாள்கள் , ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி ஒன்று ஆகியன மீட்கப்பட்டுள்ளன எனவும் , கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மாணவன் எனவும், அவருடைய கைத்தொலைபேசியில் வாள்களுடன் நிற்கும் படங்கள் உள்ளன எனவும், குறித்த நபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கப்படுகின்றன எனவும்,அதனைதொடர்ந்து அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி தெரிவித்தார். (உ)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ.04

யாழ்ப்பாணம் கைலாசபிள்ளையார் கோயில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரைத் தாங்கள் கைதுசெய்துள்ளனர் என யாழ்ப்பாணம் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் பொம்மைவெளி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய நபர் என பொலிஸார் கூறினர். சந்தேகநபரின்உடைமையில் இருந்து 3கிராம் 146மில்லிகிராம் அளவுடைய ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். (உ-9)

# யாழ். இராமநாதன் நுண்கலைக்கழக பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரல்

சுன்னாகம் டிசெ.04

யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழக இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான நுண்கலைமாணி இசை, நடனம் மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய துறைகளுக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 09 ஆம் திகதிக்கு முன்னர் இராம நாதன் நுண்கலைக்கழகத்தின் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

(உ- 54)

## இன்று மின்தடை

உயரழுத்த, தாழ் அழுத்த மின் விநியோகமார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் இடம்பெறவுள்ளமையால் இன்று ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்ட இடங்களில் மின் தடை இடம்பெறும் என்று மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

யாழ்.பிரதேசத்தில் சூராவத்தை, மணியம் கடையடி, சுன்னாகம் தொலைத் தொடர்பு நிலையம், மயிலங்காடு, குப்பிளான், ஏழாலை, கட்டுவன், கட்டுவன்புலம், வாகையடி, ஈவினை, அச்செழு, கற்பகம், புன்னாலைக் கட்டுவன், விக்கிரமராச்சி, குரும்பசிட்டி, வசாவிளான் ஆகிய இடங்களில் மின்தடை இருக்கும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது. (ஐ)

# காணாமற்போன மீனவர் ஒருவர் சடலமாக மீட்பு!

### மற்றவரைக் காணவில்லை; மூன்றாமவர் உயிருடன் திரும்பினார்



தொழிலுக்காகக் கடலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் காணாமல்போயிருந்த நிலையில் சடலமாக ஒருவர் மீட்கப்பட்டுள்ளார்; ஒருவர் காணாமல் போயுள்ளார்; மற்றவர் உயிருடன் திரும்பி உள்ளார்.

எட்வின் மக்கல்யூஸ் (வயது 40) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டவராவார். குருநகர் கடற்பரப்பில் இவரது சடலம் மீட்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த முதலாம் திகதி வியாழக்கிழமை குடாநாட்டில் கடும் மழை பெய்து கொண்டிருந்த வேளை எவரும் கடலினுள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அன்றைய தினம் இந்த மூன்று மீனவர்களும் குருநகர் கடலினுள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இதேவேளை, சடலமாக மீட்கப்பட்டவரின் மனைவி மேற்படி நபர் தொழிலுக்குச் செல்லும்போது "தொழிலுக்குப் போகவேண்டாம்" எனத் தெரிவித்துள்ளார். இருப்பினும் அவர் தொழிலுக்குச் சென்றார் என அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுழல் காற்றால் படகு சுழன்றது. இந்த நிலையில் அதில் பயணித்த இருவர் கடலுக்குள் குதித்து நீந்தினார் எனவும் மற்றவர் படகில் இருந்துள்ளார் எனவும் கூறப்பட்டது. படகில் இருந்தவர் நேற்றுமுன்தினம் உயிருடன் திரும்பினார்.


கடலினுள் குதித்து நீந்திய இருவரில் ஒருவர் காணாமற்போயிருந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார். மீன்பிடிப்பதற்காக நிறுத்தப்பட்டிருக்கும் பட்டியில் சிக்குண்டு இருந்த நிலையில் மீனவர்கள் நேற்று அவரது சடலம் மீட்கப்பட்டது. (ஐ

## கருத்தரங்குகள்

இலங்கை ஆவணக் காப்பகத்தின் 2ஆவது கருத்தரங்கு இன்று ஞாயிறு முதல் செவ்வாய் வரையான - மூன்று தினங்கள் நல்லூரில் அமைந்துள்ள இலங்கை ஆவணக்காப்பகத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்குகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணி வரை கைவினை பற்றியும் நாளை திங்கட்கிழமைபிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை நவீனத்துவமும் அதனைத் தொடர்ந்த கேள்விகளும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் 5 மணிவரைகலைஞர் உரையும் இடம்பெறவுள்ளன. (இ-7)

## மாற்று வலுவுள்ளோர் தினத்தன்று இரத்ததானம்





சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம், யாழ்.போதனா வைத்தியசாலையுடன் இணைந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரத்ததான முகாமில் பணியாளர்களும், பயனாளிகளும் இணைந்து இரத்ததானம் வழங்கினர். (இ)

விரைவில்
எமது யாழ் மண்ணில்...
சியன
யாழ்ப்பாணம்
உங்கள் வீட்டு கூரைகளுக்கு புதிய அத்தியாயம் ஆரம்பம்...
இல்லங்களுக்கான நவீன கூரைத் தெரிவுகள்...
Hospital Road, Jaffna.
[வேம்படி சந்திக்கு அருகில்]
077 9494200
jaffnasiyana
(C/097)

யாழ்ப்பாணத்தில் தொழில்நுட்பத்துறையில் சாதனை படைத்து வரும் விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவு தொழில்நுட்பப் பாடங்களுக்கு சிறப்பாக இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனமாக விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி இனங்காணப்பட்டுள்ளது. பொறியியல் தொழில்நுட்பம். உயிர் முறைமைகள். தொழில்நுட்பம் பாடங்களுக்கு மிகச்சிறந்த விரிவுரைகளும் செயல்முறை வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மாணவரகள் இறுதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(C/096)

## வெள்ளாங்குளத்தில் மருத்துவ முகாம்

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும், ஐக்கிய இராச்சியம் லண்டன் வாழ் வைத்திய நிபுணர் குடும்பமும் இணைந்த அனுசரணையுடன் வடமாகாண மருத்துவர் மன்றத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் கணேசபுரம், வெள்ளாங்குளத்தில் இடம்பெறும்.

இந்த மருத்துவ முகாமில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களைக் கலந்துகொள்ளுமாறு வடமாகாண மருத்துவ மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## இருபாலையில் இன்று மழலைகள் மகிழ்வரங்கு

இருபாலை,டிசெ.04

இருபாலை, டச்சு வீதியில் அமைந்துள்ள மதுரம் மழலைகள் முன்பள்ளிப் பாடசாலையின் மழலைகள் மகிழ்வரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு, முன்பள்ளித் தலைவர் எஸ்கே. கிருபாகரன் தலைமையில் நிறுவனக் கலையரங்கத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் செயலகத்தின் செயலாளர் இ.இளங்கோவனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் ஆர்.பாலசந்திரனும், வலம்புரி ஆசிரியர் என்.விஜயசுந்தரமும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சிறப்புரையைச் சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை அதிபர் பி.சுதர்சனும், நன்றியுரையை யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் எஸ்.தேவரஞ்சனும் வழங்குவர். (இ-7)

PEARSON BTEC
HND
கற்கை நெறிகளுக்கு கல்வியாண்டு 2017 ற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



IIS வழங்கும் சிறப்புச்சலுகைகள்

எதிர்வரும் கல்வியாண்டு 2017ல் HND கற்கை நெறிகளுக்கு மார்கழி 5 முதல் 31 வரை பதிவினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணினி (Laptop)/ Sumsung Tab ஒன்று இலவசமாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
071 777 5666
இன்றே அழைப்பினை ஏற்படுத்தி உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

CIVIL ENGINEERING
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT

IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி.

IIS CITY CAMPUS
200,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8060 | 021 4900 900
info@iis.edu.lk iis@iis.lk
www.iis.edu.lk

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 - 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 - 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 - 222 2600

## வெளிப்படையாகச் செயற்படுங்கள்!

தீர்வு முயற்சி தீர்க்கமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கின்றது.

தமிழர்களைப் பொறுத்தவரை இது முக்கிய தருணம். ஏற்கனவே இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி டிசெம்பர், ஜனவரி மாதங்கள் நமக்கு முக்கிய காலகட்டமாக அமையப் போகின்றன.

தமிழர் தரப்பு முதலில் தனக்குள்ளும், பிறகு ஒன்றுபட்டு நின்று, தென்னிலங்கை அரசுத் தரப்பு மற்றும் இன்னுமொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் தரப்பு ஆகியவற்றுடன் தெளிவாகவும், வெளிப்படையாகவும், ஒளிவுமறைவு இன்றியும், விட்டுக் கொடுப்புடனும் பேச வேண்டிய காலகட்டம் வந்தாகிவிட்டது.

இதுதான் தீர்வு என்று அவிழ்த்துக்கொட்டி பேசவேண்டிய இவ்விடயத்தில், இனியும் பூடகமாக உரையாடிக் கொண்டு - அல்லது உரையாற்றிக் கொண்டு- இருப்பதில் அர்த்தம் இல்லை.

"தமிழீழமே ஒரே தீர்வு"- என்று வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றி, "அடுத்த மே தினம் தமிழீழத்தில்" என்று பிரகடனப்படுத்தி, தமது வழியில் தமிழ் இளைஞர்களையும் உசுப்பேத்தி செயற்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் வழித்தோன்றல்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இப்போது தமிழர்களின் பிரதான தரப்பு.

இன்றைய 'நல்லாட்சி அரசுடன்' இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சியில் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுவதும் கூட அதே தமிழ்க் கூட்டமைப்புத் தான்.

"தீர்வு விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பைத் திருப்திப்படுத்தினால், அது ஒட்டுமொத்தத் தமிழரையும் திருப்திப்படுத்திய மாதிரித்தான்" - என்று அமைதி முயற்சிகளின் மற்றொரு தரப்பான தென்னிலங்கையும் - ஏன் பார்வையாளர்களான சர்வதேசமும் - கருதும் நிலைதான் இன்று உள்ளது. அது மறுக்கற்பாலதல்ல.

ஈழத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்ற உரிமையோடு களத்தில் நின்ற புலிகள் தங்களின் ஒரே குறிக்கோளான தாயக மண் மீட்புக்காகப் போராடி, 'அடைந்தால் ஈழம்; இல்லையேல் வீரமரணம்' என்ற தங்களின் ஏக இலட்சிய இலக்குக்காகத் தங்களையே ஆகுதியாக்கி மடிந்து போனார்கள். நெகிழ்ந்து போகாத - விட்டுக் கொடுக்காத - அவர்களின் இலட்சியப் பற்று, கடைசியில் அவர்களின் உச்சத் தியாகமான உயிர் ஈகத்தோடு - தற்கொடையோடு - அந்த இயக்கத்தின் அழிவோடு முடிந்து போனது.

ஈழத் தமிழர்கள் மத்தியில் ஆயுதம் ஏந்திய போராளிகள் குழுக்களின் பிறப்பாக்கத்துக்குக் காரணமான உணர்ச்சியாளர்கள் - உணர்வைத் தூண்டியவர்கள் - மட்டும் 'தங்களின் தனித் தமிழீழக் கொள்கையை' தாங்களே கடாசிக் குப்பைக் கூடைக்குள் எறிந்து விட்டு, மீண்டும் அரசியல் செய்ய நேர்ந்துவிட்டது.

"தனித் தமிழீழத்தைக் கைவிட்டு விட்டோம். ஐக்கியப்பட்ட, பிளவுபடாத, இனிமேலும் பிரிக்க முடியாது என உறுதிப்படுத்தப்பட்ட, ஏக இலங்கைக்குள் தமிழர்களின் இறையாண்மையின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு குறித்து பேசித் தீர்வுகாண்போம்." - என்ற புதுக் கோஷத்தோடு வந்த அவர்களைத் தமிழ் மக்களும் ஏற்று, அங்கீகரித்து அவர்களுக்கு வாக்குகள் மூலம் ஆணையும் கொடுத்து விட்டனர்.

1977 பொதுத் தேர்தலில் தனித் தமிழீழத்துக்கு ஒன்றுபட்டு ஆதரவு கொடுத்த அதே தமிழர் தாயகம் தான், 2010, 2015 தேர்தல்களிலும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண்பதற்கான ஆணையைத் தமிழ்க் கூட்டமைப்புக்கும் கொடுத்தது.

'தனித் தமிழீழம்' என்ற கோட்பாடு பின்னர் 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ்த் தேசம் என்ற இறையாண்மையுடன் சமஷ்டித் தீர்வு' ஆக சறுக்குவதற்குத் தமிழ் மக்கள் ஆணையும் அனுமதியும் கொடுத்துவிட்டனர்.

இப்போது 'இறையாண்மை', 'சமஷ்டித் தீர்வு', 'தமிழர் தாயகம்' என்ற கோட்பாடுகளும் அடியோடு சறுக்கிப் போகும் ஏது நிலை வெளிப்படையாகத் தென்படத் தொடங்கியுள்ளது.

வடக்கு, கிழக்கு இணைப்பு இல்லை, பிரிப்புத் தான் நிலைமை என்றால் 'தமிழர் தாயகம்' என்ற பேச்சுக்கே இடமில்லை.

'சமஷ்டித் தீர்வு' என்ற பதத்துடன் கூடிய எந்தத் தீர்வையும் கூட்டமைப்பு வலியுறுத்தாது என்றால் அதுவும் 'அவுட்' தான்.

அடுத்தது 'தமிழரின் இறையாண்மை'. அந்த இறையாண்மை குறித்துத் தாங்கள் அதிகம் பேச விரும்பவில்லை என்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ள கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன், அதனை விட்டுவிட்டு அதிகாரப் பரவலாக்கல் முறைமை குறித்து ஆராயலாம் என்கிறார். இந்த நிலைப்பாடு குறித்து ஒரே ஒரு கேள்விதான் எமது மக்களிடம் உள்ளது.

'தமிழர்களின் இறையாண்மை', 'தமிழர் தாயகம்', 'சமஷ்டித் தீர்வு' என்பனவற்றையெல்லாம் விட்டுவிட்டு அதிகாரப் பரவலாக்கம் குறித்து மட்டும்தான் தமிழர்கள் பேசுவதென்றால் -

அதைத்தானே இவ்வளவு காலமும் ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தாவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்த சங்கரி போன்றோரும் வலியுறுத்தி வந்தனர்....! அப்போது இதற்காகத்தானே அவர்களை 'துரோகி' என்றோம்....? இப்போது நாம் அதைச் செய்யலாமா?

ஆம். செய்யலாம். தமிழீழம் கேட்ட மக்கள் - அதற்காகத் தமது வாக்குகள் மூலம் ஏக ஆணை தந்த மக்கள் - ஐக்கிய இலங்கைக்குள், ஒன்றுபட்ட நாட்டுக்குள் தீர்வு காணும் ஆணையை அதே கூட்டமைப்புக்கு வழங்கவில்லையா?

ஆகவே, இன்றைய கையறு நிலையில், 'ஒன்றுபட்ட தமிழர் தாயகம்', 'சமஷ்டி', 'தமிழரின் இறைமை' என்ற கொள்கைகளை மண்ணாங்கட்டியாக ஒதுக்கிவிட்டு வெறும் அதிகாரப் பகிர்வு என்ற இலக்குக்கும் வாக்குகள் மூலம் ஆணை தருவார்கள். அந்த ஆணையைத் தமிழ் மக்களிடம் இருந்து பெறும் வல்லமை கூட்டமைப்புக்கும் உண்டு.

அத்தகைய தீர்வைத் தானே பெறப் போகின்றீர்கள். உங்களிடம் உள்ள வாய் வீச்சு வல்லமையைப் பயன்படுத்தி, அதற்கும் எமது மக்களின் ஆணையைப் பெற்றுக் கொள்ளுங்கள். அது உங்களால் முடிந்த காரியம் தான். ஆகவே, வெளிப்படையாகப் பேசி அதைச் செய்யுங்களேன். அதுவே சரி.

# தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நல்லாட்சி அரசு புரிந்து கொள்ளும்

## சிறீதரன் எம்.பி. நம்பிக்கை



முல்லைத்தீவு, டிசெ.04

தமிழர்கள் தமது விடுதலைக்காகவே போராடினர். இந்தப் போராட்டத்தை நல்லாட்சி அரசு புரிந்து கொள்ளும் என்று நம்புகின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்களின் விடுதலைக்காக இறுதி வரை போராடி உயிரிழந்த மாவீரர்களை நினைவு கூரும்தகுதி ஒவ்வொருதமிழனுக்கும் உண்டு. மாவீரர் நாளைக்கடைபிடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் சர்வதேச சமூகத்திடமும் கூட்டமைப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் போரில் உயிரிழந்தவர்களை உறவினர்கள் நினைவு கூருவதற்குத் தடைவிதிக்கக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நல்லாட்சி அரசுசார்பில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஏற்றுக்கொண்டுள்ளார்.

தங்களைத் தமிழ்த் தலைவர்களாகவோ அல்லது மேதைகளாவோ வெளிப்படுப்படுத்திக் கொள்வதற்காக மாவீரர் தின நிகழ்வுகளை கூட்டமைப்பு முன்னெடுக்கவில்லை. மக்களுக்கு நாங்கள் வழங்கியுள்ள சத்தியத்தின் அடிப் படையிலும் மக்கள் எமக்குத் தந்துள்ள ஆணையின் அடிப் படையிலும் தலைமைத்துவ வழிகாட்டலை செய்வது எமது பொறுப்பாகும்.

மாவீரர்களை கௌரவப்படுத்தி, தமிழர்களின் போர் வரலாற்றை எதிர்கால சந்ததிக்குக் கையளித்து, வரும் காலத்தில் நிகழ்வுகள் எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவும் கூட்டமைப்பு தனது பணியை செய்திருக்கிறது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் மாவீரர் நாள் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என எமது தலைவர் சம்பந்தனுடன் எமது சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்தோம்.

ஜனாதிபதியும் பிரதமரும் எமது கோரிக்கைக்கு பச்சைக் கொடி காட்டாது விட்டாலும் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு தடை விதிக்கவில்லை, அச்சுறுத்தல்களும் விடப்படவில்லை.

இதனால் மாவீரர் துயிலும் இல்லங்களில் சுடர் ஏற்றி தமது பிள்ளைகளை உறவினர்கள் அஞ்சலிக்க முடிந்தது.

இவ்வாறு அஞ்சலி செலுத்தப்பட்டமையை சிங்களம் கற்று அறிந்தோர் மற்றும் சிங்கள, நற்சிந்தனையாளர்கள் கூட வரவேற்று இருந்தனர். இனி வரும் காலங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் சீரமைக்கப்பட்டு அஞ்சலி செலுத்துவ்தற்கு நல்லாட்சி அரசு வழிவகை செய்யும் என கூட்டமைப்பு நம்புகிறது.-என்றார். (ஐ-81)

# பொருத்தமான அரசமைப்பு தயாரிக்கப்பட்டால் இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நீங்கும்

## 6 நாடுகள் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.04

இலங்கைக்குப் பொருத்தமான புதிய அரசமைப்புகள் தயாரிக்க முடிந்தால், நாட்டுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகளை நீக்கிக் கொள்ள முடியும் என்று 6 நாடுகள் கூட்டாகத் தெரிவித்துள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மன், பிரான்ஸ், கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளே இதனைச் சுட்டிக் காட்டியுள்ளன.

பெரும்பான்மையினர் போன்று சிறுபான்மையினரின் உரிமை பாதுகாக்கப்படும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது வரையில் வட மாகாண சபையில் ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கலான அழுத்தங்கள், புதிய அரசமைப்புடன் ஒத்துப்போகும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# கரும்புலிகளின் படகுகளைப் பார்வையிட ஆர்வம் காட்டிய அமெரிக்கக் கொமாண்டோ

கொழும்பு, டிசெ.04

திருகோணமலைத் துறைமுகத்துக்கு கடந்த வாரம் வந்திருந்த அமெரிக்க கடற் படையின் மரைன் கொமாண்டோ படையினர், கடற்புலிகளின் கரும்புலித் தாக்குதல் படகுகளின் செயற்பாட்டு முறையை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர்.

இலங்கை கடற்படையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரைன் படைப் பிரிவுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கிலும், இலங்கை கடற்படையுடனான உறவை வலுப்படுத்தும் நோக்கிலும், அமெரிக்க கடற்படையின் ஈரூடக போக்குவரத்துக் கப்பல் கடந்த 22 ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்துக்கு வந்தது.

இந்தக் கப்பலில் அமெரிக் கடற்படையின் 11 ஆவது மரைன் நடவடிக்கை அணியைச் சேர்ந்த மரைன் கொமாண்டோக்களும் திருகோணமலை வந்திருந்தனர்.

இவர்கள் இலங்கைக் கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை அருங்காட்சியகம் மற்றும் கடற்படைத்தளத்தையும் பார்வையிட்டனர்.

கடற்படை அருங்காட்சியகத்தில், கடற்புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தாக்குதல் படகுகளையும் பார்வையிட்டனர்.

கடற்கரும்புலித் தாக்குதலுக்காக வடிவமைக்கப்பட்ட படகுகளின் வடிவமைப்பு மற்றும் செயற்றிறனை அறிந்து கொள்வதில் அமெரிக்க மரைன் படையினர் ஆர்வம் காட்டியுள்ளனர்.

கடற் கரும்புலிகளின் தாக்குதல் படகுகளின் திறன் மற்றும் அவற்றால் எதிர்கொண்ட நெருக்கடிகள் பற்றி அமெரிக்க மரைன் கொமாண்டோக்களுக்கு இலங்கைக் கடற்படை அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

### நாளை

05.12.2016
திங்கட்கிழமை
திதி : சமஷ்டி முன்னிரவு 11.25 வரை
நட்சத்திரம் : திருவோணம் முன்னிரவு 8.13 வரை
சுபநேரம் 12.16 – 1.46
இராகுகாலம் 7.46 – 9.16.வரை

JSAC

பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்பு செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

பெண்களின் வாழ்வியல் முன்னேற இலகுவான பொறிமுறைகளை வகுப்போம். அவர்களுக்கான தடைகளை அகற்றி சுமுகமான பாதையைக் காட்டுவோம்.

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

16
2016

# வாழ்வாதாரம் சிதைந்த நிலையில் முல்லையில் மாற்றுத்திறனாளிகள்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.04

மாற்றுத்திறனாளிகளை அதிகமாக கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. எனினும் அங்குள்ள மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரம் சிதைவடைந்து காணப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கு மதிப்பளிப்பதற்கு மாற்றுத் திறனாளிகள் தினத்தில் திடசங்கற்பம் கொள்ளுங்கள்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம். இதனை முன்னிட்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாற்றுத் திறனாளிகள் பேருந்துகளில் பயணம் செய்யும் போது அல்லது தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ளச் செல்லும் இடங்களிலும் கூட பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்கு அப்பால் நானும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு ஒரு காலை இழந்துள்ளேன். மாற்றுத்திறனாளிகளின் வலிகளை அறிவேன்.

அந்த வகையில் பொதுவாக எமது உறவுகள், பேருந்துகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கையை கூட வழங்காத சந்தர்ப்பங்களை அவதானிக்கின்றோம்.

பொது இடங்களில் பொதுத் தேவைகளில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்காது செயற்படுகின்றோம். இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மாற்றுத் திறனாளிகளைக் கண்டு நிலைபேறான அபிவிருத்தியை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் கடந்த 7 வருடங்களாக அடிப்படை வசதிகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையில் பலர் வசித்து வருகின்றார்கள்.

அரசால் வீட்டுத் திட்டம் மற்றும் மலசல கூட வசதிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை பூரணப்படுத்தப்படவில்லை. அத்துடன் மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்ற வகையிலும் அமைக்கப்படவில்லை.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் குடிதண்ணீர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். மாற்றுத் திறனாளிகளின் நிலைபேறான வேலைத்திட்டத்தின் கீழ் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கவேண்டும்.



இவ்வாறான உதவிகளைச் செய்தாலும், மறுபுறம் அவர்கள் உளவியல் ரீதியாகத் துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த நிலை மாற்றப்படவேண்டும். இந்த சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு, அனைவரும் முடிந்த வரை உதவுவோம் என்று திடசங்கற்பம் கொள்வோம்.- என்று தெரிவித்தார். (ஐ-81)



# வவுனியா புதுக்குளம் ம.வியில் வடிகட்டும் குடிதண்ணீர் இயந்திரம்

வவுனியா, டிசெ.04

சுத்தமான குடிதண்ணீரைச் சிறு வயதிலிருந்தே பருகுவோம் என்ற செயற்றிட்டத்தில் வடிகட்டும் குடிதண்ணீர் இயந்திரத் தொகுதி வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சிறுநீரக நோயிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் சுத்தமான குடிதண்ணீரைச் சிறு வயதிலிருந்தே பருகுவோம் என்ற செயற்றிட்டத்தின் கீழ் குடிதண்ணீர் இயந்திரத் தொகுதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கத்தால் வெள்ளிக்கிழமை மாணவர்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது.

இதற்கு கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் அமைப்பான இமை பவுன்டேசன் நிதியுதவி வழங்கியுள்ளது.

பாடசாலை அதிபர் சு. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சிறீஸ்கந்தராஜா, புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# உடைமைகளைப் பாதுகாக்க ஏற்றவாறு வசதி இல்லை

## நாயாறு கடற்றொழிலாளர்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.04

முல்லைத்தீவு கடலில், மீன்பிடியில் ஈடுபடும் நாயாறு மீனவர்கள் தமது உடைமைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கான வசதிகள் இல்லை என்று கவலை தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு கரையோரக் கிராமங்களான நாயாறு பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடும் தங்களது படகுகளை பாதுகாப்பாக வைப்பதற்கான வசதியை ஏற்படுத்தித் தருமாறும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீரற்ற காலநிலையைக் கருத்தில் கொண்டு மீனவர்களுடைய படகுகளை பாதுகாப்பான பகுதிகளுக்கு நகர்த்துமாறு நீரியல் வள திணைக்களத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்ட நிலையில், மீனவர்கள் இந்த கோரிக்கையை விடுத்திருந்தனர்.

நாயாறு பிரதேசங்களில் பரம்பரையாக மீன்பிடியில் ஈடுபட்டுவரும் தமக்கு, தமது படகுகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான எந்த வித வசதிகளும் இல்லை என்றும் கவலை வெளியிட்டுள்ளனர்.

தென் பகுதியில் இருந்து வந்து சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் அவர்களது மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக வைப்பதற்கான வசதிகள் காணப்படுகின்றன என்றும் மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரிடம் தெரிவித்த போதும் அவர்கள் எந்தவித பதிலும் கொடுக்கவில்லை என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யுத்தத்தில் அனைத்தையும் இழந்து மீண்டுவரும் தமக்கு, இயற்கை அனர்த்தத்தால் இழப்புக்கள் ஏற்படுமாக இருந்தால் முழுப் பொறுப்பையும் உரிய திணைக்களங்களே ஏற்க வேண்டும் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-81)

# கடும் பனியால் வவுனியாவில் மக்கள் சிரமம்

வவுனியா, டிசெ.04

வவுனியாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு முதல் கடும் பனிப்பொழிவு இடம்பெறுகிறது.

நேற்றுக் காலையும் பனிப் பொழிவு அதிகம் காணப்பட்டது என்று மக்கள் தெரிவித்தனர்.

இதனால் போக்குவரத்துச் செய்யும் வாகனச் சாரதிகள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.



கடும் பனிப் பொழிவு காரணமாக மக்களது இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது. (ஐ-100)





# வவுனியா வர்த்தகர் கௌரவிப்பும் அடையாள அட்டை வழங்கலும்

வவுனியா, டிசெ.04

வவுனியா வர்த்தக சங்கத்தின் வர்த்தகர்கள் கௌரவிப்பு நிகழ்வும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றன.

வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் வர்த்தக சங்கத் தலைவர் தி.இராஜலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வவுனியாவில் 40 வருடங்களாக வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்கள் கௌரவிக்கப்பட்டனர். வர்த்தகர்களுக்கான அடையாள அட்டையும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், மேலதிக அரச அதிபர் அ.திரேஸ்குமார், வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.மயூரன், பொலிஸ் அதிகாரிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# பொதுமக்களின் சில காணிகள் வனத் திணைக்கள எல்லைக்குள்

## பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.04

ஒதியமலை தமிழர் பிரதேசங்களில் பொது மக்களின் சொந்தக் காணிகளை உள்ளடக்கி வனத் திணைக்களம் எல்லையிட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வன ஜீவராசிகள் திணைக்களம் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு பாதுகாப்பு வேலிகள் அமைத்துள்ளது. இந்த நிலையில், திட்டமிட்டு தமிழ் மக்களின் காணிகளை அபகரித்துள்ளது என்று பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவர்களுடன் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் பிரதான கருவேப்பங் குளத்தை அழிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் குற்றம்சாட்டியுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஒதியமலை 123 பிரிவு கிராம சேவையாளரிடம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர். அத்துடன் கிராம சேவையாளரை அழைத்துச் சென்று பிழையான திட்டங்களையும் எல்லைகளையும் காண்பித்துள்ளனர்.

இது தொடர்பாகக் குறித்த கிராம சேவையாளர், வன ஜீவராசி திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, அவர்களை சம்பவ இடத்துக்கு அழைத்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, அவர்கள் அது மகாவலி அபிவிருத்தி திட்ட எல்லைகள் அவை என்று கூறி மகாவலி அபிவிருத்தித் திட்ட முகாமையாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர்.

பின்னர் மகாவலி அபிவிருத்தித் திட்ட முகாமையாளரை அணுகிய போது அவர் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரச அதிபருடன் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடி, குறித்த இடம் பார்வையிடப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

மகாவலி திட்டத்தின் நோக்கங்களில் விவசாய உற்பத்தியை மேம்படுத்துதல் என்னும் நோக்கமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆனால், விவசாயம் செய்யும் குளத்தை அழிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர் என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ-81)

காலைக்கதிர் Kalaikkathir



# 25 ஆயிரம் ரூபா அபராதத் தொகையில் மாற்றம் ஏற்படுத்த ஜனாதிபதி இணக்கம்

கொழும்பு, டிசெ.04

வீதி விதிகளை மீறுவோருக்கு எதிரான 25 ஆயிரம் ரூபா அபராதத் தொகையில் இரு திருத்தங்களை மேற்கொள்ள ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என்று மேல் மாகாண முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை தனியார் பஸ் சங்கங்கள் சில ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.



அதற்கமைய இடது பக்கத்தால் முந்திச் செல்வது மற்றும் வேகம் தொடர்பில் 25 ஆயிரம் ரூபா அபராதத் தொகையை நடைமுறைபடுத்தாமல் இருக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும் பஸ் உரிமையாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க பல சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தி குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளதாகவும், இந்தக் குழு எதிர்வரும் 5ஆம் திகதி முதல் செயற்படும் எனவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை ஜனாதிபதியுடன் நேற்றுக் காலை இடம் பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ளதாகவும், வேலை நிறுத்தப் போராட்டத்தை முழுமையாக நிறுத்துவதாகவும் தனியார் பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கம் முன்வைத்துள்ள வரவுசெலவுத்- திட்டத்தில் முன்மொழிவுகள் மூலம் வாகன சாரதிகளுக்கும் வாகனங்களுக்குமான 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் மற்றும் வரிகள் தொடர்பில் எதிர்ப்பு தெரிவித்து தனியார் பஸ் மற்றும் முச்சக்கர வண்டி உட்பட 28 தொழிற்சங்கங்கள் கடந்த வியாழக் கிழமை நள்ளிரவு முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த இந்த பணிப்கிஷ்கரிப்பு காரணமாக பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகியிருந்தனர். இந்நிலையிலேயே, தற்போது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.



கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில், சீனாவின் உதவியுடன் விமானங்களை புதுப்பிக்கும் அலகு ஒன்றை விமானப்படை புதிதாக உருவாக்கியுள்ளது. இலங்கை விமானப்படை யிடம் உள்ள சீனத் தயாரிப்பு போர் விமானங்கள், மற்றும் போக்குவரத்து விமானங்களை பழுதுபார்க்கும் நோக்கிலேயே இந்த அலகு உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## ஓய்வு பெற்றார் இராணுவ அதிகாரி



கொழும்பு, டிசெ.04

இராணுவத் தலைமை அதிகாரியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் உபய மெடவெல நேற்று முன்தினம் தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் கவசப் படைப் பிரிவின் அதிகாரியான மேஜர் ஜெனரல் உபய மெடவெலவுக்கு, கொழும்பு றொக்ஹவுஸில் உள்ள கவசப் படைப் பிரிவுத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் பிரியாவிடை அணி வகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இரண்டாவது, மூன்றாவது கட்ட ஈழப்போர்களின் போது, வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளில், இராணுவத்தின் கவசப்படைப்பிரிவின் அணிகளுக்கு இவர் தலைமை தாங்கியவராவார். கடந்த ஒக்ரோபர் மாத இறுதியில் இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் உபய மெடவெல, சுமார் ஒரு மாத காலமே இந்தப் பதவியை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரேசிலிலும் இலங்கை குளறுபடி!

பிரேசில் தலைநகர் ரியோ டி ஜெனிரோ நகரில் இலங்கை தூதரகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டடத்தை கொள்வனவு செய்யும் போது தெளிவற்ற கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ளது. இது குறித்து முழுமையான விசாரணை நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யவுள்ளனர்.

பிரேசிலில் உள்ள இலங்கை தூதரகத்தின் காணி மற்றும் கட்டடத்தை கொள்வனவு செய்த போது 87 கோடி ரூபா கொடுக்கல் வாங்கல் நடந்துள்ளது. இதிலுள்ள தெளிவின்மை குறித்து விசாரணை நடத்துமாறு கோரியே சர்வதேச வர்த்தக விவகார இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

## கூட்டு எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டத்தில் கண்ணீர்ப்புகை பிரயோகம்

கொழும்பு, டிசெ.04

கூட்டு எதிர்க்கட்சியினர் ஆதரவாளர்கள் நாடாளுமன்ற சுற்று வட்டப்பகுதியில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டதின் மீது கண்ணீர்ப் புகைபிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்ற வளாகத்திற்குள் செல்ல முற்படும்போதே கண்ணீர்ப்புகைப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரியே நேற்று கூட்டு எதிர்க்கட்சியின் ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக நாடாளுமன்ற வீதி மூடப்பட்டது. அதனால் நாடாளுமன்ற சுற்றுப்புற வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுநாயக்க விமான நிலையத்தினுள் அனுமதி பெறாமல் போக்குவரத்து தடைசெய்ய அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, டிசெ.04

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குள் அனுமதியைப் பெறாமல் சட்ட விரோதமாகப் போக்குவரத்து வசதிகளை வழங்கும் செயற்பாட்டைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய வளாகத்தில் வாடிக்கையாளர்களைத் தேடிக் கொடுப்பதன் மூலம் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடைசெய்வதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறானசெயற்பாடுகளால் விமானநிலையம் மற்றும் விமான சேவை நிறுவனங்கள் பெரிய அளவில் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தற்போதைய சட்டத்தில் போதியளவுவிதிமுறைகள்காணப்படாத நிலையில் இந்த நிலைமை உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் பல்வேறு நபர்களால் வாடிக்கையாளர்களைத் தேடிக்கொடுப்பதைத் தடுப்பதற்காக 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான சேவை சட்டத்தில் திருத்தம் செய்வது தொடர்பில் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வாவால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

# இலங்கை மாணவர்கள் இந்தியாவில் மருத்துவம் கற்பதில் சிக்கல் நிலை

கொழும்பு, டிசெ.04

இந்தியாவில் மருத்துவக் கல்லூரிகளில் இலங்கை மாணவர்களை அனுமதிக்கும் விடயத்தில், தலையீடு செய்யுமாறு இந்திய வெளி விவகார அமைச்சுக்கு ஈரான், இலங்கை ஆகிய நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மருத்துவக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கு, தேசிய அளவில் நடத்தப்படும் நீற் எனப்படும் நுழைவுத் தேர்வில் சித்தியடைய வேண்டும் என்று கடந்த மே மாதம், இந்திய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நுழைவுத் தேர்வில், இந்தியக் குடியுரிமை உள்ளவர்கள், இந்தியாவில் வதியாத இந்தியர்கள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் மட்டுமே தோற்ற முடியும்.

இதனால், இந்திய மருத்துவக் கல்லூரிகளில் முகாமைத் துவங்களின் ஒதுக்கீட்டுப் பட்டியலின் மூலம், அனுமதிக் கப்பட்டு வந்த வெளிநாட்டு மாணவர்களின் மருத்துவப் படிப்புக்கான அனுமதிகள் தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நீதிமன்ற உத்தரவினால் 250 ஈரானிய மாணவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது என்று புதுடில்லியில் உள்ள ஈரானிய தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகமும், இதே போன்றதொரு வேண்டுகோளை இந்திய அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளது.


நான்கு மாணவர்கள் இது தொடர்பாக எம்மை அணுகினர். இந்த விவகாரம் தொடர்பாக கவனத்தில் எடுக்குமாறு இந்திய அரசாங்கத்துக்கு கடிதம் எழுதினோம்.

ஆனால் இது வரை பதில் இல்லை என்று இலங்கை தூதரக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பான கரிசனையை, இந்திய வெளிவிவகார அமைச்சு இந்திய மருத்துவசபை மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றுக்கு கொண்டு வந்திருப்பதாக, இந்திய சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார்.

எனினும் இதற்குத் தீர்வு இருப்பதாகத் தெரியவில்லை. விளக்கம் கேட்டு, இந்திய அரசாங்கம் உச்சநீதி மன்றத்தை அணுக வேண்டும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆசிய ஆயர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு



பலநூற்றாண்டுகளாக ஒருவர் மற்றவரின் கருத்துக்கள்,கலாசாரம் மற்றும் பாரம்பரியங்களை மதிக்கும் நல்லிணக்கச் சூழலைக் கொண்ட இலங்கையில் 11 ஆவது ஆசிய ஆயர் பேரவை நடைபெறுவது மகிழ்ச்சியளிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் இன்று டிசெம்பர் மாதம் 04 ஆம் திகதிவரை நீர்கொழும்பில் நடைபெறும் 11 ஆவது ஆசிய ஆயர் பேரவையில் பங்குபற்றும் ஆயர்கள் உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடையில் நேற்று முன்தினம்பிற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றசந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய ஆயர்பேரவையின் தற்போதைய தலைவர் பேராயர் கர்தினால் ஒஸ்வால்ட் கார்டினல் கிரேசியஸ், பாப்பரசர் பிரான்ஸிஸைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேராயர் ஆர்ச் பிஷப் பியறி குவன்வியன் வன் ரொற், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

17 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆயர்களும் கனடா, ஸ்பெயின், போலந்து, பிரான்ஸ், இத்தாலி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 140 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் ஜனாதிபதியுடனான இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த பிரதிநிதிகளை ஜனாதிபதி வரவேற்றமையுடன், கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

வறுமையை ஒழிப்பதற்காகக் கத்தோலிக்க தேவாலயங்களினூடாக மேற்கொள்ளப்படும் பங்களிப்பை இதன்போது பாராட்டிய ஜனாதிபதி, கஷ்டமான சந்தர்ப்பங்களின் போது தனக்கு பேராயர் மெல்கம் ரஞ்சித் வழங்கிய ஆலோசனைகளுக்கும் இதன் போது நன்றி தெரிவித்தார்.

இலங்கையில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அனைத்துமதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் புண்ணிய ஸ்தலங்களைக் கண்டுகொள்ள முடியும் என்றும் மாநாட்டின் பின்னர் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் இலங்கையைச் சுற்றிப்பார்த்து இயற்கைஎழிலை அனுபவிக்கும்படியும் ஜனாதிபதி பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பின்போது இலங்கையின் கலாசாரத்தை எடுத்துக் காட்டும் ஒரு கலாசார நிகழ்வும் இடம்பெற்றதுடன், இந்த நிகழ்வை நினைவுகூறும் வகையில் ஜனாதிபதியால் பிரதி நிதிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சபாநாயகர் கரு ஜய சூரிய, அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ஜோன் அமரதுங்க,நிம்ல் சிறிபால டி சில்வா, எஸ்.பி. நாவின்ன, பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ)



சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளின் 2016 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை யாழ்ப்பாணம் சனச அபிவிருத்தி வங்கி கௌரவித்தது. இந்த நிகழ்வு வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிக்ழ்வில் பிரதமவிருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜய கலா மகேஸ்வரன் கலந்துகொண்டு மாணவர்களைக் கௌரவித்தார். (ஐ)

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு சிவன் அறக் கட்டளை நிறுவனத்தின் மாற்றுத் திறனாளிகள் நிலையத்தில் மருத்துவ சிகிச்சை பெறும் விசேட தேவையுடைய சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் நிகழ்வும் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் கலை நிகழ்வு என்பன கண்டி ஒருத்தோட்டையிலுள்ள சிவன் விசேட தேவையுடைய நிலையத்தில் இடம்பெற்றது.



அந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கணேஸ்வரன் வேலாயுதம், எட்டு நிலையங்களையும் சேர்ந்த பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கினார். (ஐ)



## இராணுவ- சிவில் கூட்டு நிகழ்வில் மாணவருக்கு கற்றல் உபகரணம்









மருதங்கேணிப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வசிக்கும் குடும்பங்களைச் சேர்ந்த 223 மாணவர்களுக்கு கற்பதற்கான கல்வி உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு இராணுவத்தின் 55 ஆவது டிவிஷனின் கீழ் இயங்கும் 553 ஆவது பிரிகேட்டால் நேற்று முன் தினம் தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடத்தப்பட்டது.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் அனுர பெரேரா மற்றும் கம்பஹா மாவட்டத்தில் உள்ள அவரது நண்பர்களின் ஒத்துழைப்புடன் சிவில்- இராணுவ கூட்டு நிகழ்வாக இது நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் அடுத்த வருட கல்விக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

55 ஆவது டிவிஷன் படையணியின் பொதுக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நிர்மல் தர்மரட்ண பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

553 ஆவது பிரிகேட்டின் தளபதி பிரிகேடியர் தம்மிக ஜயசுந்தர, யாழ் படைகளின் தலைமையகத்தின் சிவில் இணைப்புக்களின் சிரேஷ்ட அதிகாரி லெப்டினண்ட் கேணல் ஹரிஸ்சந்திர மாயசிங்க, 10ஆவது பட்டாலியன் விஜயபாகு காலட் படையின் கட்டளை அதிகாரி லெப்டி னன்ட் கேணல் உபுல் ஹத்துரு சிங்க, மருதங்கேணி பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன், மருதங்கேணி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார், தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் எஸ்.பாலச்சந்திரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள், படையினர் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேஜர் அருண பெரேராவின் வைத்திய நண்பர்கள் அப்பிரதேசத்தில் மருத்துவ முகாம் ஒன்றையும் நடத்தினர். (உ)

## சுழிபுரம், குடாக்கணைப் பகுதியில் 22 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

சுழிபுரம், குடாக்கணைப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவரை வட்டுக்கோட் டைப் பொலிஸார் கைது, செய்து மல்லாகம் நீதிவான் ஏ. யூட்சன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான், அந்த நபரை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை இடம்பெறுவது தொடர்பாக வட்டுக் கோட்டை குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கடந்த வியாழக்கிழமை இரவு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

குற்றத்தடுப்பு பிரிவு உப பரிசோதகர் ஏம்.எம். தமீரசில்வா தலைமையில் 6 பேர் கொண்ட பொலிஸ் குழு எடுத்த நடவடிக்கையை அடுத்து அந்த நபர் கைது செய்யப்படார். 22 லீற்றர் கசிப்பு, கோடா, கசிப்பு உற்பத்திப் பொருள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கைதான நபர் முன்னரும் பல தடவைகள் இந்தக் குற்றச்செயல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் குற்றப்பணம் கட்டியும், குற்றத்தை ஒப்புக்கொண்டும் விடுதலை பெற்று வந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குடாக்கணை பகுதியில் இவ்வாறு கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை இடம்பெறுவதால் அயலில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-58)

# வார ராசி பலன்கள்

04.12.2016 முதல் – 10.12.2016 வரை

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

**மேஷம்** :அசுவினி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம்



செவ்வாய் பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிநாதன் செவ்வாய் 10 இல் அதிபலத்துடன் உலவுகிறார். சுக்கிரன்,கேது ஆகியோரது சஞ்சாரமும் சாதகமாக இருப்பதால் புனிதமான காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். பணவரவு சற்று அதிகரிக்கும். புதிய முயற்சிகள் கைகூடும். எதிரிகள் பயந்து ஒளிவார்கள். மனதில் துணிவும் தன்னம் பிக்கையும் கூடும். பிரச்சினைகள் குறையும். நண்பர்கள் உதவு வார்கள். நிலம், மனை, வீடு, வாகனங்கள் சேரும்.

**ரிஷபம்** :கிருத்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதங்கள்



சுக்கிரபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 5 இல் குருவும், 8 இல் புதனும் சுக்கிரனும், 10 இல் கேதுவும் உலவுவது சிறப்பாகும். பொருளாதாரநிலை உயரும். எதிர்பாராத பொருள்சேர்க்கை நிகழும். ஆன்மீகவாதிகள், உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் முன்னேற்றமான சூழ்நிலை யைக் காண்பார்கள். தியானம், யோகாவில் ஈடுபாடு கூடும். தொலைந்துபோன பொருள் கிடைக்கும். பேச்சில் திறமை வெளிப்படும். மனத்தில் தெளிவும் தன்னம்பிக்கையும் பிறக்கும்.

**மிதுனம்** : மிருகசீரிம் 3,4ஆம் பாதங்கள்,திருவாதிரை, புனாபுசம் 1, 2, 3ஆம் பாதங்கள்



புதபகவான் வீட்டை இராசியாய்க் கொண்டஅன்பர்களே!

உங்கள் ராசிக்கு 3 இல் ராகுவும், 6 இல் சூரியன், சனியும் உலவுவது நல்லது. அயல்நாட்டுத் தொடர்பு பயன்படும். சமு தாய நலப் பணியாளர்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கும். நல்லவர்களின் தொடர்பு நலம் சேர்க்கும். 8 இல் செவ்வாய் உலவுவதால் சிறு விபத்துக்கு ஆளாக நேரலாம். எச்சரிக்கை தேவை. உடன் பிறந்தவர்களால் மனவருத்தம் உண்டாகும். சொத்து சம்பந்தமான காரியங்களில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது.

**கடகம்** : புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்



சந்திரபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

புதன் ஒருவரே சாதகமாக உலவுகிறார். பக்குவமாகச் சமாளிக்கவும். பிறரிடம் கோபப்படாமல் நிதானமாகப் பேசிப் பழகவும். பொருள் கொடுக்கல்-வாங்கலில் கவனம் தேவை. பிறரால் ஏமாற்றப்பட நேரலாம். அன்றாடப் பணிகளில் கூட அதிக கவனம் தேவை. குடும்பத்தில் சலசலப்புக்கள் ஏற்படும். பிறமொழி,மத, இனக்காரர்களால் சங்கடங்கள் உண்டாகும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும்.

**சிம்மம்** : மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்



சூரியபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 2 இல் குருவும், 5 இல் சுக்கிரனும் 6 இல் செவ்வாயும் உலவுவது நல்லது. மனத்துக்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் நிகழும். மகப்பேறு அல்லது மக்களால் பாக்கியம் உண்டாகும். திடீர் அதிஷ்ட வாய்ப்புக்கள் வாரமுற்பகுதியில் கூடிவரும். கலைத்துறையினருக்கு சுபிட்சம் கூடும். எதிரிகள் அடங்குவார்கள். வழக்குகளில் வெற்றிகிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் கூடும். கொடுக்கல் - வாங்கல் லாபம் தரும்.

**கன்னி** : உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2ஆம் பாதங்கள்



புதபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 3 இல் சூரியனும்,சனியும், 4 இல் புதனும் சுக்கிரனும் 6இல் கேதுவும் உலவுவது நல்லது. நண்பர்களும் உறவினர்களும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். செய்தொழில் வளர்ச்சிபெறும். புதிய பதவி,பட்டங்கள் கிடைக்கும். சமுதாய நல முன்னேற்றப் பணிகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு வர வேற்புக் கூடும். நிர்வாகத் திறமை வெளிப்படும். கலைஞர்கள் வெற்றிநடை போடுவார்கள். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு உண்டாகும்.

**துலாம்** : சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள்



சுக்கிரபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 3 இல் சுக்கிரனும் 11இல் ராகுவும் உலவுவது சிறப்பாகும். நல்ல தகவல் ஒன்று வந்துசேரும். நிலபுலங்கள் ஓரளவு லாபம் தரும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவைப்படும். பொருள் வரவு கூடும் என்றாலும் செலவுகளும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு மறதியால் அவதி ஏற்படும். கண், கால்,பாதம் சம்பந்தமான உபாதைகள் உண்டாகும். புதனின் பலம் குறைந்திருப்பதால் வியாபாரத்தில் அதிக கவனம் தேவை.

**விருச்சிகம்** : விசாகம் 4ஆம் பாதம், அனுசம், கேட்டை



உங்கள் ராசிக்கு 2 இல் புதனும்,சுக்கிரனும் 3 இல் செவ்வாயும் 10 இல் ராகுவும் 11 இல் குருவும் உலவுவது சிறப்பாகும். பேச்சில் இனிமையும் திறமையும் கூடும். எடுத்த காரியங்களில் வெற்றி கிட்டும். பிரச்சினைகள் எளிதில் தீரும். மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் அதிகமாகும். இயந்திரப் பணிகள் இலாபம் தரும். கலைஞர்களது எண்ணம் ஈடேறும். ஜன்மராசியில் சூரியனும் சனியும் 4 இல் கேதுவும் இருப்பதால் உடல் நலம் பாதிக்கும்.

**தனுசு** : மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்



குரு பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ஜன்மராசியில் சுக்கிரனும் 3 இல் கேதுவும் உலவுவது நல்லது. கலைஞர்கள் வளர்ச்சி காண்பார்கள். மனத்தில் துணிவு கூடும். ஆன்மீக, அறநிலையப் பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். தியானம்,யோகா ஆகியவற்றில் ஈடுபாடு உண்டாகும். குடும்பநலம் கவனிக்கப்படவேண்டிவரும். குடும்பத்தைவிட்டுச் சிலர் பிரிந்திருக்க வேண்டிவரும். பேச்சில் கடும்போக்கைத் தவிர்க்கவும். பொருள் வரவு கூடும் என்றாலும் வீண் செலவுகளைத் தவிர்ப்பது அவசியம்.

**மகரம்** : உத்திராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், அவிட்டம் 1, 2ஆம் பாதங்கள்



சனிபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 9 இல் குருவும் 11-ல் சூரியனும் சனியும் 12 இல் சுக்கிரனும் உலவுவது சிறப்பாகும். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உருவாகும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். நல்ல இடத்துக்கு மாறுதல் கிடைக்கும். உத்தியோகத்தர்களது நிலை உயரும். மருத்துவம்,ரசாயனம்,விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். புதன் 12 இல் இருப்பதால் வியாபாரத்தில் அதிக கவனம் எடுத்தால் நஷ்டப்படாமல் தப்பலாம்.

**கும்பம்** : அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், புரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்



சனிபகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 10 இல் சூரியன்,சனி ஆகியோரும், 11 இல் புதனும் சுக்கிரனும் உலவுவது நல்லது. நிர்வாகத் திறமையும், அறிவாற்றலும் தோற்றப் பொலிவும் கூடும் நேரமிது. முக்கிய பொறுப்புக்களும் பதவிகளும் கிடைக்கும். முக்கியமானவர்களின் சந்திப்பும் அதனால் அனுகூலமும் உண்டாகும். பொதுநலப் பணிகளில் ஆர்வம் கூடும். கணிதம், எழுத்து, பத்திரிகை, தரகுத்துறைகள் ஆக்கம் தரும். கலைத்துறையினருக்கு வரவேற்பு கூடும். தந்தையால் நலம் உண்டாகும்.

**மீனம்** : புரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி



குரு பகவான் வீட்டை இராசியாய்க் கொண்ட அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 6 இல் ராகுவும் 7இல் குருவும் 10 இல் புதனும் 11 இல் செவ்வாயும் உலவுவது சிறப்பாகும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். நண்பர்களும் உறவினர்களும் உதவுவார்கள். பணப் புழக்கம் அதிகரிக்கும். செந்நிறப் பொருள்கள் லாபம் தரும். பொறியியல், சட்டம் போன்ற துறை களைச் சேர்ந்தவர்கள் சாதனை பல ஆற்றுவார்கள். நிலபுலங்களின் சேர்க்கை நிகழும். மனதில் தெளிவும் தன்னம்பிக்கையும் அதிகமாகும்.

## பூமியில் மனிதர்கள் உருவாக்கிய பொருள்கள் 30 லட்சம் கோடி தொன்

பூமியில் தான் வாழ்வதற்காக மனிதன் உருவாக்கிய சகல பொருள்களின் மொத்த அளவு 30 லட்சம் கோடி தொன் என்று விஞ்ஞானிகள் கணக்கிட்டுள் ளனர்.

லீஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மார்க் வில்லியம்ஸ் தலைமையில் அமைந்த சர்வதேச விஞ் ஞானிகள் குழு இதனைத் தெரிவித்துள் ளது. இதுதொடர்பில் அவர் கூறியவை வருமாறு;

''பூமியில் மனிதர்கள் உருவாக்கிய பொருள்கள் அனைத்தையும் ஒரே சொல்லில் ''டெக்னோஸ் பியர்' என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இந்த டெக்னோஸ் பியரில் வீடுகள், ஆலைகள், கணினி,கைத்தொலைபேசி, வாகனம், கழிவுப் பொருள்கள் வரை மனிதன் உருவாக்கிய எல்லாமே அடங்கும். இவற்றின் தற்போதைய மொத்த எடை சுமார் 30 லட்சம் கோடி தொன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சராசரியாக, பூமியின் ஒவ்வொரு சதுர மீற்றர் மேல்பரப்புக்கு 50 கிலோ எடை கொண்ட பொருளை மனிதன் உரு வாக்கியுள்ளான். இன்னும் தொடர்ந்து உண்டாக்கி வருவதால் இது மேலும் அதிகரிக்கவே செய்யும்.

ஆனால் இயற்கையில் உள்ள இலை, மரம் போன்ற பொருள்கள் தாமாக மறுசுழற்சி செய்து கொள்வது போல, மனிதன் மறுசுழற்சி செய்வதில் மிகவும் பின்தங்கியுள்ளான்''- என்றார் அவர். இதுதொடர்பான ஆய்வு முடிவுகளை 'ஆந்த்ரோ போசீன்' ஆய்வு இதழ் வெளியிட்டுள்ளது.

## உயிர்வாழக் காரணம் பக்ரீரியாக்கள் தான்



அதிகமான உயிரினங்களின் வாழ்வுக்கு ஆதாரமாக ஒட்சிசன் வாயு காணப்படுகின்றது.

இவ்வர்யு தாவரங்களின் ஒளித்தொகுப்பு மூலமே சூழலுக் குக் கிடைக்கின்றது என்றே எம்மில் அனேகமானவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் அதையும்தாண்டி அல்காக்கள், பக்ரீரியாக்கள் போன்ற வேறு சில உயிரினங்களும் ஒட் சிசன் வாயு உற்பத் திக்குக் காரணமாக அமைகின்றன.

இவ்வாறிருக்கையில் பூகோளத்தில் ஒட்சிசன் வாயு அதிகரிப்புக்குக் கார ணம் என்று கருதப்படும் பக்ரீரியா இனம் ஒன்றின் படிமங்கள் கண்டு பிடிக் கப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்காவின் இரு வெவ் வேறு இடங்களில் இவை கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. இவை 2.5 பில்லியன் வருடங்களுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் பக்ரீரியாக்கள் தோன்றும் முன்னர் பூமியில் ஒட்சிசனின் அளவு தற்போது உள்ளதை விடவும் ஆயிரத்தில் ஒரு பங்கு இருந்ததாகவும், ஆனால் இவற்றின் தோற்றத்தின் பின்னர் ஒட்சி சன் அளவு அதிகரித்ததாகவும் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# குழந்தை பார்த்தால் முடி கொட்டுமா?

பிறந்த குழந்தை தாயின் முகம் பார்த்துச் சிரித்தால் தாயின் முடி கொட்டும் என்பது சரியா?

பிறந்த குழந்தை தாயின் முகம் பார்த்துச் சிரித்தால் தாயின் முடி கொட்டும் என்பது பழம் நம்பிக்கை. இன்னும் கூட சில கிராமங்களில் இந்நம்பிக்கை உள்ளது. ஆனால், இந்த நம்பிக்கை உண்மைதான்.

பெண்கள் கருவுற்றிருக்கும் காலத்தில் ஹோர்மோன் செயல் பாட்டால் உடற்பாகங்களைப் போலவே அவர்களது தலைமுடியும் சற்றுக் கூடுதலாகவே வளர்கிறது. இது குழந்தை பிறப்புக்குப் பின்பும் மூன்று மாத காலத்துக்குத் தொடரும்.

குழந்தை பெற்ற பெண்களுக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகு ஹார்மோன் செயல்பாடுகள் குறைந்து பழைய நிலைக்கு மாறும். இந்தக் காலத்தில் அவர்களுக்கு தலை முடி இயற்கையாகவே சிறிது உதிரத் தொடங்கும்.

குழந்தை பிறந்து, மூன்று மாத காலத்துக்குப் பிறகுதான் சிரிக்கத் தொடங்கும். இதைக் கணக்கில் கொண்டுதான் மேற்கண்ட நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

பிறந்த குழந்தை தாயின் முகத்தைப் பார்த்துச் சிரித்தாலும் சிரிக்கா விட்டாலும் மூன்றுமாதத்துக்குப் பின்பு முடி கொட்டும் என்பதே உண்மை.

# உணவுக்கு மட்டுமா உப்பு...?

உப்பை உணவுக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டுமா வேறு சில தேவைகளுக்கும் உப்பு பயன்படுகிறது.

அரிசியில் சிறிது உப்புத் தூளைக் கலந்து வைத்து விட்டால், எத்தனை நாள்கள் சேமித்து வைத்திருந்தாலும் அது புதிதாகவும் புழுப் பூச்சி பிடிக் காமலும் இருக்கும்.

இரும்புப் பொருள்களில் துருப் பிடித்திருந்தால் அவற்றின் மேல் உப்பு கொண்டு தேய்த்தால் பளபளப்பாகிவிடும்.

பட்டுத் துணிகளைத் துவைக்கும் போது நீரில் சிறிது உப்பைக் கலந்து கொண்டு அதில் துணிகளை அலச வேண்டும். பட்டுத்துணியின் மிருதுத் தன்மையும் நிறமும் மாறாமல் இருக்கும்.

வீட்டில் தரையைக் கழுவும் போது சிறிது உப்பை நீரில் கலந்து கழு வினால், தரை காய்ந்த பின்பு ஈக்கள் தரையில் மொய்க்காது.

சுத்தமான நெய்யில் ஒரு சிறு கரண்டி அளவு உப்பைப் போட்டு முழுவதையும் சூடு காட்டி வைத்தால் நெய் அதிக நாள்கள் கெட்டுப் போகா மல் இருக்கும்.

சமையல் பாத்திரங்களில் வெங்காய வாசனை போகாமல் இருந்தால் உப்பு கலந்த சுடுநீரில் அப்பாத்திரங்களைக் கழுவினால் அந்த வாசனை போய் விடும்.

நீண்ட பயணத்தால் கால் களைப்பு ஏற்பட்டு இருந்தால் சுடுநீரில் சிறிது உப்பைப் போட்டு அந்த உப்புச் வெதுவெதுப்பான சுடுநீரில் கால் பாதங்களைச் சிறிது நேரம் வைத்து இருங்கள். கால் களைப்பு காணாமல் போய் விடும்.

தலை முடி உதிர்ந்து கொண்டிருக் கிறதா? நீரில் சிறிது உப்புக் கலந்து அந்த நீரில் தலைமுடியை அலசுங்கள். தலைமுடி உதிர்வது நிற்கும்.

துணியில் மைக்கறை அல்லது இரத்தக்கறை இருந்தால் அந்தக் கறையின் மேல் உப்பைத் தேய்த்துச் சுடுநீரில் அலசுங்கள் கறை அகன்று விடும்.

கடுகு எண்ணெய்யில் உப்பைக் கலந்து பல் துலக்கினால் பல் உறுதி பெறும்.

குக்கரின் அடியில் படிந்திருக்கும் கரையைப் போக்க, வெறும் குக்கரை அடுப்பில் வைத்துச் சூடேற்றுங்கள். பின்னர் உப்புத் தூளை உள்ளே போட்டு சிறிது நேரத்தில் இறக்கி அடிப் பாகத்தைச் சுத்தம் செய்தால் கரை போய்விடும்.

“அரிசியில் சிறிது உப்புத் தூளைக் கலந்து வைத்து விட்டால், எத்தனை நாள்கள் சேமித்து வைத்திருந்தாலும் அது புதிதாகவும் புழுப் பூச்சி பிடிக்காமலும் இருக்கும்.”



# தாமதமான பேச்சு!



முன்னதாகப் பல் முளைக்கும் குழந்தைகள் தாமதமாகப் பேசும் என்பது சரியா?

முன்னதாகப் பல் முளைக்கும் குழந்தைகள் தாம தமாகப் பேசும் என்கிற நம்பிக்கை நம் நாட்டிலுள்ளது.

குழந்தையின் மழலைப் பேச்சைக் கேட்க வேண்டும் என்கிற ஆர்வம் அந்தக் குழந்தை வீட்டாருக்கு மட்டுமல்ல. அயல் வீட்டாருக்கும் உண்டு.

சில குழந்தைகளுக்கு முன்னதாகப் பல் முளைக்கும். சில குழந்தைகளுக்கு தாமதமாகப் பல் முளைக்கும். முன்னதாகப் பல் முளைக்கும் குழந்தைகள் தாமதமாகவே பேசுகின்றன.

**இதற்குக் காரணமென்ன?**

பேசுவதற்குப் பயன்படும் முக்கிய உறுப்பு நாக்கு. முன்னதாகப் பல் முளைத்து பற்கள் கூடும் போது பேச முற்படும் குழந்தையின் நாவுக்குப் புதிதாக முளைத்த பற்களால் சில தடைகள் ஏற்படுகின்றன.

இதனால்தான் குழந்தைகள் தாமதமாகவே பேசுகின்றன.

# விருந்தினர் வருகை..

காகம் கத்தினால் விருந்தினர்கள் வருவார்கள் என்கிற நம்பிக்கை இந்து சமயத்தினரிடையே உள்ளது. இது உண்மையா?

காகங்களை முன்னோர்களாகக் கருதி அவை களுக்கு உணவு படைக்கும் வழக்கம் இந்து சமயத் தினரிடையே ஒரு வழக்கமாக இருக்கிறது. மேலும் காகம் கத்தும் திசைக்குக் கூட முக்கியத்துவமும் அளிக்கின்றனர்.

காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என்பது உண்மையல்ல. விருந்தினர் வந்தால் காகம் கத்தும் என்பதன் உருமாற்றமே இந்தச் செய்தி.

விருந்தினர் வந்தால் நிறைய உணவு வகைகள் தயாரிப்பார்கள். இப்படித் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் மிச்சமிருந்தால் அவற்றைக் காகங்களுக்கு அளிக்கும் வழக்கம் இருந்தது. இதனால் விருந்து கழிந்தால் காகம் கத்தும் என்று சொல்லப்பட்டது.

காலப்போக்கில் காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என்கிற நிலை மாறிப் போய்விட்டது என் பது தான் இங்கு உண்மை.




காகம் கத்தினால் விருந்தினர் வருவர் என்பது உண்மையல்ல. விருந்தினர் வந்தால் காகம் கத்தும் என்பதன் உருமாற் றமே இந்தச் செய்தி.

பொன்.வேணு கிருஷ்ணா

20

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”





**மக்களின் அதிருப்தியும் நம்பிக்கையும்**

கியூபாவில் மேலும் பல மாறுதல்களைக் கொண்டு வந்தார் காஸ்ட்ரோ. கியூபாவின் வணிகத்தில் இணைந்திருந்த அமெரிக்காவின் பங்கை ஒட்டு மொத்தமாகக் கழற்றிவிட்டார். அமெரிக்கா கொதித்தது. கியூபாவுடனான உறவை முழுவதுமாகத் துண்டித்துக் கொண்டது. அமெரிக்கர்களும் கியூபாவை வெறுக்கத் தொடங்கினர்.

‘ஏழைகளின் சொர்க்க பூமியாக’ விளங்கிய கியூபா பெரும் சிக்கலில் திணறத் தொடங்கியது. அரசு அளிக்கும் ரேஷன் பொருள்களை வாங்க மூச்சு முட்டும் கூட்டத்தில் தினந்தோறும் நின்று வாங்கிக் கொண்டு, தள்ளாடியபடி திரும்பினர். பல குடும்பங்கள் தங்கள் ஷூக்கள், அலுமாரிகள் போன்றவற்றை எல்லாம் கூட விற்று குச்சிக் கிழங்கு வாங்கித் தின்று உயிரைக் கையில் பிடித்துக் கொள்ளத் தொடங்கினர்.

‘என்ன செய்ய? எல்லாவற்றையும் அவர் ‘கண்ட்ரோல்’ செய்கிறார்’ என்று சொல்லித் தாடியை உருவுவதுபோல சைகையிலேயே காஸ்ட்ரோவை மனத் தாங்கலுடன் குற்றம்சாட்டத் தொடங்கினர் மக்கள். தொழிற்சாலைகள் மூடப்பட்டன. இயந்திரங்களை இயக்கவைக்க எரிபொருள் இல்லை. வாங்கவோ, சரியாக விநியோகிக்கவோ வழியில்லாமல் விளைந்த பயிர்கள் எல்லாம் வயல்களிலேயே வாடத் தொடங்கின.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காஸ்ட்ரோ ஒரு முக்கிய காரணம் என்ற கடும் விமர்சனத்தை முன்வைத்தாலும் அந்தச் சரிவிலிருந்து கியூபாவைக் கடைத்தேற்றவும் அவர் ஒருவரால்தான் முடியும் என்று மக்கள் நம்பினார்கள்.

**வளைந்து கொடுக்கத் தொடங்கிய காஸ்ட்ரோ**

பிடல் காஸ்ட்ரோ நாட்டின் நிலைமையைப் புரிந்து கொண்டு,தான் அதுவரை நினைத்துக் கூடப் பார்த்திராத பல விடயங்களில் வளைந்து கொடுக்கத் தொடங்கினார். ஸ்பெயினைச் சேர்ந்தவர்கள் கியூபாவில் ஹோட்டல்கள் கட்ட அனுமதி அளித்தார்.

கனடா மற்றும் ஐரோப்பிய நிறுவனங்களுக்குச் சில கனிமங்களை எடுத்துக் கொள்ள அனுமதித்தார். ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றுடன் வணிகத்தில் ஈடுபட்டார். முதல் முறையாக அங்கு வருமானவரி அறிமுகமானது.

சோவியத் யூனியனின் மானியங்கள் நின்று போனதில் கியூபாவில் உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட, நிலைமை மேலும் மோசம் அடைந்தது. இந்த நிலையில் அமெரிக்கா உதவ முன்வந்தது. அதாவது அது கியூபா மீது விதித்திருந்த பொருளாதாரத் தடையை நீக்கிக் கொள்ளவில்லை. ஆனால் உணவு, மருந்து போன்றவற்றை நன்கொடையாக அளிப்பதாகச் சொன்னது. அதை ஏற்றுக் கொள்ள கியூபாவின் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. 1993 வரை இந்த மறுப்பு தொடர்ந்தது.

ரஷ்யாவுக்குப் பிறகு கியூபாவுக்கு ஆதரவான நாடுகளாக சீனா, வெனிசுவேலா, பொலிவியா ஆகியவை ஓரளவு விளங்கின. முக்கியமாக வெனிசுவேலாவும், பொலிவியாவும் பெட்ரோல் விடயத்தில் கியூபாவுக்குக் கை கொடுத்தன.

ஒரு கட்டத்தில் காஸ்ட்ரோ தன் அதிபர் பதவியை ராஜினாமாச் செய்தார். இதற்கு ஒரு முக்கிய காரணம் அவரது உடல் நலம். ஒருவித செரிமான நோய் எனலாம். பெருங்குடலின் உட்பகுதி தொற்றுகளால் பாதிக்கப்பட்டு அங்கே சிறு சிறு பைகள் போன்ற அமைப்புகள் உருவாகிவிட்டிருந்தன. இதற்காக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார் காஸ்ட்ரோ. இந்த அறுவை சிகிச்சை 2006இல் நடைபெற்றது. இதைச் செய்து கொள்வதற்கு முன் தனது அதிபர் பதவியை ராஜினாமாச் செய்து அந்தக் கடமைகளை தம்பி ரவுல் காஸ்ட்ரோவிடம் ஒப்படைத்தார்.

உலகெங்கும் பரபரப்புக் கூடியது.



காஸ்ட்ரோவின் உயிருக்கே ஆபத்து என்று சிலர் கூறினார்கள். வேறு சிலரோ ‘உடல்நலம் சரியில்லை என்பதே பொய், வேறு ஏதோ காரணத்துக்காக இவர் ராஜினாமாச் செய்கிறார்’ என்றார்கள். தவிர ‘காஸ்ட்ரோ கடத்தப்பட்டார்’ என்ற வதந்தியும் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. இதைத் தவிர்ப்பதற்காக வானொலியில் அவர் உரையாற்ற நேர்ந்தது.

பதவியில் இல்லாவிட்டாலும் பல அரசியல் முடிவுகளைக் காஸ்ட்ரோ எடுத்தார். அவர் விரல் அசைவில்தான் கியூபா அரசு என்ற நிலை தொடர்ந்தது. 2007 பெப்ரவரியில் காஸ்ட்ரோவின் உடல்நலம் முன்னேறி வருகிறது என்ற அறிவிப்பு வந்தது.

அறுவைச் சிகிச்சை நடைபெற்று ஒருவருடம் கூட முடியாத நிலையில், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசினார். ஹவானாவில் நடைபெற்ற கூட்டுச் சேரா இயக்க மாநாட்டில் கலந்து கொண்டார்.

அமெரிக்க அரசு தொடர்ந்து காஸ்ட்ரோவைக் கடுமையாக விமர்சித்து வந்தது. ஒரு கட்டத்தில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ‘ஒரு நாள் இறைவன், காஸ்ட்ரோவை எடுத்துச் செல்வார்’ என்றார். இவர் எப்போதுதான் சாகப் போகிறாரோ என்கிற தொனி கொண்ட வாக்கியம்!

கடவுள் நம்பிக்கை இல்லாத, காஸ்ட்ரோ இதற்கு அளித்த பதில் சுவாரசியமானது. இப்போது புரிகிறது, தானே என்னை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அமெரிக்க அரசின் அத்தனை கொலை முயற்சிகளிலிருந்தும் என்னைக் கடவுள் காப்பாற்றி இருக்கிறார் என்றார்.

600இற்கும் அதிகம் என்றது காஸ்ட்ரோ தரப்பு. அமெரிக்கா மறுத்தது. விஷயம் சூடு பிடிக்கவே அமெரிக்கப் நாடாளுமன்றம் இதற்காக ஒரு குழுவை நியமித்தது. பிராங்க் சர்ச் என்பவர் இந்தக் குழுவின் தலைவர் என்பதால், இந்தக் குழு சர்ச் குழு என்றே அழைக்கப்பட்டது. இதன் கண்டுபிடிப்புகள் அமெரிக்காவுக்கு அப்படி ஒன்றும் ஆதரவானதாக இல்லை.

திட்டமிட்ட படுகொலைகளுக்கு பின்னணியாக இருக்கும் உயரதிகாரிகளை உளவுத்துறையின் கீழ் மட்ட ஊழியர்கள் சிறிதும் காட்டிக் கொடுக்காமல் இருந்தனர். அவர்களைக் குற்றச்சாட்டுகளிலிருந்து நழுவச் செய்யும் வகையிலும் செயற்பட்டார்கள் என்றது குழுவின் முடிவு. நிறைய சங்கேத வார்த்தைகள் நிறைந்த தகவல் தொடர்புகள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன என்றும் கூறியது அந்த அறிக்கை.

1960களிலிருந்து 1965 வரை காஸ்ட்ரோவை தீர்த்துக் கட்ட அமெரிக்க உளவுத்துறை எட்டு முயற்சிகளைச் செய்தது என்று அறிவித்தது சர்ச் குழு. இதுவே பேரதிர்ச்சியை உண்டாக்கியது. காஸ்ட்ரோவை பாதுகாக்க நியமிக்கப்பட்டிருந்த சிறப்பு அதிகாரியான ஃபேபியன் எஸ்.கலண்டே என்பவர் அமெரிக்க உளவுத்துறை, காஸ்ட்ரோவை கொலை செய்ய 638 முறை முயன்றது என்றார். கியூபா அரசைக் கவிழ்க்கத் திட்டமிட்ட இந்தக் கொலை முயற்சிகளுக்கு ‘ஒபரேஷன் மங்கூஸ்’ என்றும் பெயரிடப்பட்டிருந்ததாம்.

கொலை முயற்சி என்றால் துப்பாக்கியோ, கத்தியோ இல்லை. காஸ்ட்ரோ பயன்படுத்திய சுருட்டில் விஷம் கலந்தது ஒருவகை. அவர் ஸ்கூபா டைவிங் எனப்படும் விளையாட்டில் ஈடுபடும் பழக்கம் கொண்டவர். இதற்கான அவர் உடையில் விஷக் கிருமிகள் நிரப்பப்பட்டன. அவரது போல்பொயின்ட் பேனாவில் விஷம் நிரம்பிய ஓர் ஊசி இணைக்கப்பட்டது.

பயன்படுத்தும்போது கிட்டத்தட்ட வலியே இல்லாமல் இந்த ஊசி அவர் விரலைக் குத்த, விஷம் உடலில் கலந்து விடும். ஒரு கட்டத்தில் அருங்காட்சியகம் ஒன்றுக்கு அவர் செல்லும்போது அவர் காருக்கு வெடி வைக்கும் திட்டமும் தொடங்கப்பட்டது. பலத்த பாதுகாப்பு எச்சரிக்கைகள் காரணமாக இவையெல்லாம் கண்டு பிடிக்கப்பட்டு, காஸ்ட்ரோவின் உயிர் காப்பாற்றப்பட்டது.

**காஸ்ட்ரோவின் காதலி**

அடுத்ததாக அமெரிக்க உளவுத்துறை தன் கைக்குள் போட்டுக் கொண்டது மரிடா லொரென்ஸ் என்பவரை அவர் காஸ்ட்ரோவின் (முன்னாள்) காதலி!

பிடல் காஸ்ட்ரோவின் முன்னாள் காதலி மரிடா லோரென்ஸ் என்பவரையும் தன் வலையில் விழவைத்தது அமெரிக்க உளவுத்துறை. குளிர்காலத்துக்கான க்ரீமை உடலில் தடவிக் கொள்வது காஸ்ட்ரோவின் வழக்கம். அதில் விஷ மருந்தைக் கலந்து அதை காஸ்ட்ரோவின் அறைக்குள் வைத்தார் மரிடா.

ஆனால் இந்தத் திட்டம் கசிந்துவிட, காஸ்ட்ரோ மரிடாவை அழைத்து அவர் கையில் ஒரு துப்பாக்கியைக் கொடுத்து. ‘இப்படியெல்லாம் செய்வதை விட நீ என்னை நேரடியாகக் கொன்றுவிடு’ என்று கூற, மரிடா உடைந்து அழுதாராம்.

ஆக அமெரிக்காவுக்குக் கடும் ஏமாற்றம். உயிரைத்தான் எடுக்க முடியவில்லை, வேறுவிதத்திலாவது காஸ்ட்ரோவை நிலைகுலைய வைக்கலாம் என்பதற்காக அவரது பிரபல தாடியை அழித்திடும் வகையில் தாலியம் என்ற இரசாயனப் பொருள் அடங்கிய உணவுப் பொருளை வஞ்சகமாக அவரை உண்ண வைத்தார்கள்.

ஊஹூம், நடக்கவில்லை. அவர் வானொலியில் பேச வரும்போது அங்கு போதைப் பொருளை ஆவி வடிவில் பரப்பி, அவர் பேச்சு குழறலாக வெளிப்படச் செய்தார்கள்.

**காஸ்ட்ரோவைக் கொல்ல 638 முயற்சிகள்**

ஒரு கட்டத்தில் ‘கொலை முயற்சிகளிலிருந்து அதிக முறை தப்பிப்பது என்பது ஓர் ஒலிம்பிக் விளையாட்டாக இருந்திருக்குமானால், அதில் எனக்குதான் தங்கப்பதக்கம் கிடைத்திருக்கும்’ - என்றார் காஸ்ட்ரோ.

இந்தக் கொலை முயற்சிகளெல்லாம் ‘‘காஸ்ட்ரோவைக் கொல்ல 638 முயற்சிகள்’’ என்ற பெயரில் சனல் 1 என்ற பிரிட்டிஷ் தொலைக்காட்சியில் தொடராக வெளியிடப்பட்டது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு அருகில் நில அதிர்வு மண்டலம்




இலங்கைக்குத் தெற்கே நீண்ட கடல் எல்லையில் இந்து - ஆஸ்திரேலிய பகுதிகள் இரண்டு பிளவடைந்து வருகின்றன என புவியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அது எதிர்காலத்தில் இந்து - ஆஸ்திரேலியத் தட்டு மற்றும் இந்து - இலங்கைத் தட்டு என அடையாளப் படுத்தப் படும்.

இந்துமா சமுத்திரத்தின் முத்தாகக் கருதப்படும் இலங்கை, இயற்கை பேரழிவுகள் குறைவான நாடாக கடந்த காலங்களில் கூறப்பட்ட போதிலும், எதிர்காலத்தில் அவ்வாறான சாத்தியங்கள் குறைவு என்று புவியியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையின் நிலப்பரப்பு இரண்டாகப் பிளந்து தரைமட்டமாவதோடு பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக பூமித் தட்டுக்களின் எல்லைக்கு அப்பாலும், இந்திய பூமித் தட்டுக்களுக்கு மத்தியில் அமைந்துள்ள இலங்கையை அண்மித்த பகுதியிலும் புதிய பூமித் தட்டு உருவாகியுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

இதனை இலகு மொழியில் கூறினால், இலங்கைக்கு அருகில் இந்தியக் கண்டங்களின் பூமித் தட்டு ஒரு பகுதி இரண்டாகப் பிரிந்து காணப்படுகின்றமை இதற்குக் காரணமாகும்.



**அழிவுகளுக்கு வாய்ப்புகள் அதிகம் என்று எச்சரிக்கின்றனர் புவியியலாளர்கள்**

81 வருடங்களுக்குப் பின்னர் நேபாளத்தில் ஏற்பட்ட பூமி அதிர்வில் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். அதன் பின்னர் தொடர்ந்து பல பகுதிகளில் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது எந்த இடங்களில் நில அதிர்வுகள் ஏற்படும் என ஆராய்வதற்குப் பதிலாக அடுத்த நில அதிர்வில் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பிலேயே புவியியலாளர்கள் அவதானம் செலுத்தியுள்ளனர்.

அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையத்தின் தரவுகளுக்கமைய 1905ஆம் ஆண்டில் இருந்து 2015 ஆம் ஆண்டு வரையிலான 110 வருட காலப்பகுதில் தெற்காசியாவில் நில அதிர்வில் மாத்திரம் 3 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தியா, நேபாளம், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மாத்திரமன்றி, நில அதிர்வில் பாதுகாப்பான நாடாக கருதப்படும் இலங்கையும் நில அதிர்வில் பாதிக்கப்பட்டுள்ளது. நில அதிர்வின் முடிவே 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியாகும்.

இந்தியா உட்பட தெற்காசியாவின் மக்கள் தொகை அதிகரிப்பும், நகரமயமாக்கலும், நில அதிர்வின் போது ஏற்படும் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்புக்குக் காரணமாகின்றன. எதிர்காலத்தில் நில அதிர்வில் உயிரிழக்கும் எண்ணிக்கையை குறைத்துக் கொள்வதற்காக நில அதிர்வு ஏற்படுவதற்கு முன்னரே அறிந்து கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தோல்வியடைந்துள்ளன.

பூமி உருவாகிய நாளில் இருந்து இதுவரையில் பில்லியன் கணக்கிலான ஆண்டுகள் முழுவதும் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

உலகில் எவ்வளவு தொழில்நுட்ப உபகரணங்கள் உருவாகியுள்ள போதிலும் நில அதிர்வு ஏற்பட்டு 20 நொடியாகும் வரையில் இது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்கும் தொழில்நுட்பம் ஒன்று இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஒரு நிமிடம் கடந்த பின்னர் நில அதிர்வு தொடர்பில் உலகுக்கு அறிவிக்கும் போதிலும் அதில் சுனாமி ஏற்படுமா இல்லையா என்பது தொடர்பில் அறிவிப்பதற்கு மேலும் நேரம் தேவைப்படுகின்றது.

இதன் காரணமாகத் தற்போது நில அதிர்வொன்று ஏற்பட்டால் அதனை சுற்றியுள்ள நாடுகளுக்கு நிச்சயமாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது.

இலங்கையின் கடந்த காலத்தைக் கருத்தில்கொள்ளும் பல சந்தர்ப்பங்களில் நில அதிர்வுகள் மற்றும் சுனாமி நிலைமை தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் 1615 ஏப்ரல் மாதம் கொழும்பில் ஏற்பட்ட நில அதிர்வின் காரணமாக 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அது இலங்கையில் ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பான மிகப் பழமையான அறிக்கையாகும்.

பெரியளவில் கட்டடங்கள் இல்லாத அந்தக் காலப் பகுதியில் 2000 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்றால் அது மிகப்பெரிய நில அதிர்வாகும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

1883 ஆம் ஆண்டில் கெக்ட்ரோ தீவில் எரிமலை ஒன்று வெடித்தமையால் திருகோணமலை மற்றும் காலித் துறைமுகத்தில் சுனாமி ஒன்றைக் காண முடிந்தது என அந்தக் காலப் பகுதியில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதேவேளை, கிரிந்த, திஸ்ஸமஹராமை, லுனுகம்வெஹர, அனுராதபுரம், கெகிராவ, மீரிகமம், மினுவங்கொடை ஆகிய பகுதிகளில் இடையிடையே நில அதிர்வுகள் பதிவாகியுள்ள போதிலும், அவை அந்த அளவுக்குப் பெரிய அதிர்வுகள் அல்ல. இலங்கை, உலகின் பிரதான நிலத்தட்டு எல்லையில் குறிப்பிடத்தக்க தூரத்தில் அமைந்துள்ளமையே அதற்குக் காரணமாகும்.

இலங்கை இந்துமா சமுத்திரம் - ஆஸ்திரேலிய பூமித் தட்டுக்களில் அமைந்துள்ளது. இந்தத் தட்டைச் சுற்றி ஆபிரிக்க பூமித் தட்டு, உயரத்தில் இமாலய பூமித் தட்டு, தெற்கில் அண்டார்டிகா பூமித் தட்டு அமைந்துள்ளது.

இந்தத் தட்டுகளின் எல்லையை கருத்தில் கொள்ளும் போது இலங்கைக்கு நில அதிர்வு ஏற்படும் எல்லை அமைந்துள்ளது. அதற்கமைய 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி சுனாமி ஒன்றுக்கு முகம் கொடுக்கும் நிலை இலங்கைக்கு ஏற்பட்டது.

இலங்கைக்குத் தெற்கே நீண்ட கடல் எல்லையில் இந்து - ஆஸ்திரேலிய பகுதிகள் இரண்டு பிளவடைந்து வருகின்றன என புவியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அது எதிர்காலத்தில் இந்து - ஆஸ்திரேலியத் தட்டு மற்றும் இந்து - இலங்கைத் தட்டு என அடையாளப்படுத்தப்படும்.

இந்தப் பிரிவு இலங்கைக்குத் தெற்கில் 500 மற்றும் 1000 கிலோ மீற்றர் தூரத்தில் இடம்பெற்று வருகின்றதென்பது ஆய்வாளர்களின் கருத்தாகியுள்ளது. அந்த இடத்தைப் பார்க்கும் போது முதலில் சந்திக்கும் இடம் தெற்கு மற்றும் கிழக்கு கடற்கரையிலாகும்.

புதிதாக உருவாகி வரும் நிலத்தட்டு உள்ள இடம் நில அதிர்வு மற்றும் அதில் ஏற்படும் தாக்கத்தைக் கருதும் போது அருகிலேயே உள்ளது.

இலங்கைக்கு அருகில் உள்ள பூமித்தட்டு 5 கோடி வருடங்களுக்கு முன்னர் இருந்தே பிளவடைய ஆரம்பித்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் இது முழுமையாக உடைவதற்கு இன்னும் ஒரு கோடி வருடங்கள் செல்லும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போதுவரையில் நிலையற்ற புவியியல் சார் மண்டலமாகியுள்ள இந்தப் புதிய பிளவு மண்டலத்தின் காரணமாக இலங்கையின் மத்திய மலைநாட்டு பகுதியில் மண்சரிவுகள் அதிகமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. 5 ரிச்டர் அளவில் இலங்கைக்கு நில அதிர்வு ஏற்பட்டால் அது இந்த நாட்டில் உள்ள கட்டடங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் கட்டடங்கள் நிர்மாணிக்கும் போது அது நில அதிர்வுகளைத் தாக்குப்பிடிக்கும் அளவுக்கு நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக ஏற்படக்கூடிய் பாதிப்பு எவ்வளவு என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

ரிச்டர் 7இற்கு அதிகமான நில நடுக்கம் ஒன்று இலங்கைக்கு அருகில் உள்ள கடலில் திடீரென ஏற்பட்டால் அதனால் ஏற்படக்கூடிய சுனாமியின் பாதிப்பு மதிப்பிட முடியாத ஒன்றாகும்.

எப்படியிருப்பினும் இலங்கையில் நில அதிர்வொன்று ஏற்பட்டால் அதிக பாதிப்பு மலையகத்துக்கே ஏற்படும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஏற்படக்கூடிய நில அதிர்வில் நொடிப்பொழுதுகளில் கட்டடங்கள் தரைமட்டமாகக் கூடும்.

இந்தப் பாதிப்பில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மக்கள் ஆயத்தமாக வேண்டும். இலங்கைக்கு அருகில் புதிய நில அதிர்வு மண்டலம் ஒன்று உருவாகியுள்ள நிலையில் நாம் அதில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு தகுதியான உடல் நிலையுடன் இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்



*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*

*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# அதிகாரத்தின் அருவ கரங்கள்

**01**

மிஷேல்பூக்கோ (Michel Foucault, 1926-1980) ஒருபிரெஞ்சு தத்துவாசிரியர். ஒரு புதுமையான சமூகச் சிந்தனையாளர். சமூக உலகத்தையும் மனித உறவுகளையும் ஒரு புதிய பரிமாணத்தில் வித்தியாசமாக நோக்கியவர். அறிவுலகங்களை அகழாய்வு செய்தவர். அவற்றின் ரிஷி மூலங்களைக் கண்டுபிடித்துக் காட்டியவர். அதிகார உறவுகளின் சிலந்தி வலைக்குள் மனித வாழ்வு சிக்குண்டு கிடப்பதை மிகவும் நுட்பமாக எடுத்து விளக்கியவர். அறிவுலகமும் அதிகார உலகமும் கூட்டுச்சேர்ந்து மனித அடக்குமுறைக்கு ஒத்துழைக்கும் தந்திரோபாயங்களைப் பிட்டுக்காட்டியவர். மேற்குலகின் அரச அதிகார நிறுவனங்களான காவற்றுறை, நீதித்துறை சிறைச்சாலைகள், நிர்வாகத்துறை, படைத்துறை ஆகியன எவ்வாறு தனிமனிதர்களைச் சமூகப் பொம்மைகளாக வனைந்து இறுக்கமான சமூகக் கட்டுப்பாட்டைப் பேணி வருகின்றன என்பதை மிகவும் ஆழமாகவும் துல்லியமாகவும் விளக்கியவர். அவர் நிறைய எழுதினார். பல துறைகள் பற்றி எழுதினார். பைத்திய வைத்தியம் பற்றியும் பாலியல் வரலாறு பற்றியும் தார்மீக தத்துவங்கள் பற்றியும் சிந்தனை உலகங்களின் படிநிலை வளர்ச்சி பற்றியும் பல்வேறு துறைகளை ஆழமாக ஆய்வு செய்து எழுதினார். அவரது எழுத்துக்கள் மேற்குலக சிந்தனைப் பாரம்பரியத்தில் என்றுமில்லாத புதிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரது எழுத்தில் புதுமையும், பார்வையில் அபாரமான கூர்மையும் இருந்தது. அதனால் அவர், பிற்கால நவீனத்துவத்தின் (Post-Modernism) பிதாமகர் எனப் போற்றப்பட்டவர்.

மிஷேல் பூக்கோவின் ஆய்வுலகம் பரந்தது. அதனை ஒரு கட்டுரையில் முழுமையாக விளக்குவது கடினம். அவரது புதுமையான சமூக தரிசனத்தைச் சுருக்கமாக விளக்கும் அறிமுகக் குறிப்பாகவே இதனை எழுதுகிறேன்.

தத்துவப் போதனாசிரியராகப் பிரெஞ்சு அறிவுலகத்தில் பிரவேசித்த பூக்கோ, ஆரம்பத்தில் மாக்ஸிய சிந்தனையால் ஈர்க்கப்பட்டார்.

ஐம்பதுகளின் முற்பகுதியில், இரண்டாம் உலகப் பெரும்போரின் இடிபாடுகளிலிருந்து விரக்தியுடன் வெளிவந்த ஐரோப்பிய இளம் பரம்பரை ஒரு புதிய யுகத்தைக் கனவு கண்டது. அநீதியும் வன்முறையும் ஒழிந்த ஒரு புதிய சமூக ஒழுங்கைத் தேடியது. அந்தத் தேடுதலில் ஈடுபட்ட இளம் அறிவு ஜீவிகளுக்கு மாக்ஸிய சிந்தனை புதிய வெளிச்சத்தைக் காட்டியது. மாற்று உலகத்துக்காக ஏங்கிய பூக்கோ மாக்ஸியத்தைத் தழுவினார். பிரெஞ்சு கம்யூனிச இயக்கத்தில் இணைந்து கொண்டார். இந்த ஈடுபாடு சொற்ப காலத்துக்கே நீடித்தது.

பிரெஞ்சு கம்யூனிச இயக்கம் வைதீக மாக்ஸிய கோட்பாடுகளை இறுக்கமாகப் பற்றி நின்றது. புதிய விசாரணைகளுக்கு இடைவெளி கொடுக்க மறுத்தது. புதிய பார்வைகளை ஏற்க மறுத்தது. எல்லா உறவுகளையும், எல்லாப் புறநிலைகளையும் விளக்கும் பொதுவுண்மையாக எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் மெய்யுண்மையாக மாக்ஸியத்தை வழிபட்டது. இயற்கையினதும், வாழ்க்கையினதும், வரலாற்றினதும் மாற்ற முடியாத நியதிகளாக, விஞ்ஞான விதிகளாக, இயங்கியலை வரித்துக் கொண்டது. அந்த விதிகளின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தால், மனித வரலாறு ஒரு புதிய யுகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக எண்ணியது. இத்தகைய மரபுவாதத்தை, குருட்டுத்தனமான தத்துவ வழிபாட்டை, பூக்கோவால் ஜீரணிக்க முடியவில்லை. "மாக்ஸியம் புதிதாக சுவாசிக்க விரும்பவில்லை. அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பழைமையில் புதைந்து கிடக்கிறது" எனக் கண்டித்தார் பூக்கோ. மூன்றாண்டு கால ஈடுபாட்டுடன் கம்யூனிச இயக்கத்திலிருந்து விலகிக்கொண்டார். மாக்ஸிய தத்துவத்தைப் புதுப்பிப்பதற்கு அவர் முனையவில்லை. முற்றிலும் வித்தியாசமாக, புதிதாக அவர் சமூக உலகத்தை விசாரிக்க முனைந்தார்.

மேற்குல தத்துவாசிரியர்களில் ஜேர்மனிய சிந்தனையாளரான நீச்சேயின் எழுத்துக்கள் பூக்கோவை வெகுவாக ஆகர்ஷித்துக் கொண்டன. நீச்சேயின் படைப்புகளில் ஒரு விசித்திரமான புதுமையை அவர் கண்டார். ஏனைய தத்துவாசிரியர்கள் போன்று, கருத்துலகக் கோட்டைகளை நீச்சே கட்டியெழுப்ப விழையவில்லை. பிரபஞ்சத்தின் இரகசியம் பற்றியும் மனித வாழ்வின் அர்த்தம் பற்றியும் தேடுதல்களை நடத்தவில்லை. கடவுளையோ மனிதனையோ மையப் புள்ளியாக வைத்து வாழ்வுக்கு விளக்கம் அளிக்கவில்லை. நீச்சே எல்லாவற்றையும் எள்ளி நகையாடினார். எல்லாவற்றையும் ஈவிரக்கமின்றி விமர்சித்தார். எல்லாவற்றையும் நிராகரித்தார். அவரது எழுத்துக்கள் மேற்குலக மனிதனின் நீண்டகாலக் கனவுகளைக் கலைத்தது. கிறிஸ்தவநாகரிகத்தின் தார்மீக முகமூடிகளைக் கிழித்துக் காட்டின. நீச்சேயின் கண்டனத் திறனாய்வும் அவரது மரபு மூல (Geneological) விசாரணை முறைமையும் பூக்கோவை வெகுவாகக் கவர்ந்தன. பொய்மைகளைப் போர்த்தியவாறு, மறை பொருளாகப் புதைந்து கிடக்கும் மெய்மைகளைக் கண்டு கொள்வதற்கு மூலங்களைத் தேடும் விசாரணையே சிறந்ததாக அவருக்குத் தோன்றியது. நீச்சேயின் வழி தழுவி, வேர்களைத் தோண்டும் தனது ஆய்வு முறைமையை அகழாய்வு என வர்ணித்தார் பூக்கோ. தனது ஆய்வு முறைமை பற்றி எழுதிய நூலுக்கு அறிவின் அகழாய்வு (The Archaeology of Knowledge) எனத் தலைப்பிட்டார். அறிவுலகங்களை 'அகழாய்வு' செய்யும் நுட்பமான ஆய்வு முறைமையை அறிமுகப்படுத்தியதால் அவரை 'சிந்தனைப் பாரம்பரியங்களின் வரலாற்றாசிரியர்' என அழைப்பதுண்டு.



மிஷேல் பூக்கோ

> அறிவுலகத்தை சமூக வாழ்வியக்கத்தின் ஆழத்தில் அலசிப் பார்த்த பூக்கோவுக்கு ஒரு விசித்திரமான உண்மை புலப்பட்டது. அறிவுலகமானது தனியுலகமாக நின்று, மனித விமோசனத்துக்கு வெளிச்சம் காட்டவில்லை. மாறாக, அது அதிகார உலகத்துடன் கைகோர்த்து நின்று மனிதர்களை விலங்கிட்டு வைத்திருக்கிறது என்ற கசப்பான உண்மையை அவர் கண்டுகொண்டார்.

பூக்கோவின் பார்வையில் அறிவுலகங்கள் பலரகமானவை, விஞ்ஞானம், மருத்துவம், பொருளியல், சமூகவியல், சட்டவியல், அரசியல் என்ற ரீதியில் சிந்தனையுலகங்கள் பல பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் தனக்கே உரித்தான கட்டமைவு விதிகளையும் செயல் நெறிகளையும் கொண்டவை. காலத்துக்கு ஏற்ப, சமூகப் பண்பாட்டு புறநிலைகளுக்கு ஏற்ப சிந்தனையுலகங்கள் மாற்றங்களைச் சந்திக்கின்றன. இந்த மாற்றங்களாகக் கட்டவிழும் வரலாறு சிக்கலானது. காலச்சீர் அற்றது. முறிவுகளையும் முரண்பாடுகளையும் கொண்டது. இந்த அறிவுலகங்கள் தனியுலகமாக சமூக வாழ்வுக்குப் புறம்பாக இயங்கவில்லை. அவை சமூக உலகத்தை ஊடுருவி நிற்கின்றன. சமூக நிறுவனத் தளத்திலிருந்து செயற்படுகின்றன. சமூக உறவுகளோடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இந்தச் சிந்தனை உலகங்களின் உருவாக்கம், அவற்றின் கட்டமைவு, அவற்றின் செயல்நெறிகள், அவற்றின் நிறுவனமயமாக்கல், அவற்றின் சமூக உறவுநிலைகள், அவற்றின் மாற்றம், வளர்ச்சி பற்றிய வரலாறு ஆகிய பன்முக விசாரணைகளைக் கொண்டதாக பூக்கோவின் அகழாய்வு அமைகிறது. இந்தச் சிக்கலான ஆய்வு முறைமை பற்றியோ அதன் சாதகபாதக அம்சங்கள் பற்றியோ எடுத்து விளக்குவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. பூக்கோவின் ஆய்வு புலப்படுத்திக் காட்டும் சில சமூக உண்மைகள் பற்றியே நாம் இங்கு விளக்கிக் கூற விரும்புகிறோம்.

அறிவுலகத்தை சமூக வாழ்வியக்கத்தின் ஆழத்தில் அலசிப் பார்த்த பூக்கோவுக்கு ஒரு விசித்திரமான உண்மை புலப்பட்டது. அறிவுலகமானது தனியுலகமாக நின்று, மனித விமோசனத்துக்கு வெளிச்சம் காட்டவில்லை. மாறாக, அது அதிகார உலகத்துடன் கைகோர்த்து நின்று மனிதர்களை விலங்கிட்டு வைத்திருக்கிறது என்ற கசப்பான உண்மையை அவர் கண்டுகொண்டார்.

தற்காலச் சமூக உலகம் ஒரு விபரீதமான வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. சாதாரண மனித உறவுகள் அசாதாரண அதிகார உறவுகளாக மாறி வருகின்றன. அதிகாரமானது சமூக வாழ்வின் சகல மட்டங்களிலும் ஊடுருவி நிற்கிறது. சகல சமூக அமைப்புகளிலும், சகல சமூக உறவுகளிலும் மையம் கொண்டிருக்கிறது. அதிகாரத்தின் இந்த மேலாதிக்கத்துக்கு அறிவு துணைபோகிறது. அறிவும் அதிகாரமும் ஒன்றோடு ஒன்று கூட்டுச் சேர்ந்து, ஒன்றுக்கொன்று முண்டுகொடுத்துச் செயற்படுகின்றன. இந்த எதிர்மறையான கூட்டுறவு ஆதிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்துகிறது. அறிவும் அதிகாரமும் ஒன்றிணைந்து, மிகவும் நுட்பமான முறையில், புலன்களுக்குப் புலப்படாத வகையில், மனித உறவுகளை நெறிப்படுத்தி, ஒழுங்கமைத்து, கட்டுப்படுத்தி, மனித வாழ்வு மீது என்றுமில்லாத ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றன. அறிவும் அதிகாரமும் கூட்டாகப் பின்னிவிட்ட ஆதிக்க வலைக்குள் தற்கால மனிதன் மீளமுடியாதவாறு சிக்குப்பட்டுக் கிடக்கின்றான் என்ற மையக் கருத்தையே பூக்கோவின் ஆய்வுகள் புலப்படுத்திக் காட்டுகின்றன.

அதிகாரம் பற்றியும் அதன் தோற்றுவாய் பற்றியும் அது மையம் கொள்ளும் நிறுவனங்கள் பற்றியும் காலங்காலமாக நம்பப்பட்டு வந்த கருத்துக்களை பூக்கோவின் விசாரணைகள் தகர்த்து விட முனைகின்றன.

(தொடரும்...)

# இலங்கையில் பாரதி 03

● முருகபூபதி - ஆஸ்திரேலியா

அண்மையில் இந்தியாவில் ஆயிரம் ரூபா, ஐநூறு ரூபா நாணயத்தாள் மாற்றப்பட்ட விவகாரம் இன்னமும் சூடுபிடித்திருக்கிறது.

அந்தத் தேசம் இவ்வாறு அமளியில் ஆர்ப்பரிப்பதற்கு முன்னர் தென்னிந்திய மாநிலமான கர்நாடகாவில் ஒரு முன்னாள் அமைச்சரும் சுரங்க அதிபருமான ஜனார்த்தன ரெட்டி என்பவரின் மகளுடைய திருமணம் *74 மில்லியன் டொலர்கள்* செலவில் நடந்தேறியிருக்கிறது.

இதன் இந்திய - இலங்கை நாணயப் பெறுமதியை வாசகர்கள் ஊகித்து தெரிந்து கொள்ளமுடியும்.

அதே இந்தியாவில் கடந்த நூற்றாண்டில் ஒரு தமிழ்த் தலைவரின் திருமணம் பத்து ரூபாவில் நடந்திருக்கிறது. அவர் இந்திய அரசியலில் மதிப்பிற்குரிய இடதுசாரித் தோழராகவும் முற்போக்கு எழுத்தாளராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

குடிசையில் பிறந்து குடிசையிலேயே வாழ்ந்து மறைந்த அந்தத் தலைவர் தான் *தோழர் ப. ஜீவானந்தம்.*

இந்தக் குறிப்புகளுடன் இலங்கையில் பாரதி தொடரின் மூன்றாவது அங்கத்தை ஆரம்பிக்கின்றோம்.

பாரதியின் பெருமையும் புகழும் 1930 ஆம் ஆண்டின் பின்னரே இலங்கையில் பரவத் தொடங்கின எனத் தெரிவிக்கிறார் கைலாசபதி (இலங்கை கண்ட பாரதி - மல்லிகை பாரதி நூற்றாண்டு மலர்).


விபுலானந்தர் சமாதி

குறிப்பிட்ட 1930 ஆம் ஆண்டுக்கு முன்னரும் பின்னரும் இலங்கையில் பாரதியின் புகழையும் பெருமையையும் பரப்பியவர்களாக மூவர் அறியக் கிடைத்துள்ளனர்.

*ப. ஜீவானந்தம் (1907 -1963)*

*சுவாமி விபுலானந்தர் (1892-1947)*

*வ.ரா. (1889-1951)*

இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சியில் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் இணைந்திருந்த ஜீவானந்தம், அதிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கப் பாடுபட்டார். கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்ட காலங்களில் பம்பாய் சிறையில் அடைக்கப்பட்டிருந்த *ஜீவானந்தம்* இலங்கையில் 1948 ஆம் ஆண்டளவில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டவர்.


தோழர் ஜீவா

பின்னாளில் தமிழக சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்த சமயம் இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் குரல் எழுப்பியிருக்கிறார். *ஜனசக்தி* பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். இவர் தொடங்கிய இலக்கிய இதழ் தாமரையில் ஈழத்து எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள். அத்துடன் ஈழத்து எழுத்தாளர்கள் *தாமரையில்* அட்டைப்பட அதிதிகளாகவும் கௌரவம் பெற்றுள்ளனர்.

அவருக்கு திருமண ஏற்பாடு நடந்ததும் ஒரு தோழரிடம் பத்து ரூபா கொடுத்தனுப்பி இரண்டு பூமாலையும் இனிப்பும் வரவழைத்து மிக மிக எளிமையாக இல்லற பந்தத்தில் இணைந்தவர்தான் தோழர் ஜீவானந்தம்.

மறைவதற்கு முதல் நாள் இரவும் ஜனசக்தி பத்திரிகைக்கு ஆசிரியத்தலையங்கம் எழுதியிந்தார்.

எளிமையே வாழ்க்கையாக வாழ்ந்திருக்கும் ஜீவானந்தம் அவர்களின் ஆளுமையால் கவரப்பட்ட யாழ்ப்பாணத்தில் வசித்த *டொமினிக்* என்பவர்தான் பின்னாளில் தமது பெயரை *டொமினிக் ஜீவா* என மாற்றிக்கொண்டார். அவர்தான் தமிழ் இலக்கிய உலகில் நன்கறியப்பட்ட டொமினிக் ஜீவா. இவர் தற்பொழுது மல்லிகை ஜீவா எனவும் அறியப்படும் ஈழத்தின் மூத்த எழுத்தாளர்.

ஜீவானந்தம், இலங்கையில் தலைமறைவாக வாழ்ந்த அக்காலத்தில் பாரதியின் கருத்துக்களை இலங்கையில் பரப்பியவர்களில் முக்கியமானவராகக் கருதப்பட்டவர். பாரதியின் பாடல்களையும் சிந்தனைகளையும் இலங்கையில் இலக்கிய மேடைகளில் முழங்கியவர். எம்மவர் மத்தியில் மறுமலர்ச்சி சிந்தனைகளை பாரதியின் பாடல்களிலிருந்தே பரப்பியவர் ஜீவானந்தம்.

*மயில்வாகனன்* என்ற இயற்பெயருடன் இலங்கை கிழக்கு மாகாணத்தில் காரைதீவில் *27-03-1892* ஆம் திகதி பிறந்தவர்தான் பின்னாளில் *சுவாமி விபுலானந்தராக* அறியப்பட்டவர்.

கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் ஆரம்பக்கல்வியை பெற்றதன் பின்னர், மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் பயின்று கேம்ரிட்ஜ் பரீட்சையில் சித்திபெற்று, தான் முன்னர் கற்ற புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக சிறிதுகாலம் பணியாற்றிவிட்டு, கொழும்பில் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் இணைந்தவர்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பரீட்சையில் பண்டிதர் பட்டத்தைப்பெற்ற முதல் இலங்கையர் இவரே. கொழும்பு அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் புனித சம்பத்தரிசியார் கல்லூரியிலும் பணியாற்றியவர். லண்டன் பல்கலைக்கழகத்தின் தேர்விலும் சித்தியடைந்து, மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் அதிபராக பணியாற்றியவர். பின்னாளில் திருகோணமலை இந்துக் கல்லூரியிலும் அதிபராக இருந்தவர் இந்தக் கல்விமான்.

யாழ்ப்பாணம் ஆரியா திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தை அமைத்தவர்களில் இவரும் ஒருவராக அறியப்படுகிறார்.

இராமகிருஷ்ண இயக்கத்தில் இணைந்து *1924* இல் துறவறம் பூண்ட மயில்வாகனன், அதன் பிறகு *சுவாமி விபுலானந்தராகிறார்.*



06.08.1930 இதழ்

துறவியான போதிலும் தொடர்ச்சியாக கல்விப்பணியாற்றியவர். அத்துடன் இதழாசிரியர். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை ஆய்வுசெய்த எழுத்தாளர். இசை ஆராய்ச்சியாளர். இசைத்தமிழ்பற்றிய இவரது யாழ் நூல் காலத்தையும் வென்று வாழ்கிறது.

1943 ஆம் ஆண்டில் இலங்கை பல்கலைக்கழகம் இயங்கத்தொடங்கியதும் அதன் தமிழ்த்துறையில் முதலாவது பேராசிரியராக நியமிக்கப்பட்டவர். தமிழில் ஆய்வுத்துறையை நெறிப்படுத்திய முன்னோடி.

1947 ஆம் ஆண்டு மறைந்த அடிகளாரின் சமாதி மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ளது. அடிகளாருக்கு இலங்கையில் ஞாபகார்த்த அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

இலங்கையில் இராமகிருஷ்ண இயக்கத்தில் அவர் இணைந்திருந்த ஆரம்ப காலத்தில், அதன் பொறுப்பிலிருந்த பாடசாலைகளில் முதல் வகுப்புத்தொடக்கம், எட்டாம் வகுப்புவரையில் மாணவர்களின் தமிழ்ப்பாடத் திட்டத்தில் பாரதியின் பாடல்களைச்சேர்த்திருக்கும் விபுலானந்தர், இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், *1932* இல் *Bharathi Study Circle* என்னும் அமைப்பை நிறுவியவர். அத்துடன் அண்ணாமலைப்பல்கலைகழக வெளியீடுகளிலும் பாரதி பற்றி ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.



வ.ராவின் நூல்

*(ஆதாரம்: சுவாமி விபுலானந்தர் - நூல் பெ.சு.மணி )*

வாசகர்களே, 2000 ஆம் ஆண்டு *ஞான ராஜசேகரனின்* இயக்கத்தில் வெளியான *பாரதி* திரைப்படம் பார்த்திருக்கிறீர்களா...?

அதில் மகாத்மா காந்தியை பாரதியார் சென்னையில் சந்திக்கும் ஒரு காட்சி வரும். காந்தி தங்கியிருந்த இல்லத்தில் வாயில் காப்போனாக நிற்கும் *வ.ரா* என்ற வ. ராமசாமி அய்யங்காரை தள்ளி விலக்கியவாறு காந்தி அமர்ந்திருக்கும் அறைக்குள் பாரதி திடீரென்று பிரவேசித்து அனைவரையும் ஆச்சரியப் படவைப்பார்.

இந்த வ.ரா. பாரதியின் நெருங்கிய நண்பர்.

பாரதி அவரை *''யோவ், என்னாவோய்''* என்றெல்லாம் உரிமையுடன் அழைப்பார். தஞ்சாவூரில் திருவையாறு சங்கீதத்திற்கு பெயர் பெற்ற தலம். இங்கு 1989 இல் வைதீக குலத்தில் பிறந்திருக்கும் இவர், பூநூலையும் குடுமியையும் துறந்த புரட்சியாளர். காந்தியடிகளின் வழியைப் பின்பற்றியவர்.

அறிஞர் அண்ணா, தமது திராவிட நாடு பத்திரிகையில் இவரை *அக்கிரகாரத்து அதிசய மனிதர்* என்றே வர்ணித்திருக்கிறார்.

தாம் பிறந்த தஞ்சாவூரில் சுதந்திரன் என்ற பத்திரிகையிலும் ஆசிரியராக பணியாற்றியவர். அத்துடன், வர்த்தமித்திரன், பிரபஞ்ச மித்திரன், தமிழ்நாடு, சுயராஜ்யா, பாரததேவி ஆகிய பத்திரிகைகளிலும் ஆசிரியராக பணியாற்றியவர்.



விபுலானந்தர் முத்திரை

சிறந்த மொழிபெயர்ப்பாளர். தமிழ் இலக்கிய வரலாற்றில் இன்றும் பேசப்படும் *மணிக்கொடி* இலக்கிய இதழின் வரவுக்கு காரணமாக இருந்தவர் வ.ரா. இலங்கையில் சிறிது காலம் வாழ்ந்திருக்கும் இவர், *வீரகேசரி* நாளிதழின் ஆசிரியராகவும் அதன் தொடக்க காலத்தில் பணியாற்றியவர்.

தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், விதவைகள் மறுவாழ்வு முதலான பாரதியின் கருத்துக்களை வ.ரா. இலங்கையில்தாம் பணியாற்றிய வீரகேசரி பத்திரிகை ஊடாக அக்காலத்திலேயே பரப்பியிருக்கிறார்.

கொழும்பில், அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்சேர்ந்த ஒரு பெண்ணை விரும்பி மணம் முடித்தவர் தான் வ.ரா எனப்படும் ராமசாமி. அந்தப் பெண்ணின் பெயர் *புவனேஸ்வரி.*

வெற்றுப்பேச்சிலும் எழுத்திலும் மாத்திரம் தன்னை அடையாளப்படுத்தாமல் வாழ்ந்தும் காட்டியிருக்கும் வ.ரா., எழுதியிருக்கும் மகாகவி பாரதியார் என்னும் நூல், 1944 ஆம் ஆண்டில் முதல் பதிப்பு கண்டிருக்கிறது. அதன் பின்னர் பல பதிப்புகள் வெளியாகிவிட்டன.

இந்நூல்பற்றி கல்கிகிருஷ்ண மூர்த்தி கல்கி இதழில் இவ்வாறு பதிவுசெய்துள்ளார்: *''.... பாரதியாரை நேரில் பார்த்துப் பழகக் கொடுத்துவைக்கவில்லையே என்ற வருத்தம் நம்மில் பலருக்குண்டு. இந்தப் புத்தகத்தைப் படித்தால் அந்தக்குறை பெரும்பாலும் தீர்ந்துவிடும்.''*

(18 ஆம் பக்கம் பார்க்க)

# தொழில்நுட்பக்கதிர்

தயாரிப்பு: சந்தோஸ்

## மனித மூளைக்கு நிகரான புதிய ரோபோ கண்டுபிடிப்பு



மனிதனின் மூளைக்கு இணையான நியூரோன் அடங்கிய மிகவும் முன்னேற்றமான இயந்திர மனிதனை (ரோபோ) ஒன்றை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற எதிர்கால தொழில்நுட்பம் சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றில் இந்த இயந்திர மனிதன் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

'ரொபின் ஸ்லோஹான்' என்ற விஞ்ஞானி தொழில்நுட்ப மற்றும் அறிவுக் கூர்மை கொண்ட இந்த இயந்திர மனிதனை உருவாக்கியுள்ளார்.

'அல' எனப் பெயரிட்டுள்ள இந்த இயந்திர மனிதன், 24 மணிநேரமும் எந்த தடையுமின்றி நூல்களை எழுதும் திறன்படைத்ததாகும். இயந்திர மனிதன் அறிவியல் புதினக் கதை ஒன்றை எழுதி வருகின்றது என்றும் கூறப்படுகின்றது.

விஞ்ஞானிகள் முதல் முறையாக 1960 ஆம் மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் இயந்திர மனிதனை உருவாக்கினார்கள். தற்போது அந்த இயந்திர மனிதனை மிகவும் முன்னேற்றகரமானதாக - அறிவுத் திறன் உள்ளதாக - உருவாக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





## முடிவுக்கு வருகின்றது சாம்சங் நிறுவனம்




'சாம்சங்' நிறுவனம் தனது கணினி தயாரிப்பு வணிகத்தை 'லெனோவா' நிறுவனத்திடம் விற்க முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மின்னணு பொருள்கள் தயாரிப்பில் முன்னணி வகிக்கும் சாம்சங் நிறுவனத்தின் கணினிகள் பல நிறுவனங்களின் தொழில் போட்டியால் கணினி வியாபாரத்தில் சமீபகாலமாக கடும் சரிவை சந்தித்து வருகிறது.

எதிர்ப்பார்த்த லாபம் கிடைக்காததால் தனது கணினி வணிகத்தை இன்னொரு மின்னணு நிறுவனமான லெனோவாவிடம் விற்க சாம்சங் நிறுவனம் பேச்சு நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சாம்சங்-ஐ விட கணினி உற்பத்தி மற்றும் வணிகத்தில் முன்னணியில் இருக்கும் லெனோவா நிறுவனத்திடம் தங்கள் கணினி வணிகத்தை விற்கும் முயற்சியில் தற்போது சாம்சங் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் சாம்சங் நிறுவனம் தனது பிரிண்டர் வணிகத்தை Hp மின்னணு நிறுவனத்திடம் விற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## மிகச் சிறிய புதிய 'பைக்'




மிகச் சிறிய வடிவிலான புதிய பைக்கை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பைக்கை ஒரு மணி நேரம் சார்ஜ் செய்தால் 60 கிலோமீற்றர் தூரம் வரை பயணம் செய்யமுடியும் என்று கூறப்படுகின்றது. மணிக்கு 20 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்க முடியும் என்றும் மூன்று வெவ்வேறான வண்ணங்களில் இந்த பைக் கிடைக்கிறது.


## நோக்கியாவின் புது வரவு

நோக்கியா நிறுவனமானது புதிய அன்ரோயிட் கைபேசி ஒன்றை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள Mobile World Congress நிகழ்வில் இது அறிமுகம் செய்துவைக்கப்படவுள்ளது.

இதன்படி Nokia Pixel எனும் குறித்த கைபேசி அன்ரோயிட் 7.0.1 Nougat இயங்கு தளத்தில் செயல்படக்கூடியதாகவும், Dual Core Qualcomm Processor, மற்றும் 1GB RAM என்பவற்றைக் கொண்டதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக்கைபேசி அடுத்த வருடம் மார்ச் மாதம் சந்தைக்கு வரும் எனக் கூறப்பட்டுள்து.





## 'பை' வடிவில் புதிய கணினி



முதுகில் மாட்டி கொண்டு செல்லக்கூடிய வகையில் பை போன்ற வடிவத்தில் புதிய தனிநபர் கணினியை வடிவமைத்துள்ளது ஜோட்டக் நிறுவனம். இது ஓர் கணினி ஆகும். அதாவது கணினிக்குத் தேவையான சிபியூ (CPU) பை வடிவில் உள்ளது. அதனால் இதை எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்ல முடியும். மேலும், இந்த சிபியூ-வில் மூன்று யுபிஎஸ் (UPS) இணைப்புகள் உள்ளன. இதிலிருந்து கணினிக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.


## அதிவேக திறன்கொண்ட கணினிகள் பட்டியலில் சீனா முதலிடம்



உலகின் அதிவேகத் திறன் கொண்ட சூப்பர் கணினிகள் பட்டியலில் 500 கணினிகளைத் தோற்கடித்து சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. உலகம் முழுவதும் உள்ள சூப்பர் கணனிகள் எனப்படும் அதிவேக திறன் கொண்ட கணினிகளின் திறன்களை மிகத் துல்லியமாக ஆய்வு செய்து ஆண்டுக்கு இருமுறை பட்டியல் வெளியிடப்படுகிறது.

இந்தப் பட்டியலில், சீனாவின் தேசிய இணைவரிசைக் கணினிப் பொறியியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட்ட 'சன்வே தாய்ஹலைட்' என்ற கணினி முதலிடத்தை பெற்றுள்ளது. இந்த கணினியில், நொடிக்கு 9300 கோடி கணக்கீடுகளைச் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னதாக கடந்த ஜூன் மாதம் வெளியிடப்பட்ட உலகின் அதிவேக சூப்பர் கணினிகள் வரிசையிலும் இந்த கணனிதான் முதலிடத்தைப் பிடித்திருந்தது. இக் கணினியின் அனைத்துத் தரவுகள் மற்றும் செயலிகள் அனைத்தும் முழுக்க முழுக்க சீனாவிலேயே தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

### யோசவ் வாஸ் அடிகளாரின் புனித பண்டம் கண்காட்சியில்



புனித யோசவ்வாஸ் அடிகளார் படுத்துறங்கிய கட்டில் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை இரத்தினபுரி மறைமாவட்டத்தில் காட்சிக்குவைக்கப்படவுள்ளதாக மல்கம் இரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.


# காலைக்கதிர்

கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான்18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.




கிறிஸ்தவத்தை ஜப்பானில் பரப்ப பணியாற்றிய துன்புற்ற இயேசு சபை துறவிகள் இருவரைப்பற்றி உருவாக்கப்பட்டுள்ள சைலன்ஸ் என்ற திரைப்பட வெளியீட்டில் ஹாலிவுட் திரைப்பட இயக்குநர் மார்டின் அவர்களை உரோம் நகரில் திருத்தந்தை பிரான்சிஸ் 30 நவம்பர் 2016 இல் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் இதுவாகும்.

# யாழ். நகரில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றம் டிசெம்பர் 10 ஆம் திகதி திறந்து வைப்பு





தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றம் 125, யாழ். பிரதான வீதியில், 2ஆம் -3ஆம் குறுக்குத் தெருக்களுக்கு இடையில் அமைந்துள்ள குடும்ப மருத்துவ நிறுவகத்தின் மேல் மாடியில், டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது. அன்றைய நிகழ்வில் சிறப்புரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள். 'தனிநாயகம் அடிகளாரின் தொலைநோக்கு' என்னும் தலைப்பில் நிகழ்த்துவார். சிறப்பு அதிதியாக வட மாகாணசபை அவைத் தலைவர் திரு. சி. வீ.கே. சிவஞானம் அவர்கள் கலந்து கொள்வார்.

தமிழ்ப்பணி புரிந்த தாவீது அடிகளிடம் இருந்து கல்வி கற்ற டாக்டர் பூலோகநாதன் அவர்கள் தமது கட்டடத்தை மேற்படி தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றப் பணிகளுக்காக வழங்க முன் வந்துள்ளார்.

கனடாவாழ் அன்ரன் பிலிப் அவர்களின் திட்டமிடலில் அ.பி.ஜெயசேகரம் அடிகளாரின் பொறுப்பில் நடைபெறவுள்ள மேற்படி மன்றத்தின் திட்டத்தில் தமிழ் மொழி - இலக்கியம் -பண்பாடு - ஆன்மிக வளங்களில் ஆய்வுப் புலமை அடைவதற்கு இம் மன்றம் வழிவகுக்கும். அத்துடன் அன்றையதினம் அடிகளாரின் அருங்காட்சியகமும் திறந்து வைக்கப்படும்.

## சிரியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்காகச் செபிப்போம் நீர்கொழும்பில் மும்பை பேராயர் கர்தினால் கிரேசியஸ்

நீர்கொழும்பு.டிசெ.04

நீர்கொழும்பில் நவம்பர் மாதம் 28ஆம் திகதி தொடங்கி எவ்.ஏ.பி.சி. என்று அழைக்கப்படுகின்ற ஆசிய ஆயர் பேரவைகள்கூட்டமைப்பின்11ஆவது நிறையமர்வு கூட்டத்தின் ஆரம்பத் திருப்பலியில் ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின்தலைவரான மும்பை பேராயர் கர்தினால் ஆசுவால்ட் கிரேசியஸ் அவர்கள் சிரியாவிலுள்ள அனைத்துக் குடும்பங்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்காகச் செபிக்கும்படி அழைப்பு விடுத்தார்.

ஆசியாவிலிருந்து, ஏறக்குறைய 140 பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இக்கூட்டம் நவம்பர் 28ஆம் திகதி முதல் இன்று டிசெம்பர் 4ஆம் திகதி வரை நீர்கொழும்பில் நடைபெறுகின்றது.

1972ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த ஆசிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் நிறையமர்வு கூட்டம் இலங்கையில் முதன் முறையாக நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு இலங்கை அரசு ஒரு கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

'ஆசியக் கத்தோலிக்க குடும்பம் :இரக்கத்தின் மறைப் பணியில் ஏழைகளின் இல்லத் திருஅவை' என்னும் தலைப்பில் நடைபெறும் இக்கூட்டத்தில் குடும்ப உறவுகள் முன் வைக்கும் பெரும் சவால்கள் பற்றி விவாதிக்கப்படுகின்றது. உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஒளியில் ஆசியாவில் நற்செய்தியின் மகிழ்வும் குடும்பமும் என்பது குறித்தும் பிரதிநிதிகள் கலந்துரையாடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கச்சதீவு அந்தோனியார் யாத்திரைத் தலம் திறப்பு விழா டிசெ.7 ஆயர் தலைமையில்!

8 மே 2016 அன்று யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரால் அடிக்கல் நடப்பட்ட கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரைத்தல திறப்பு விழா டிசெம்பர் 7ஆம்திகதி அன்று யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திறந்து வைக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு மீன்பிடி தொழிற் சங்க கூட்டமைப்பின் மாநில பொதுச்செயலாளர் சி.ஆர்.செந்தில்வேல் கச்சதீவு அந்தோனியார் திருவிழாவிற்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்தில் இருந்து மீனவர்கள் பங்கேற்று வரும் நிலையில் அடிக்கல் நடும் விழாவுக்கும் புதிய ஆலயத் திறப்பு விழாவுக்கும் தமிழக மீனவர்களுக்கு அழைப்பு விடுக்கவிக்கப்படவில்லை. எனவே மத்திய அரசு உடனடியாகவெளியுறவுத் துறை மூலம் கச்சதீவில் திறக்கப்பட உள்ள புதிய அந்தோனியார் விழாவிற்கு தமிழக மீனவர்கள் பங்கேற்பதை உறுதி செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

### உண்மையின் எண்ணங்கள்

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றம்

காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழின் வரவு பற்றி அறிந்து மகிழ்ந்து வாழ்த்திய அனைவர்க்கும் அன்பான நன்றிகள். பாராட்டுகளோடு நின்று விடாமல் பங்காளிகளாகுங்கள்.

யாழ். நகரில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றம் நிறுவப்படுகின்ற செய்தி ஒருமகிழ்வான செய்தியாகும். இப்பணியைத் திட்டமிட்டுத் தீர்மானித்து செயற்படுத்தும் அனைவரையும் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் பாராட்டுகிறது. பணிசிறக்க வாழ்த்துகிறது. தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் வாழ்வும் பணியும் பற்றி இன்றைய இளம் சமுதாயத்தினர் அறியும் வகையிலும் அவரின் பணி தொடரும் வகையிலும் இம்மன்றம் செயற்படுவது சிறப்பானது. தமிழ் மொழி - இலக்கியம் - பண்பாடு - ஆன்மிக வளங்களில் ஆய்வுப் புலமை அடைவதற்கு இம்மன்றம் வழிவகுக்கும் என்ற அழைப்பை சிறப்பாகப் பயன்படுத்த தகுதி வாய்ந்தவர்கள் முன்வரவேண்டும்.

## புனிதக் கதவுகள் வழியாக 95 கோடி திருப்பயணிகள்

திருஅவை நிறைவு செய்துள்ள இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் உலகெங்கும் ஏறக்குறைய 95 கோடி திருப்பயணிகள் புனித கதவுகள் வழியாகச்சென்றுள்ளனர் என திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 'இரக்கமும் அவலநிலையும்' என்ற திருத்தூது மடலை செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளியிட்டுப் பேசிய போதே புதிய வழி நற்செய்தி அறிவிப்பை ஊக்குவிக்கும்திருப்பீடஅவைத் தலைவர் பேராயர் ரீனோ பிசிக்கெல்லா அவர்கள் இந்த தகவலை வெளியிட்டார்

156 நாடுகளிலிருந்து திருப்பயணிகள் உரோம் நகருக்குத் திருப்பயணம் மேற்கொண்டனர் என்றும் உரோம் நகரில் 36 நாடுகளிலிருந்து 4ஆயிரம் தன்னார்வப் பணியாளர்கள் பணியாற்றினர் என்றும் பேராயர் மேலும் தெரிவித்தார். புனிதக் கதவுகள் வழியாகச் சென்றுள்ள திருப்பயணிகளில் 80 வீதத்தினர் கத்தோலிக்கம் மிக ஆழமாக வேரூன்றியுள்ள நாடுகளைச் சேர்ந்த கத்தோலிக்கர் எனவும் ஏழு மொழிகளில் பார்க்கக் கூடிய யூபிலி இணையத்தளத்தை 6 இலட்சத்திற்கு அதிகமான மக்கள் பார்வையிட்டுள்ளனர் என்றும் பேராயர் மேலும் கூறினார்.

## காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் பரிசுப்போட்டி

காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழைப் படித்து தரப்படும் 6 கேள்விகளுக்கான சரியான பதிலை அனுப்பும் மூவருக்கு முறையே 400/-, 300/-, 200/- ரூபா பரிசில் வழங்கப்படும். கேள்விகள் தரப்படும் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழின் மூலப்பிரதியை இணைத்து எமது முகவரிக்கு தபாலில் 15.12.2016 க்கு முன்னதாக அனுப்பவும். - ஆசிரியர்

1. யாழ் நகரில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மன்றம் ஆற்றவுள்ள பணிகள் எவை?
2. கச்சதீவு புனித அந்தோனியார் யாத்திரைத் தலத்திற்கான அடிக்கல்லை நட்டுவைத்தர் யார் - எப்போது ?
3. சிரியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்காகச் செபிப்போம் என அழைப்பு விடுத்தவர் யார் - எங்கே ?
4. கியூபாவின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோவை சந்தித்த திருத்தந்தையர்கள் யார்? - எங்கே சந்தித்தனர்?
5. ஆசிய ஆயர்களின் 11 ஆவது பேரவை எங்கே, எப்போது நடைபெறுகிறது?
6. 2016ஆம் ஆண்டு வடமாகாணத்தில் சிறந்த சுகாதார மேம்பாட்டிற்கான தங்கத்தை வென்ற பாடசாலை எது?

## மட்டக்களப்பு மறை மாவட்டத்தில் புனித யோசவ் வாஸ் ஆண்டு பிரகடனம்

*மட்டக்களப்பில் இருந்து ஜே.எச்.இரத்தினராஜா*

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யோசவ் பொன்னையா ஆண்டகை சத்துருக்கொண்டான் கிளெனி மண்டபத்தில் மேய்ப்புப்பணி சபை மகாநாடு நடைபெற்ற போது இலங்கையில் அனுஷ்டிக்கப்படவுள்ள புனித யோசவ் வாஸ் ஆண்டை பிரகடனம் செய்தார்.

'அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்த குடும்பங்களை நெறிப்படுத்திய புனித ஜோசப்வாஸ் என்னும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ ஆன்மீக இயக்குநர் எஸ்.ஜே. இராசநாயகம் அடிகளார் உரையாற்றினார்.

உரையிலிருந்து குழு ஆய்வு செய்யப்பட்டு நாளாந்த வாழ்வை இறைஅனுபவத்துடனும் அன்புடனும் நோக்குவதனூடாகவும் அதனை பிறருடன் பகிர்ந்துகொள்வதனூடாகவும் இறைஅனுபவத்தை ஆழப்படுத்தலாம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.



கார்த்திகை மரம் நடுகை மாதத்தில் மேலிஞ்சி முனை கிறிஸ்து அரசர் ஆலய இளைஞர்களுடன் பங்குத்தந்தை பத்திநாதர் அடிகளார் தென்னை மரநடுகையில் ஈடுபடும் போது காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் செய்தியாளர் வி. விதுசன் அவர்களால் எடுக்கப்பட்ட படம் இதுவாகும்.

## காஸ்ட்ரோ மறைவுக்கு திருத்தந்தை இரங்கல்

கியூபாவின் முன்னாள் அதிபர் பிடல் காஸ்ட்ரோ அவர்களின் மறைவுக்கு தனது இரங்கலைத் தெரிவிக்கும் தந்திச் செய்தி ஒன்றை திருத்தந்தை பிரான்சிஸ் அனுப்பியுள்ளார். கியூபா நாட்டின் தற்போதைய அதிபர் ரவுல் காஸ்ட்ரோ அவர்களுக்கு அச்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

புனித திருத்தந்தை 2ஆம் ஜோன் போல் (1998), முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் (2012), திருத்தந்தை பிரான்சிஸ் (2015) ஆகிய மூன்று திருத்தந்தையர்களும் கியூபாவில் பிடல் காஸ்ட்ரோ அவர்களைச் சந்தித்திருக்கின்றனர். கியூபா கம்யூனிச நாட்டில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு திருத்தந்தையரும் கத்தோலிக்கத் திருஅவையும் முக்கியமாகப் பங்காற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், 891 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0777165147, info@tcnlnet.com

# கொடூர போர்க் குணமுடைய ரோபோக்களால் ஆபத்து

கொடூரமான போர்க் குணம் கொண்ட ரோபோக்கள் உருவாக்கப்படுவதைத் தவிர்க்குமாறு உலகின் உயர் மட்ட விஞ்ஞானிகள் பலர் உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உலகில் வாழும் மிகப் பெரிய விஞ்ஞானிகள் என்று கூறப்படும் பேராசிரியர் ஸ்டீவன் ஹொக்கின், நோம் சோமஸ்கி, எலன்மாஸ்க், மற்றும் ஸ்டீவ் வொஸ்னியேக் ஆகியோர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கொடூரமான ரோபோக்களை உருவாக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன என்று அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எதிர்காலத்தில் மிகவும் குறுகிய காலத்தில் முழு மனித இனத்தையும் அழிக்கும் திறன் இந்த ரோபோக்களிடம் இருப்பதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

உலகில் பல நாடுகள் போர் நடவடிக்கைகளுக்காகவும் பாலியல் தேவைகளுக்காகவும் ரோபோக்களை உருவாக்கி வருகின்றன.

உலகின் பாதுகாப்பு மாத்திரமல்லாது நாகரீகத்தின் எஞ்சிய பகுதிகளும் இதனால், அழியும் ஆபத்து இருப்பதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ரஷ்யா ஏற்கனவே தனது கண்ணுக்குப் புலப்படும் அனைத்தையும் சுட்டுக்கொல்லும் நோக்கில் ரோபோ இயந்திரம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

மனிதனின் சில செயற்பாடுகள் திரைப்படங்களில் உச்சக்கட்ட இறுதிக் காட்சிகளில் வரும் துரதிஷ்டவசமான சம்பவங்கள் போல் மனிதனுக்கு அழிவை ஏற்படுத்தும் நிலைமையாக மாற வழி வகுக்கலாம் என்பது நிச்சயமானது.

❝ ரஷ்யா ஏற்கனவே தனது கண்ணுக்குப் புலப்படும் அனைத்தையும் சுட்டுக்கொல்லும் நோக்கில் ரோபோ இயந்திரம் ஒன்றைத் தயாரித்துள்ளது.





# விண்வெளிக்கு செல்லும் அதிக வயதுடைய பெண்!

விண்வெளிக்குச் செல்லும் மிக வயதான, நீண்ட அனுபவம் கொண்ட பெண்மணி என்ற பெருமையை அமெரிக்காவின் பெக்கி விட்சன் (வயது56) பெற்றுள்ளார்.


வயதான விட்சன் தனது மூன்றாவது விண் வெளிப் பயணத்தை கஜகஸ்தானின் பைக்கானூர் விண்வெளி ஏவுதளத்தில் ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் விண்வெளியில் அதிக நாட்கள் இருந்த பெண் என்ற பெருமை அவருக்குக் கிடைக்க உள்ளது.

அவருடன் ரஷ்யா மற்றும் பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் பயணம் செய்தனர்.


ரஷ்யாவின் சோயுஸ் விண்கலம் மூலம் விண்ணுக்குச் சென்ற அவர்கள், விண்ணில் மிதக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள இருக்கின்றனர்.

# உலகிலேயே மிக மோசமான சிறைச்சாலைகள்

❝ ஓர் அறைக்குள், அதிகமான கைதிகளை அடைத்து வைப்பதால், கூட்ட நெரிசல் காரணமாக இவர்கள் அனைவரும் எப்போதும் கம்பிகளுக்கு இடையில் தலையை விட்டு எட்டிப்பார்க்கும் நிலை பரிதாபமாக இருக்கும்.







குற்றசெயல்களில் ஈடுபட்டு பின்னர் சிறைச்சாலைக்குச் செல்லும் மனிதர்கள் அங்கு தாங்கள் அனுபவிக்கும் சித்திரவதைகள் மற்றும் தங்களது வேறுபட்ட வாழ்க்கை முறைகளால், இனிமேல் தங்களது வாழ்வில் குற்றச் செயல்களே செய்யக்கூடா என்று உறுதிமொழி எடுக்கும் அளவுக்கு உலகில் சில சிறைச்சாலைகள் அமைந்துள்ளன.

சில சிறைச்சாலைகளில் குற்றவாளிகள் சுதந்திரமாக உலாவினாலும், பல சிறைச்சாலைகளில், கொடுக்கப்படும் உணவுகள், தங்கும் இடங் கள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் அணுகு முறை போன்றவை மிக மோசமாக உள்ளன.

அந்த வகையில் உலகின் சில அதிபயங்கரமான சிறைச்சாலைகள் இதோ:

**பனாமா சிறைச்சாலை**

பனாமாவில் அமைந் துள்ள சிறைச்சாலையில் அதிக குற்றவாளிகள் இருக்கின்றனர். அங்கு கைதிகள் தூங்குவதற்குக் கூட இடமில்லை. இரவில் குற்றவாளிகள் தூங்கும்போது கூட நேராகப்படுக்கக் கூடாது. மாறாக குற்றவாளிகள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக சரிவாகப் படுக்கவேண்டும்.

மேலும், அவர்களுக்கு வழங்கப்படும் உணவுகளைக் கூட இவர்கள் கம்பிகளை விட்டு வெளியில் வந்து வாங்கு வதில்லை. சிறைக்குள் ளேயே வரிசையில் இவர்கள் நின்று கொண்டிருக்க, கம்பிகளுக்கு இடைவெளியில் வழங்கப்படுகின்றன.

**கலிபோர்னியா சிறைச்சாலை**

கலிபோர்னியாவின் San Quentin எனும் சிறைச்சாலையில் இறந்தவர்களை சவப்பெட்டிக்குள் அடைத்து வைப்பது போன்று கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைதிகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகப் பெட்டிகள் வடிமைக்கப்பட்டுள்ளன. அதற்கென தனியாக பூட்டுகளும் இருக்கின்றன. கைதிகள் சாப்பிட மற்றும் குளிக்கச் செல்லும் நேரங்களைத் தவிர இவர்கள் அந்தப் பெட்டிக்குள் அடைத்து வைக்கப்படுகின்றனர்.

**El Slavador**

Ms - 13 என்ற சர்வதேச குற்றவாளி கும்பலானது பல்வேறு குற்றசெயல்களில் ஈடுபட்டு வருகின்றன. இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள் அதிகமாக அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில்தான் இருக்கின்றனர்.

இந்தக் கும்பலைச் சேர்ந்த குற்றவாளிகள் பிடிபட்டால் இவர்களுக்கு வழங்கப்படும் சிறைத் தண்டனை மிகவும் மோசமானதாக இருக்கும்.

ஓர் அறைக்குள், அதிகமான கைதிகளை அடைத்து வைப்பதால், கூட்ட நெரிசல் காரணமாக இவர்கள் அனைவரும் எப்போதும் கம்பிகளுக்கு இடையில் தலையை விட்டு எட்டிப்பார்க்கும் நிலை பரிதாபமாக இருக்கும்.

**திருநங்கைகள் மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்களுடன் தங்குவது:**

அமெரிக்காவின் பனாமா நகரில் அமைந்துள்ள சில சிறைச்சாலைகளில் குற்றவாளிகள், ஓரினச் சேர்க்கை நபர்கள் மற்றும் திருநங்கைகளுடன் தங்கும் நிலைக்குத் தள்ளப்படுவதால், உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் இவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும், இந்த சிறையில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளும் தங்கவைக்கப்பட்ட, இவர்களுக்கு தேவையான உணவை இவர்களே சமைத்துக்கொள்கின்றனர்.

**பெரு சிறைச்சாலை**

பெரு நாட்டில் அமைந்துள்ள சிறைச்சா லையில் கைதிகள் தங்குவதற்கு கூட இடமில்லாமல் சிறையின் மேற் கூரைகளில் வெயிலையும், மழையையும் பொருட்படுத்தாமல் தங்க வைக்கப் பட்டுள்ளனர். இதில், சில கைதிகள் சிறைச்சா லைக்குள்ளும், பல கைதிகள் சிறையின் மேற்கூரை பரப்பில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir
ஞாயிற்றுக்கிழமை 04.12.2016





# எதையும் தாங்கும் இதயம் கொண்டவள்

பெண்ணுக்கு வறுமை தற்போது நகமும் சதையும் போல ஆகி விட்டது என்றே கூற வேண்டும். பெண்கள் எதையும் தாங்கக் கூடியவர்கள் என்று தெரிந்ததாலோ என்னவோ வறுமை கூட அவளை விடாமல் துரத்துகின்றது. எத்தகைய கஷ்டங்களையும் தாங்கக் கூடியவளே பெண் என்பது யாவரும் அறிந்த விடயமே.

ஆசைகள், விருப்பங்கள் அதிகமாகத் தோன்றுவதும் அந்த ஆசைகளை நனவாக்க முடியாமல் கனவோடு கனவாகச் சேர்த்து விட்டு முற்றும் துறந்து வாழவும் பெண்ணால் மட்டுமே முடியும். ஆண்களுக்கு ஆசைகள் விருப்பங்கள் ஏற்படும் போது அதனை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நினைப்பவர்கள். அதுவே ஆணின் மனம்.

காத்திருக்கும் தன்மை ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம் உள்ளது. குடும்பத்தில் பெண் எவ்வளவோ கஷ்டங்கள் மத்தியில் குடும்பத்தை வழி நடத்திச் செல்கின்றாள். குடும்பத்தில் சிறிது வருமானம் குறைவாக இருந்தால் ஆண் அதை எதிர் கொள்ளத் தயாராக இருப்பது அரிது. ஆனால் எத்தனை வறுமை தன்னைச் சூழ்ந்தாலும் எதிர் கொண்டு வெற்றி காண்பவளே பெண்.

பெண் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் போதே பெரும் வலியை அனுபவித்து விடுகின்றாள். அதனால்தான் அவளால் மட்டுமே அனைத்து வலிகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொள்ள முடிகின்றது. ஒரு வலிக்குப் பின்னால்தான் ஆயிரம் வெற்றிகள் குவிந்து கிடக்கின்றன.

பெண்ணை ஒன்றும் தெரியாதவள் என்று சில சமூகங்கள் தள்ளி வைக்கின்றன. தள்ளி வைக்கும் சமூகத்தில் இருந்தே பெண்கள் சாதனை படைக்கின்றனர்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களை நாம் நோக்கும்போது ஆணின் உதவியின்றித் தன்னந்தனியாக குடும்பத்தை வழிநடத்திச் செல்கின்றனர். ஓர் ஆண் போதும் குடும்பத்தைக் கொண்டு நடத்த என்று சொன்ன காலம் போய், ஒரு பெண் பத்து ஆண்களுக்குச் சமன், என்று சொல்லும் காலமாக மாறி வருவதையும் நாம் காணமுடிகிறது.

யுத்த காலத்தின் பின்னர் அனைத்தையும் இழந்த பின்னும் பெண்கள் மன ரீதியான பாதிப்புக்களையும் தாண்டி தங்களின் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றனர். பாலியல் வன்முறை பெண்ணைத் துரத்தும் ஒரு நோயாக மாறியுள்ளது. அதையும் தாண்டி பெண்கள் தனியாக நின்று செயற்படுகின்றமையைக் காணலாம். பெண்ணின் மனம் மென்மையானது. ஆனால் பெண் தைரியமானவள் என்பதை மறந்து விடக்கூடாது; மறுத்தும் பேசியும் விட முடியாது.

குடும்பத்தில் கணவன் தன்னை எவ்வளவு தான் துன்புறுத்தினாலும் பெண் கணவனை விட்டுப்போவதே இல்லை. தனக்காக இல்லை என்றாலும் தன்னுடைய பிள்ளைகளை நினைத்து அனைத்தையும் தாங்கிக் கொள்கிறாள்.

அம்மா, சகோதரி, மனைவி, மகள் என்ற அனைத்து வடிவங்களைத் தன்னகத்தே தாங்கி நின்றாலும் வறுமையின் நிமித்தம் சற்றும் தளராத மனத்துடன் செயற்படக்கூடியவள் பெண். 'பெண்ணுக்கு பெண்ணே சரி நிகர்' என்று சொல்ல முடியாது 'பெண்ணுக்கு ஆணும் சரி நிகர்'தான்.



# மனைவியைப் புரிந்துகொள்ளுங்கள்

வீட்டு வேலைகளைத் தவிர தங்களால் அதிகமான விடயங்களைச் செய்து காட்ட முடியும் என்று நிரூபித்துக் காட்ட பெண்களுக்கு நீண்ட நாள்கள் எடுத்து விட்டன. ஒவ்வொரு பெண்ணையும் அவர்களது திறமைகளையும் மதியுங்கள். புதிய விடயங்களைச் சாதிப்பதற்கும் ஊக்குவியுங்கள்.

இன்றைய பெண்கள் இலக்கு சார்ந்தவர்களாக உள்ளனர். அவர்ளுக்கென்று இலக்குகள் - கனவுகள் - இருக்கின்றன. யாருக்காகவேனும் அவர்கள் தங்கள் கனவுகளை - இலக்குகளை - விட்டுவிட் வேண்டும் என்று எண்ணாதீர்கள்; வற்புறுத்தாதீர்கள்.

ஒவ்வொரு கணவனும் புதிய யோசனைகளில் - புதிய முயற்சிகளில் - ஈடுபட வேண்டும். உங்கள் மனைவிக்குத் திடீர் ஆச்சரியம் கொடுக்கும் வழக்கத்தைக் கைவிடாதீர்கள்.

உணர்வுகளை வெளிப்படுத்தும் உணர்வுபூர்வமான ஆண்களையே பெண்கள் விரும்புகிறார்கள்.

நீங்கள் ஒரு முடிவெடுக்கும் போது உங்கள் மனைவியின் ஆலோசனையையும் கேளுங்கள். மனைவின் கருத்தையும் கேளுங்கள் அவளின் கருத்துக்கும் மதிப்பளியுங்கள்.

மனைவி அழகாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தப்பில்லை. அதே போன்று மனைவியும் எதிர்பார்ப்பது நியாயம் தானே. மனைவியைப் பொக்கிஷமாக மதியுங்கள் அவளும் உணர்வுகள் உள்ள ஓர் உயிரே.

# தெளிந்த சிந்தனையுடன் இரு பெண்ணே...!

* பெண்களே நீங்கள் சாதிக்கப் பிறந்துள்ளீர்கள் என்பதை எப்போதும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே சூழ்நிலைக்கேற்ப அனைவருடனும் அனுசரித்துப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக உங்கள் நோக்கத்தைக் கைவிட வேண்டிய அவசியம் இல்லை.
* முதலில் நீங்கள் அணியும் உடையில் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் அணியும் உடை தான் உங்களையும் உங்கள் பழக்கங்களையும் தீர்மானிக்கும்.
* எதையும் வெளிப்படையாகப் பேசுங்கள். ஆனால் முட்டாள்தனமாக இருக்கவேண்டாம்.
* துணிவுடன் இருங்கள். ஆனால் எதிர்புணர்வைக் காட்டாதீர்கள்.
* கடுமையாக உழையுங்கள். ஏதாவது ஒன்றில் விசேட திறமை ஒன்றை வளர்த்துக் கொள்ளுங்கள்.
* உங்களை நம்புங்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள். ஆனால் தலைக்கனத்துடன் இருக்காதீர்கள்.
* எடுத்த விடயம் தொடர்பில் மனதில் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளுங்கள். ஆனால் உடனடியான எதிர்காலத்தை விட்டுவிட்டு நீண்ட எதிர்காலத்தைத் திட்டமிடாதீர்கள்.
* யாரிடத்திலும் வெறுப்பை வளர்த்துக் கொள்ள வேண்டாம். அன்பாக இருங்கள்.
* உங்கள் எழுத்திலும் பேச்சிலும் திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள் அதனை, வெறும் வார்த்தைகளில் மட்டுமல்லாது செயலிலும் செய்து காட்டுங்கள்.
* உங்கள் வேலையை நேசியுங்கள். அதுவே உங்களுக்குத் திருப்தியை அளிக்கும். விடா முயற்சியுடன் செயற்படுங்கள்.
* சிறிய குழிகள் தான் பின்னர் பெரிய பள்ளங்கள் ஆகின்றன. எனவே துணிவுடன் செயற்படுங்கள். அதுவே நீங்கள் கஷ்டங்களைக் கடந்து செல்ல பெரிதும் உதவியாக இருக்கும்.



# பெண் சமத்துவம்

பிறப்புரிமை இருக்கு அவளுக்கு -ஆனால்
பிறக்கும் உரிமை இல்லை பெண் சிசுவுக்கு


சொத்துரிமை உண்டு அவளுக்கு -ஆனால்
சொத்தெதுவும் இல்லை அவள் பெயருக்கு
ஆட்சியுரிமை இருக்கு அவளுக்கு -ஆனால்
அவளை ஆளும் உரிமையோ அவனுக்கு - இல்லை

பெற்றெடுக்கும் உரிமை இருக்கு அவளுக்கு -ஆனால்
பெயர் வைக்கும் உரிமையோ அவனுக்கு
வாழும் உரிமை இருக்கு அவளுக்கு -ஆனால்
வரதட்சணை இல்லாமல் வாழ வழி இல்லை அவளுக்கு.

பெண் சிசுக்கொலை வரதட்சணைக் கொடுமை
வாச்சாத்தி வன்கொடுமை, கௌரவக் கொலைகள்
இவை அனைத்தும் இன்னும் இருக்கு இந்த நாட்டிலே
இதைத் தினமும் படிக்கின்றோம் நம் ஏட்டிலே

பெயரளவில் சமத்துவம், பேச்சளவில் சுதந்திரம்
இதுதான் இன்றைய பெண் சமத்துவம்!

# ஆண்களை விட பெண்களின் மூளைக்கு சக்தி அதிகம்



'பெண் புத்தி பின் புத்தி' என்று சொல்வார்கள். அதன் அர்த்தம் என்னவென்று தெரியுமா? பின்னாளில் வரக்கூடியதையும் சிறப்பாகக் கணிக்கக் கூடியவர்கள் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆணின் மூளையை விட பெண்களின் மூளை சிறிதாக இருந்தாலும் அதற்குத் திறன் அதிகமாக உள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆண்களின் மூளையை விட பெண்களின் மூளை 8 சதவீதம் சிறியதாக உள்ளது. ஆனால் பெண்ணின் மூளைக்குத் திறன் அதிகம். அதனால் தான் பெண்கள் திறமையானவர்களாக விளங்குகிள்றனர். தூண்டுதல் பகுத்தறிவு எண்திறன் நிலமையை வேகமாக மாற்றிவிடக்கூடிய திறன் ஆகியவற்றில் பெண்களே சிறப்பாக விளங்குகிறார்கள்.

சிக்கலான விடயங்களிலும் பெண்களின் மூளை, மிகக் குறைந்த செல்களை மட்டுமே பயன்படுத்தி தீர்வு காணும் திறனைக் கொண்டுள்ளது. எனினும் பலம் சார்ந்த நுண்ணறிவில் ஆண்கள் சிறப்பாக விளங்குகின்றனர். ஆகவே 'பெண் புத்தி பின் புத்தி' என்பது தவறான எண்ணக்கருவாகும்.

தொகுப்பு : அன்ரனிபீற்றர்
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்

# 30 ஆண்டுகள் நிறைவில் யாழ்.கத்தோலிக்க இலக்கிய வட்டம்

"இடம்பெயர்வின் பின்னர் சோர்ந்து போயிருந்த எழுத்துத் துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் ஆர்வமுள்ளவர்கள் எழுதிய நூல்களை வெளியிடுவதிலும் முன்மாதிரிகையாகச் செயற்பட்டு அவர்களை ஊக்குவித்தது."

**கலை** இலக்கியங்கள், பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தி கலைப் பணி மூலம் தமிழ்ப் பணியை பல மன்றங்கள், கழகங்கள், வட்டங்கள் தம்மால் இயன்றவரை ஆற்றுவதன் மூலமாக எமது தமிழ்ப் பண்பாட்டு, விழுமியங்கள் மங்கிவிடாமல் பாதுகாத்து வளர்க்கின்றன.

இவ்வாறான பணியை யாழ். கத்தோலிக்க இலக்கிய வட்டமும் 1986 ஆம் ஆண்டு ஆரம்பித்து மெல்ல மெல்ல அடியெடுத்து இவ்வாண்டு 30 ஆவது கலைப் பயண வாழ்வில் விழாக் கொண்டாடுகிறது.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் அருட்பணி கலாநிதி வின்சன் பற்றிக் (ஓ.எம்.ஐ.) அடிகளாரின் வழி நடத்தலில் அமரர் துரை ஆரோக்கியதாசன், பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபரைத் தலைவராகவும், எழுத்தாளர் செ.யோசப் பாலாவைச் செயலாளராகவும், திருமதி. இராஜன் மங்களா, திருஞானம் யோண் குயின்ரன், இரத்தின சிங்கம், எட்வேட் லியோன், அமிர்தநாதர், ஒஸ்மன், அலைக்ஸ் அமலரட்ணம், அன்ரனி பீற்றர் போன்றோரை உறுப்பினர்களாகவும் உள்ளடக்கிய சிறு குழுவாக இயங்கி பல அரிய படைப்பாளிகளும் எழுத்தாளர்களும் உருவெடுக்க அரும்பணி யாற்றியுள்ளது என்றால் மிகையாகாது.

யாழ். கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டம், சமயம் கடந்த படைப்பாளிகளை உருவாக்குவதிலும் ஊக்குவிப்பதிலும் முன்னின்று பணியாற்றியது என்பது பலர் அறியாத விடயமாக இருக்கலாம்.

பாராட்டி ஊக்குவிப்பதில் முதல் முயற்சியாக ஈழநாடு பத்திரிகையின் மூத்த ஆசிரியர் குழுவில் பணியாற்றிய சசிபாரதி சபாரெட்ணத்தின் 36 வருடகால பத்திரிகை உலக சேவையைப் பாராட்டி விழா எடுத்தது. இந்த விழாவில் பத்திரிகையாளர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். குறிப்பாக அப்போது தினகரன் பத்திரிகை ஆசிரியராக இருந்த சிவகுருநாதன், கவிஞர் யாழ். ஜெயம், மல்லிகை டொமினிக் ஜீவா, கவிஞர் அமிர்தநாதர், அருட்பணி வின்சன் பற்றிக், முரசொலி ஆசிரியர் திருச்செல்வம், யாழ்வாணன், செம்பியன் செல்வன், ஆசிரியர் பிலிப்நேரி, சட்டத்தரணி ரி.எம். அன்ரனிப்பிள்ளை போன்றவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு பல படைப்பாளிகள் எழுதிய நூல்களை வெளியிட்டு அறிமுகம் செய்வதிலும் அக்கறை செலுத்தியது.

1986 இல் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மூன்று நூல்கள் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் செம்பியன் செல்வன் எழுதிய குறுங்கதை நூறு, வின்சன் பற்றிக் அடிகள் எழுதிய விடுதலை இறையியல் யோசப் பாலாவின் உணராத உண்மைகள் என்ற சிறுகதைத் தொகுதி ஆகியன வெளியிடப்பட்டன. அமரர் மருத்துவர் பிலிப் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா, திருமதி சித்திரலேகா மௌனகுரு, அருட்பணி எஸ்.ஜே. இம்மானுவல் அடிகள், அருட்பணி ஜீவா போல் அடிகள் கலந்து கொண்டு சிறப்புரைகள் ஆற்றினர்.

இந்த முயற்சி கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் வளர்ச்சிக்கு மேலும் வலுச்சேர்த்தது.

படைப்பாளிகளை உருவாக்கும் நோக்கில் பல பயிற்சிப் பட்டறைகளும் முன்னெடுக்கப்பட்டன. மறைக் கல்வி நடுநிலையம், நாவலர் கலாசார மண்டபம், அகவொளி மண்டபம் போன்ற இடங்களில் இலக்கிய விழாக்கள், கலைத் தூண்டல்கள் இடம்பெற்றன. கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் இதய ஒலி என்ற கையேடு ஒன்றையும் வெளியிட்டு வந்தது.

பத்திரிகைகளில் கத்தோலிக்க சிந்தனைகளை வெளியிட்டு ஒவ்வொரு வருடமும் பணியாற்றுவது யாம் அறிந்த ஒன்றே. வலம்புரி பத்திரிகையில் பரம பிதா காட்டிய பாதை கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களால் ஆரம்பித்து நடத்தப்பட்டு வந்தது. அது இன்றுவரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. உதயன் பத்திரிகையிலே நீண்ட காலமாக ஞாயிறு நற்பிரசாதம் என்று ஞாயிறு சிந்தனை ஆன்மிக இலக்கியப் பணியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

கலை இலக்கியப் பணியோடு கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டம் நிற்காது, சமூகப்பணியிலும் பல உதவிகளை முன்னெடுத்தது. போர்க் காலத்தில் யாழ். மாவட்டமே இடம்பெயர்ந்து மீண்டும் குடியேறிய காலப் பகுதியில் மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புக்களையும் நல்லுள்ளம் கொண்டவர்களின் உதவியுடன் முன்னெடுத்து கல்வி உதவி செய்தமை பலராலும் மறக்கப்படாத ஒரு விடயமாகும். 100 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் அக்காலப் பகுதியில் வழங்கப்பட்டன. இது கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் முன்வந்து ஆற்றிய மனிதநேயப் பணியாகும்.

இடம்பெயர்வின் பின்னர் சோர்ந்து போயிருந்த எழுத்துத்துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் ஆர்வமுள்ளவர்கள் எழுதிய நூல்களை வெளியிடுவதிலும் முன்மாதிரியாகச் செயற்பட்டு அவர்களை ஊக்குவித்தது. ஆசிரியர் பிலிப் நேரி எழுதிய வறுமையின் வடிவழகன், கோப்பாய் யாக்கோபு எழுதிய விடிவெள்ளி என்ற சுவாமி ஞானப்பிரகாசரின் பணிகள் பற்றி கையேட்டு நூல், துரை ஆரோக்கியதாசன் எழுதிய தனிநாயகம், தாவீது அடிகளார் பற்றிய நூல்களையும், அருட்பிரகாசம் எழுதிய நிறுத்தோற்றம் போன்ற நூல்களையும் வெளியிட்டு உதவியது.

இவ்வாறு பணியாற்றும் இலக்கியவட்டமானது கடந்த 2012 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி அகவொளி மண்டபத்தில் 25 ஆவது ஆண்டு நிறைவை அமரர் தலைவர் துரை ஆரோக்கியதாசனின் (சமாதானம்) தலைமையில் பிரதம விருந்தினர் அருட்தந்தை ஜே.பி.ஈ.செல்வராஜா கலந்து கொண்டார்.

இந்த விழாவில் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளில் வெற்றியீட்டிய 68 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இலக்கிய சமூகப் பணியாற்றிய மூத்தவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். மூத்த கவிஞரான நவாலியூர் நாயகிக்கு கவிதைத்தென்றல் என்ற பட்டமும், சட்டத்தரணி ரி.எம். அன்ரனிப்பிள்ளைக்கு சமூக ஜோதி என்ற பட்டமும் வழங்கி அருட்சகோ. தொபியால் கௌரவிக்கப்பட்டனர்.

இலக்கிய, கலைப்பணிகளை முன்னெடுக்கும் யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் 30 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு குறுந்திரைப்பட, இறுவட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளையும் நடத்தியுள்ளது.

இதில் பங்கு கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் இன்று நடைபெறும் விழாவில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் 10 இற்கும் மேற்பட்ட இலக்கிய கலை, சமூகப் பணியாற்றும் மூத்த கலைஞர்களும், இளைய கலைஞர்களும் முறையே சமூகஜோதி, கலைக்கதிர் என்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

யாழ். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் பண்பாட்டு விழுமியங்களை காப்பதற்கு விழிப்புணர்வுடன் கலைப்பணியாற்றி எம் தமிழர் வாழ்வு புதுப் பொலிவாய் பொங்கி மேன்மேலும் வளர்ந்து பெருகிட வாழ்த்துகின்றோம்.

## ஓ அமெரிக்கா...

*(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

**இதுவே என் கடைசி உரை**

மீண்டும் அதிபர் ஆவாரா காஸ்ட்ரோ என்ற கேள்வி தொடர்ந்து எழுந்த நிலையில், 2008இல் அவர் வெளிப் படையான ஓர் அறிவிப்பை வெளியிட்டார். ''அதிபர் பதவியை இனி நான் ஏற்க மாட்டேன். அந்தப் பதவியில் தொடர்ந்து பல உலக நாடுகளுக்குச் செல்ல வேண்டியிருக்கும். அப்படி ஒரு பதவியை வகிக்க முழு உடல் நலமும் இல்லாத என்னால் சம்மதிக்க முடியவில்லை'' என்றார்.

''தேசம் தொடர்பான அத்தனை முக்கிய முடிவுகளிலும் அண்ணன் காஸ்ட்ரோவை நான் கலந்து ஆலோசிப்பேன்'' என்றார் ரவுல் காஸ்ட்ரோ. தான் சொன்னதை அரசு பிரேரணையாகவே அவர் அறிவிக்க, 597 தேசியப் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதை ஒருமனதாக ஏற்றுக் கொண்டார்கள்.

கியூபா மக்களுடன் தொடர்ந்து மறைமுகமாக உரையாடிக் கொண்டிருந்தார் காஸ்ட்ரோ. நாளிதழ் ஒன்றிலும் தொடர்ந்து தன் எண்ணங்களைப் பதிவு செய்து வந்தார். ''என் வருங்கால உடல் நலம் குறித்துக் கவலைப்படாதீர்கள் மக்களே'' என்றும் டுவிட் செய்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் தொலைக்காட்சியில் மக்கள் முன் தோன்றிய பிடல் காஸ்ட்ரோ ஆற்றிய உரையில் கூறியது:

''இதுவே என் கடைசி உரையாகக் கூட இருக்கலாம். நமது லத்தீன் அமெரிக்க நண்பர்களுக்கும் பிற நாட்டு நண்பர்களுக்கும் கியூப மக்கள் எப்போதும் வெற்றியாளர்களே என்ற செய்தியை தெரிவிக்க வேண்டும்.

நான் விரைவில் 90 வயதைத் தொட்டு விடுவேன். காலம் என்னை மறையச் செய்யும். ஆனால், கியூபாவின் கம்யூனிஸ்டுகள் இந்தப் புவியில் ஒரு சிறந்த உதாரணமாக திகழ்வர்.

கம்யூனிஸசித்தாந்தத்தை உத்வேகத்துடன் அதற்குண்டான உரிய மரியாதையுடனும் பின்பற்றினால் மனித குலத்துக்கு ஆகச் சிறந்த பொருளாதார, கலாசார நன்மைகளைச் செய்ய முடியும் என்பதை உணர்த்தலாம். நமது கோட்பாடுகளை நிலைநிறுத்த சமரசமின்றி போராட வேண்டும்''.

(கேள்வி தொடரும்)

## இலங்கையில் பாரதி...

*(13 ஆம் பக்க தொடர்ச்சி...)*

புதுவையில் பாரதி வாழ்ந்த காலத்தில், இவருடைய மொழிபெயர்ப்பு ஆற்றலையும் உரை நடையையும் விதந்து போற்றியிருக்கும் பாரதி, ஒரு சந்தர்ப்பத்தில், இனிமேல் தான் கவிதைத் துறையை கவனிப்பதாகவும் வ.ரா உரை நடையைக் கவனிக்கட்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

1930 ஆம் ஆண்டின் பின்னர் தோழர் ஜீவானந்தம், சுவாமி விபுலானந்தர், வீரகேசரி ஆசிரியர் வ.ரா ஆகியோர் பாரதியின் சிந்தனைகளை இலங்கையில் பரப்பி பெரும் தாக்கத்தை உருவாக்கிய முன்னோடிகளாக கருதப்படுகின்றனர்.

*யாழ்ப்பாணத்தில் 1920 இல் ஒலித்த பாரதி பாடல்கள்:-*

1930 இற்குப்பின்னர் தான் பாரதி பற்றிய சிந்தனைகள் இலங்கையில் விகசிக்கத்தொடங்கியது என்று பேராசிரியர் கைலாசபதி பதிவு செய்திருந்தாலும், அதற்கு முன்னரே பாரதியின் பாடல்கள் இலங்கையில் ஒலித்திருப்பதற்கும் சான்றுகள் இருக்கின்றன.

யாழ். வாசிகளுக்கு ஒரு தகவல் தெரியுமா...?

இன்றைய மனோகரா தியேட்டர் அமைந்திருக்கும் இடத்தில் 1920 - 22 காலப்பகுதியில் ஒரு மண்டபம் இருந்தது. அதற்குப்பெயர்: புத்துவாட்டி வீட்டு மண்டபம். லிடோ தியேட்டர் இருந்த இடத்தில் அன்று இருந்தது ராசா தகரக் கொட்டகை. இங்கு வந்திருக்கும் தமிழகக் கலைஞர்கள் சிலர் மேடையேற்றிய நாடகங்களில் பாரதியின் பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். பாரதி உயிருடன் வாழ்ந்த காலத்திலேயே இலங்கையில் யாழ்ப்பாணத்தில் தமிழகக் கலைஞர்கள் வந்து பாடியிருந்தார்கள். அதைத் தாம் நேரில் பார்த்திருக்கிறார் என ஒரேற்றர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

*( ஆதாரம்: சி. தில்லைநாதன் - நூல்: பாரதி பன்முகப்பார்வை)*

பிற்குறிப்பு: இந்தத் தொடரில் இனிவரும் அங்கங்களில் பாரதி தொடர்பாக இலங்கையில் வெளியான நூல்கள் பற்றிய பதிவில் இந்த நூல் பற்றிய மதிப்பீடும் எழுதப்படும்.

(தொடரும்)

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

# சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் இளையவர்களுக்கு ஆபத்தாம்...!

'நடா' புயல் ஏதோ இந்தளவோடையாவது விட்டிட்டுப் போனதே பெரிய காரியம்'' என்ற படி கச்சான் கடகத்தை அவிழ்த்தாள் செல்லாச்சி.

'போனமுறை 'நிஸா' புயல்; இந்தமுறை 'நடா' புயல். புயல்களுக்கு எப்பிடித்தான் பெயர் வைக்கினமோ? கேட்டார் ஏரம்பர்.

''அட இது தெரியாதே?'' என்று பீடிகை போட்ட ஜீவனை, இடைமறித்தசெல்லாச்சி ''என்னமோ நீதான் பெயர் வைச்சமாதிரி கதைக் கிறாய். உந்த 'நெற்' றைத்தட்டி வாசிச்சுப் போட்டு சொல்லப் போறாய். நாட்டிலை பல 'அரைவாளிகள்' இப் பிடித்தானே காலத்தை ஓட்டுகினம்'' என்று சிரிப்புடன் சொன்னாள் செல்லாச்சி.

இதனைக்கேட்டுப் பெரிதாகச் சிரித்த ரூபன் ''இப்ப இணையத்திலை என்னத்தையும் எழுதிப் போட்டு கீழே அப்துல் கலாம் சொன் னது என்று போட்டால் போதும். எங்கடைசனம் அப்பிடியே நம்பும்.'' என்றான்.

''இப்பநான் சொல் லவோ, விடட்டோ?'' கோபத்துடன் கேட்டான் ஜீவன்.

''நீ சொல்லடாப்பா'' என்றார் ஏரம்பர்.

சொல்லத் தொடங்கி னான் ஜீவன்....

''வானிலையாளர்கள் வானத்தில் இடங்களை இலக்கங்களில் குறிப்பி டுவது வழக்கம். புயல் எங்கு தோன்றுகின்றதோ அந்த இடத்துக்கு உரிய இலக்கங்களால் அந்தப் புயலை முன்னர் குறிப்பிட்டனர். இது செய்தியாகச் சொல்லும் போது கஸ்டமாக இருந்தது. அதனால் புயல் தோன்றும் காலத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுடன் சம்பந்தப் படுத்தி புயல்களுக்கு பெயர் வைத்தனர்.'' என்று கூறி மூச்சு வாங்கினான் ஜீவன்.

அப்போது செல் லாச்சி ''தொலைக்காட்சி தொடர்கள் மாதிரி இப்போதைக்குக் கதை முடியாது போலை யிருக்கு.'' என்றாள்.

அதனைக் காதில் வாங்காத ஜீவன் தொடர்ந்து சொன்னான்...

''1900 ஆம் ஆண்டுக் குப் பிறகுதான் புயலுக் குப் பெயர் வைக்கிற வழக்கம் வந்தது. முத லில் பெண் பெயர்தான் வைச்சினம். 1979 ஆம் ஆண்டுதான் ஆண் பெயர் வைப்பது தொடங்கியது'' என்ற ஜீவனை இடைமறித்த ஏரம்பர் ''இந்தப் பெயர் களை யார் வைக்கினம்?'' என்று கேட்டார்.

''சொல்லுறன்'' என்ற ஜீவன் தொடர்ந்தான்....

''கடல் பரப்பை, பசுபிக் பகுதி, அட்லாண்டிக் பகுதி, இந்தியப் பெருங்கடல் பகுதி என்பன போன்ற பல பகுதிகளாகப் பிரிச்சிருக் கினம். அந்தந்தக் கடல் பகுதி நாடுகள் பெயர் களைக் கொடுக்க அவற்றை வைத்துப் பட்டியல் போடுவினம். அதிலையிருந்து எடுத்து அடுத்தடுத்த புயல் களுக்குச் சூட்டுவினம். 'நடா' என்ற இந்தப் பெயரை ஓமான் நாடு கொடுத்தது. இலத்தீன் சொல்லான இதற்கு 'ஒன்றுமில்லை' என்று அர்த்தமாம்.'' என்று கூறிய ஜீவன் மூச்சுவாங்கிக் கொண்டான்.

''போனிலை துளாவி எடுத்துச் சொல்லுகிறாய். உண்மையோ பொய்யோ யார் கண்டது?'' என்று விடாமல் சொன்னாள் செல்லாச்சி.

''இணையத்திலை இருக்கிற சமூக ஊடகங் களால் தான் அரபு நாடு களில் ஆட்சிகள் கவிழ்ந்து 'அரபுவசந்தம்' என்ற புரட்சி களே நடந்தன. இதெல்லாம் உனக்கு விளங்காது'' என்று செல்லாச்சிக்குப் பதிலடி கொடுத்தான் ஜீவன்.

''அப்ப உந்தச் சமூக ஊடகங்களை வைத்து தமிழீழம் வாங்கித் தர வேண்டியதுதானே'' என்று கிண்டலாகச் சொன்னாள் செல்லாச்சி.

''அப்பிடி ஒரேயடியாகச் சமூக ஊடகங்களைப் புறக்கணிக்கக் கூடாது செல்லாச்சி'' என்று வாக்குவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்த வாத்தியார், ''ஒருவருடைய கருத்தை, அவரது பார்வையில் போதிய விளக்கத்துடன் பதிவு செய்ய 'பேஸ்புக்', 'டுவிட்டர்' போன்ற சமூக ஊடகங்கள் பெரும் வாய்ப்புத்தான்'' என்றார்.

''அப்பிடிச் சொல் லுங்கோ. கனபேருக்கு சமூக ஊடகங்கள் என்றால் இளக்காரமாக இருக்கு. கொஞ்ச நாளைக்கு முதல் யாழ்ப்பாணத்திலை ஹோலிப் பண்டிகை நடத்த வெளிக்கிட்டவை. நாங்கள் சமூக ஊடகங்களிலை காட்டின எதிர்ப்பாலைதான் நிறுத்தினவை... தெரி யுமோ?'' உற்சாகமாகக் கேட்டான் ஜீவன்.

''சும்மா புளுகாதை, நீங் கள் எழுதினதைப் பார்த்து ஒன்றும் நடக்கேல்லை. மாநகர சபை இடம் கொடுப்பதை ஆட்சேபித்து சிலர் கடிதம் கொடுத்துத் தான் நிகழ்ச்சி தடுக்கப் பட்டது'' என்றான் ரூபன்.

''அதுவும் இந்தியத் தூதர், தங்களுக்கும் நிகழ்வுக்கும் சம்பந்த மில்லை என்று சொன்ன பிறகுதானே, அவையும் தடுக்க வெளிக்கிட்டவை'' என்று தனக்குத் தெரிந் ததைச் சொன்னாள் செல்லாச்சி.

அப்போது ஏரம்பர் ''ஹோலிப் பண்டிகை நடத்த இருந்தவர் மாவீரர் தினத்தன்று நிகழ்ச்சியை நடத்தும் படி தனக்கு அழுத்தம் தரப்பட்டது என்று ஊடகங்களிலை சொன்னவராம். ஆனால் அழுத்தம் தந்தது யாரென்று இன்னும் வெளியிலை வரேல்லை'' என்று சுட்டிக்காட்டினார்.

''நடந்து முடிந்ததை ஏன் கதைப்பான்? என்று விட்ட இடத்துக்கு மீண்டும் இழுத்து வந்த வாத்தியார், ''சமூகஊடகங்கள் 'Perception', அதாவது எண்ணப்பாட்டை ஊடகப் பயனர்களிடம் ஏற்படுத்த முடியும். அதனால் மட்டும் செயற்பாடு நடந்துவிடும் என்று சொல்ல முடியாது'' என்றார்.

''துனிசியா, லிபியா போன்ற நாடுகளில் உள்நாட்டு இளைஞர்களின் எழுச்சியாகத் தொடங்கிய அரபு வசந்தத்தை, அமெரிக்கா உட்பட்ட மேற் குலகம் தாம் விரும்பிய நாடுகளில் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தப் பயன்படுத்தின என்பது தான் உண்மை'' என்று கூறினான் ரூபன்.

''அரசுக்கு எதிரான மனநிலையை மக்கள் அடைய, சமூக ஊடகங்கள் காரணமாக இருந்தன என்பது உண்மைதான். அதனைச் சாட்டாக வைத்துக் கிளர்ச்சிக் குழுக் களுக்கு ஆயுத, நிதி உதவிகளைக் கொடுத்து ஆட்சி மாற்றம் ஏற்படுத் தியது அமெரிக்கா. ஆனால் நாங்கள் சமூக ஊடகங் களால்தான் ஆட்சி மாற்றமே நடந்தது என்ற மாயையில், வெறும் சமூக ஊடகப் பதிவுகளுக்குள் எதிர்காலத்தைத் தேடு கிறோம் என்பதுதான் கவலைக்குரியது'' என்று விளக்கினார் வாத்தியார்.

''இவை பதிவுகளைப் போட்டுவிட்டு, பகிர்வை யும் விருப்பையும் எண் ணிக் கொண்டு இருப் பினமே தவிர செயலிலை எந்தக் காலத்திலை இறங்கப் போகினம்?'' என்றசெல்லாச்சி தனக்கும் விசயம் தெரியும் என்பதைக் காட்டினாள்.

''உண்மைதான் இன் றைக்கு இணையத்தை ஆக்கபூர்வமாகப் பயன் படுத்துவதில் நாங்கள் பின் தங்கித்தான் இருக்கிறம்'' என்று செல்லாச்சிக்கு சமாதானக் கரம் நீட்டினான் ஜீவன். அதனை புன்ன கையால் ஏற்றுக் கொண் டாள் கிழவி.

இந்த நாடகத்தைப் பார்த்துச் சிரித்தபடியே வாத்தியார் ''இணையத்தில் எங்களுடைய ஆள்கள் போடுகின்றவற்றில் பெரும் பாலானவை, பணம் சேர்க்கும் உத்திகளாகவும், தனி மனித சுய விளம்பரங் களாகவும், தாங்கள் நம்பும் கருத்து, கொள்கை, மதம், சாதி போன்றதுகளை மற்றவர்கள் மீது திணிக்க எத்தனிப்பனவாகவுமே இருக்கின்றன.



வாசிப்பவருக்கு நன்மை தரும் பதிவுகளைப் பார்ப் பதே அபூர்வமாக இருப்பது தான் வேதனை'' என்றார்.

''அதுமட்டுமே வாத்தி யார்''என்று பீடிகை போட்ட ஏரம்பர் ''இணைய வசதியாலை, இலங்கை இளையவர்களிலை 92 சதவீதமானவர்கள், முன்பின் தெரியாதவர் களுடன் நட்பாகிப் பழகுவதாக ஆய்வு ஒன்று சொல்லுது. இது பல சமூகச் சிக்கல்களுக்குள் கொண்டு போய்விடும்'' என்றார்.

''அதோடை 'FOMO' என்ற பிரச்சினையும் எங்கடை இளையதலை முறைக்குள் பரவுதாம்'' என்று பீதியைக் கிளப் பினார் வாத்தியார்.

அதென்ன என்பதாக மற்றவர்கள் வாத்தியாரைப் பார்த்தனர்.

வாத்தியார் சொல்லத் தொடங்கினார்.

''சமூக ஊடகங்களைப் பயன்படுத்திறவை, அதிலை இடப்படும் பதிவுகளில் எதையும் தவறவிடக்கூடாது என்று விரும்புவினம். அதனால் விநாடிக்கொரு பதிவாகத் தட்டித் தட்டிப் பதிவுகளைப் பார்ப்பினம். நாளடைவில் இது பதற்றத்தையும் குழப்பத்தையும் மனதில் ஏற்படுத்தும். இதுதான் 'தவற விடும் அச்சம்' (Fear of missing out)என்ற மனப்பாதிப்பை ஏற்படுத்துகிறதாம். இந்தப் பதற்றமும் குழப்பமும் பலருக்கும் இருப்பதாகச் சொல்லுகினம்''.

என்றார்அவர்.

''எதுக்கும் ஜீவன் நல்ல டொக்டரிட்டை ஒருக்காக் காட்டன் மச்சான்'' என்று நண்பனைக் கேலி செய்தான் ரூபன்.

இதனைக் கவனிக்காமல் ஆழ்ந்தயோசனையுடன் கதைக்கத் தொடங்கினான் ஜீவன்...

''எங்கடை அரசியல் வாதிகள் தங்கடை பிரதாபங்களை விளம்பரப் படுத்தவும், தங்களுக்குத் தாங்களே புகழாரம் சூடவும் பிடிக்காதவையை கேவ லப்படுத்தவும்தான் இணையத்தைப் பயன்படுத்துகினம்.

'புத்திஜீவிகளோ தங் களுக்கு விளங்கினால் போதும் என்கிற மாதிரி எழுதுகினம். அல்லது தாங்கள் சொன்னதே சரி என்று விவாதங்களைத் தவிர்க்கினம்.

''வேறு சிலர் பாதிக்கப் பட்டவைக்கு உதவி செய்யிறதைப் படம் எடுத் துப் போட்டாப் போதும் என்று நினைக்கினம். இன்னும் கொஞ்சப் பேர் தங்களைப் பெரியாளாகக் காட்டப் புளுகித் தள்ளிக் கொண்டு இருக்கினம்.'' என்று தனது மனக் கவலைகளைக் கொட்டித் தீர்த்தான் ஜீவன்.

''இன்றைக்குச் சமூக ஊடகம் வலிமையான கருவிதான். அதனை எதற்கு, எப்படிப் பயன் படுத்துகிறோம் என்பதை சமூக ஊடகம் தீர்மானிக் காது. நாம்தான் முடிவு செய்ய வேண்டும்'' என்று கூறிவிட்டு எழுந்தார் வாத்தியார்.

அப்போது ரூபன் ' 'இந் தியாவிலை 500 ரூபா, 1000 ரூபா தாள் காசுகள் செல்லாது என்று அறிவிச் சிருக்கினம். அதாலை இந்தியாவுக்குப் போய் வந்தவை, தங்களிட்டை இங்கே வைத்திருக்கிற தாள்களை என்ன செய்யிறது என்று தெரியாமல் கவலைப்படு கினமாம்''என்றான்

''இந்தியா தந்த இன்னொருபரிசு'' என்று பிரேம்போட்டுச் சுவரிலைதொங்கவிடச் சொல்லு''என்ற படியே கச் சான் கடையைக் கட்டினாள் செல்லாச்சி. மற்றவர்களும் புறப்பட்டனர்.

# அதிக பணப் புழக்கமே ஊழலுக்கு அடிப்படை

## பிரதமர் மோடி தெரிவிப்பு

டில்லி, டிசெ.03

அதிக அளவிலான பணக் கையிருப்பே ஊழலுக்கும் கறுப்புப் பணத்துக்கும் முக்கிய காரணமாக இருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மேலும், அத்தகைய முறைகேடுகள் நிகழாத நாடாக இந்தியாவை உருவாக்க வலுவான அடித்தளம் அமைக்கும் விதத்தில் ரொக்கப் பணமில்லாப் பரிவர்த்தனைக்கு மக்கள் மாற வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இதுகுறித்து இணையத்தளம் ஒன்றில் பிரதமர் மோடி வெளியிட்ட கட்டுரையில் கூறியுள்ளதாவது:-

இந்தியாவில், 21 ஆம் நூற்றாண்டில் ஊழலுக்கு இடமில்லை. ஊழலால் நாட்டின் வளர்ச்சி தடைபடுவதோடு, ஏழை மற்றும் நடுத்தர மக்களின் கனவுகளும் தடுக்கப்படுகின்றன.

அதிக அளவில் பணக் கையிருப்பு வைத்திருப்பது, ஊழலுக்கு வழிவகுக்கிறது. குறிப்பாக இளைஞர்கள் ரொக்க பணமில்லாப் பரிவர்த்தனைக்கு மாறி, மற்றவர்களுக்கு தூண்டுகோலாக அமைய வேண்டும். அது, ஊழலுக்கும் கறுப்புப் பணத்துக்கும் இடமில்லாத இந்தியாவை உருவாக்க வலுவான அடித்தளம் அமைக்கும்.

தற்போது, செல்லிடப்பேசி



வங்கிச் சேவை, செல்லிடப் பேசிபணப்பை ஆகியவற்றின் யுகத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். அவற்றின் மூலம், உணவு, வாடகைக் கார்களை அழைத்தல், மேசை-நாற்காலிகள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளைப் பெற முடியும்.

ஏற்கெனவே, பெரும்பாலானோர் வங்கி அட்டைகளை பயன்படுத்தி வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். எனினும், ரொக்கமில்லா பரிவர்த்தனையை மேற்கொள்வதற்கான வழிமுறைகள் பெருகியுள்ளன.

அவற்றை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கடந்த மாதம் 8 ஆம் திகதி ரூபா தாள்கள் வாபஸ் நடவடிக்கையை மத்திய அரசு அறிவித்த பின்னர், எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் சிறு வணிகர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துக்கு மாறும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஆயிரம், 500 ரூபா தாள்கள் வாபஸ் அறிவிப்புக்காரணமாக மக்கள் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்று எனக்கு ஏற்கெனவே தெரியும். எனினும், நீண்டகால நன்மைக்காக இந்த குறுகிய காலச் சிரமங்களை மக்கள் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று அந்தக் கட்டுரையில் மோடி குறிப்பிட்டுள்ளார்.

# கச்சதீவுக்கு மீனவர்களை அனுமதிக்குமாறு தமிழக அரசியல்வாதிகள் வலியுறுத்தல்

சென்னை, டிசெ.04

கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தின் திறப்பு விழாவில் பங்கேற்க இராமேஸ்வரம் மற்றும் அதன் சுற்றுப்பகுதி மக்களை மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், த.மா.கா. தலைவர் ஜீ.கே. வாசன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கச்சதீவு தொடர்பாக இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் புனித அந்தோனியார் கோயில் திருவிழாக்களில் இராமநாதபுரம் மீனவர்கள் கலந்து கொள்ளலாம் என தெளிவாகக் குறிப்பிடப்



பட்டிருக்கிறது. வழக்கமாக மார்ச் மாதத்தில் நடைபெறும் விழாவில் தான் பங்கேற்க வேண்டும் என்றோ, மற்ற காலங்களில் இடம்பெறும் விழாக்களில் கலந்து கொள்ளக் கூடாது என்றோ அதற்கு அரசு அர்த்தம் கற்பிக்கக் கூடாது.

எனவே, 7 ஆம் திகதி நடைபெறவுள்ள கச்சதீவு புதிய அந்தோணியார் தேவாலயத்தின் திறப்பு விழாவில் பங்கேற்க இராமேஸ்வரம் மற்றும் அதன் சுற்றுப்பகுதி மக்களை மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இது தொடர்பாக ஜீ.கே. வாசன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கச்சதீவுப் பகுதியில் புதிதாக கட்டப்பட்ட புனித அந்தோனியார் கோயில் திறப்பு விழா நடைபெற உள்ளது. இதனால் தான் தமிழக மீனவர்கள் ஒவ்வோர் ஆண்டும் இந்தக் கோயில் திருவிழாவில் கலந்து கொள்கிறார்கள்.

எனவே, தமிழக மீனவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த கோயில் திருவிழாவில் கலந்து கொள்ள மத்திய அரசு தடையில்லா சான்றிதழ் வழங்கி, அவர்கள் சென்று வர அனைத்து பாதுகாப்பு வசதிகளையும் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# கருணாநிதி இரண்டு நாள்களில் வீடு திரும்புவார்

## கனிமொழி தகவல்

சென்னை, டிசெ.04

மருத்துவமனையில் இருந்து இரண்டு நாள்களில் தி.மு.க. தலைவர் கருணாநிதி வீடு திரும்புவார் என்று மாநிலங்களவைத் தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கூறியுள்ளார்.

ஊட்டச்சத்து, நீர்ச்சத்து குறைபாட்டின் காரணமாக, சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள காவேரி மருத்துவமனையில் கருணாநிதி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கருணாநிதிக்கு மருத்துவக் குழுவினர் தொடர் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

ராஜாத்தி அம்மாள், மகள்கள் செல்வி, கனிமொழி ஆகியோர் அருகில் இருந்து கருணாநிதியைக் கவனித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கருணாநிதியின் உடல் நிலை தொடர்பில் கனிமொழி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

கருணாநிதி நலமுடன் உள்ளார். இரண்டு அல்லது மூன்று



நாள்களில் அவர் வீடு திரும்புவார் என்று தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, மருத்துவமனையில் கருணாநிதியைச் சந்தித்த துரைமுருகன் தெரிவித்துள்ளதாவது:-

கருணாநிதி நலமுடன் உள்ளார். உணவு சாப்பிடுகிறார். மருத்துவமனையில் இருந்து அவர் வீடு திரும்புவது தொடர்பாக மருத்துவர்கள் முடிவு செய்வர். ஓய்வுக்காக கருணாநிதி பெங்களூருக்குச் செல்ல வில்லை என்று தெரிவித்துள்ளார்.

# கச்சதீவு அந்தோனியார் ஆலய விழாவில் பங்கேற்போம்!

## இராமேஸ்வரம் மீனவர்கள் அறிவிப்பு

இராமேஸ்வரம், டிசெ.04

அந்தோனியார் ஆலய திறப்பு விழாவில் பங்கேற்க தடையை மீறிக் கச்சதீவுக்கு செல்வோம் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று அறிவித்துள்ளனர்.

தமிழக மீனவர்களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் பிரச்சினைக்குரிய இடமாக கச்சதீவு இருந்து வருகிறது.

இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாவில் தமிழகம் மற்றும் இலங்கையை சேர்ந்த பக்தர்கள், மீனவர்கள் பங்கேற்பது வழக்கம்.

கச்சதீவில் தற்போது புதிதாக புனித அந்தோனியார் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயப் புனிதப்படுத்தும் விழா எதிர்வரும் 7 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

இதில் தமிழக மீனவர்கள் உள்ளிட்ட 100 பேர்பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று இந்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டது.

இது தொடர்பாக தமிழக அரசின் தலைமைச் செயலாளர் இராமமோகனராவ், மத்திய அரசுக்கும் கடிதம் எழுதினார்.

இந்நிலையில், டில்லியில் வெளியுறவுத்துறை அமைச்சக் செய்தி தொடர்பாளர் விகாஷ் ஸ்வரப், கச்சதீவில் நடைபெறும் விழாவில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்க அனுமதியில்லை என்றும், இலங்கைப் பக்தர்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது இராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து இராமேஸ்வரம்



மீனவர் சங்க தலைவர் ஜேசுராஜா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளதாவது:-

கச்சதீவு செல்வதற்குத் தமிழக மீனவர்களுக்கு எப்போதுமே உரிமை உண்டு.

இந்த நிலையில் கடந்த 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர்இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போர் காரணமாக கச்சதீவு செல்வதில் தமிழக மீனவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து இராமேஸ்வரம் துறைமுகத்தில் புனித அந்தோனியார் ஆலயத்தை அமைத்து வழிபாடு நடத்தப் பட்டது. கடந்த 5 ஆண்டுகளாக மீண்டும் கச்சதீவுக்குச்சென்றுஅந்தோனியார் ஆலய விழாக் களில் கலந்து கொள்கிறோம்.

ஆனால் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத் திறப்பு விழாவில் தமிழகத்தில் இருந்து பங்கேற்க அனுமதி இல்லை என்று மத்திய அரசு கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.

சிறுபான்மைச் சமுதாய மக்களின் மனதைப் புண்படுத்தும் இந்த நடவடிக்கையை முறியடிப்போம்.

எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறும் கச்சதீவு ஆலயத் திறப்பு விழாவுக்கு நாங்கள் தடையை மீறிச் செல்வோம் என்றும் இராமேஸ்வரம் மீனவர்கள் கூறியுள்ளனர்.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம்

## நோயாளர் நலன் கருதி கடற்படையினர் அமைப்பு



யாழ்ப்பாணம், டிசெ.04

யாழ். போதனா வைத்திய சாலையில் இலங்கைக் கடற் படையினரால் அமைக்கப்பட்ட குடிதண்ணீர்ச் சுத்திகரிப்பு நிலையம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்தக்குடி தண்ணீர்ச் சுத் திகரிப்பு நிலையத்தை வட மாகாண கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் பியல் டி சில்வா உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

சுத்தமான குடிதண்ணீரை அனைவரும் பெறும் நோக்கு எனும் தொனிப்பொருளில் கடற்படையினரால் முன்னெ டுக்கப்பட்ட இந்தத் திட்டம் முதல் கட்டமாக யாழ். பல்க லைக் கழகத்தில் ஜனாதிபதி யால் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தை கடற் படையினர் பதினைந்து லட்சம் பெறுமதியில் மேற்கொண்டுள் ளனர்.

நாட்டிலுள்ள அனைத்துக் கடற்படையினரும் தமது ஒரு நாள் வேதனத்தை இந்தத் திட் டத்துக்காக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைய இது அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-12)

# சிறுமி துஷ்பிரயோகம் குறித்து பொலிஸார் அலட்சியப் போக்கு!

## கொதிக்கிறார் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்

அம்பாறை,டிசெ.04

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வாரம் துஷ்பிரயோகத் துக்கு ஆளான சிறுமி ஒருவர் தமது தந்தையுடன் சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்திருந்தார்.

ஆனால் முறைப்பாடுசெய்து நான்கு நாள்களாகியும் சந்தேக நபர் கைது செய்யப்படவில்லை. பொலிஸாரே இவ்வாறு அலட் சியமாக நடந்து கொண்டால், இந்த நாட்டின் சிறுவர்களை எவ்வாறு பாதுகாப்பது?

இவ்வாறு கேள்வி எழுப்பி யுள்ளார் மனித உரிமைகள் செயற் பாட்டாளர் பொ.ஸ்ரீகாந்த்.

அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ் பிரயோகங்கள் தொடர்பில் ஊட கங்களுக்குக் கருத்துத் தெரி விக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள் ளார்.

13வயது பாடசாலை மாணவி ஒருவரை 50 வயது குடும்பஸ் தர் ஒருவர் தொடர்ச்சியாகத் துஷ்பிரயோகம் செய்திருந்தார்.

இது தொடர்பில் அந்த மாணவி தனது தந்தையுடன் நேரில் சென்று பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். எனினும் இது தொடர்பில் இது வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்திருந்தும் மனித உரிமை ஆணைக்குழுவும் பிராந்திய அலுவலகம் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலர்கள் இது தொடர்பில் உரிய நடவ டிக்கை எடுக்கவில்லை.

இவர்கள் சிறுவர்தின மேடை களில் முழங்கி விட்டு, ஊர்வ லத்தை நடத்தினால் மட்டும் சி றுவர்களைப் பாதுகாத்து விட முடியுமா?

இது குறித்துப் பொலீஸ்மா அதிபருக்கும், ஜனாதிபதிக்கும் முறையிடவுள்ளேன்.- என்றார். (ச)

# மட்டுநகர் வீதிகளுக்கு 'காப்பெற்' ரூபா 20 கோடி நிதி ஒதுக்கீடு



மட்டக்களப்பு, டிசெ.04

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட 19 ஆயிரத்து 150 மீற்றர் நீளமான வீதிகளை 20 கோடி ரூபா செலவில் 'காப் பெற்' வீதிகளாக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்த வேலைத் திட்டம் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.கிரி தரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். முதற் கட்ட வேலைத்திட்டங்கள் நிறைவுற்றதும் இரண்டாம் கட் டத்தில் ஏனைய வீதிகளும் புனரமைக்கப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (ச)

# கன்னியா முக்கொலை: சந்தேகநபருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, டிசெ.04

திருகோணமலை கன்னியா பிரதேசத்தில் மனைவி மற்றும் இரு மகள்களைக் கொலை செய் தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரைத் தொடர்ந்து எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை கன்னியா கிளிக்குஞ்சுமலைப் பகுதியில் வசித்து வந்த ராஜலக்ஷ்மன் நித்தியா, அவரது இருமகள்களான காயத்திரி (வயது 10), சந்தியா (வயது 8) ஆகியோரே இவ்வாறு கொலை செய்யப்பட்டனர். இந் தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ராஜலக்ஷ்மன் (வயது 36) என்பவரே விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.(ச)

# மாற்றுத் திறனாளிகளுக்கு அமுதசுரபி செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.04

ஒளிரும் வாழ்வு மாற்று வலுவுடையோர் அமைப்பு, மாற் றுத் திறனாளிகள், போரில் பிள்ளைகள் இழந்தோர், போரில் பெற்றோரை இழந்தோர் ஆகி யோரின் நலனைக் கருத்தில் கொண்டு "அமுத சுரபி" செயற் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள் ளது. எதிர்வரும் 17ஆம் திகதி முல்லைத்தீவில் இந்தத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட வுள்ளது.

இது தொடர்பாக ஒளிரும் வாழ்வின் நிறுவனத்தின் செயலாளர் அம்பிகைபாலன் தெரிவிக்கையில்:-

போரின் பின்னர் மாற்றுத் திறனாளிகளுக்குச் சரியான வாழ்வாதாரங்கள் கிடைக்க வில்லை.

கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் பல மாற்றுத்திறனாளிகள் மிகுந்த சவால்களை எதிர்நோக்குகின்ற னர். அடிப்படை வசதிகள், முழுமை பெறாத வீட்டுத் திட் டங்கள், குடி தண்ணீர்ப் பிரச் சினை, மலசலகூட வசதிகள் இன்மை எனப் பல பிரச்சினைக ளுக்கு முகம் கொடுக்கும் இவர் களுக்குச் சரியான முறையில் உதவிகள் கிடைக்கப் பெறுவ தில்லை. முல்லைத்தீவு மாவட் டத்தில் 2 ஆயிரத்துக்கும் அதிக மான மாற்றுத் திறனாளிகள் உள் ளனர். இவர்களின் மலர்ச்சிக்காக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப் படுகிறது.-என்றார். (ஐ-12)

# தினசரி ராசி பலன் 04.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 6.15 – 7.15 |
| | மாலை : 3.15 – 4.15 |
| ராகு காலம் | : 4.30 – 6.00 |
| குளிகன் | : 3.00 – 4.30 |
| எமகண்டம் | : 12.00 – 1.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் – மேல்நோக்கு நாள்

**மேஷம்:** பாராட்டு - உழைப்புக்குத் தகுந்த பாராட்டுகள் வரும் நன்னாள்.

**ரிஷபம்:** சிக்கல் - சிதறிய சிந்தனைகளாலும் அலட்சியங்களாலும் அவதிப்படும் நன்னாள்.

**மிதுனம்:** மறதி - இன்று நீங்கள் செய்யும் செயல்களில் ஞாபகம் சற்றுக் குறைவாக இருக்கும் நாள்.

**கடகம்:** போட்டி - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் மற்றவர்களிடம் வீண் பேச்சை குறைத்து நிதானத்துடன் செயல்பட வேண்டிய நன்னாள்.
சந்திராஷ்டமம்: பூசம்

**சிம்மம்:** நட்பு - நண்பர்களின் அரவணைப்பு கிடைத்து நலம் நல்கும் நன்னாள்.

**கன்னி:** லாபம் - அதிஷ்டங்கள் மறைமுக வரவுகளாக வளம் நல்கும் நன்னாள்.

**துலாம்:** பயம் - எடுத்த காரியங்களில் தளர்வு கண்டு மனம் சோர்வடையும்.

**விருச்சிகம்:** கோபம் - அசுர குணம் மிளிரும். அன்பு குறையும் அனைவரிடத்திலும் அமைதியுடன் விலக நலம் கிடைக்கும்.

**தனுசு:** சோர்வு - உழைப்பால் மனதாலும், உடலாலும் சோர்வு ஏற்படும் நாள்.

**மகரம்:** பெருமை - இன்று திடீர் புகழாரம் தங்கள் வாசல் நாடி வரும் நன்னாள்.

**கும்பம்:** சாதனை - சிந்திக்கும் சிந்தனைகளால் செய்யப்படும் அனைத்து காரியங்களும் சாதனைகளாக மாறும் நன்னாள்.

**மீனம்:** குழப்பம் - மனதின் எண்ணங்கள் தடுமாறும் ஆதலால் செயல்களில் சிறப்புகள் குறையும்.

# நுவரெலியாவாக மாறிய மட்டக்களப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகள் நேற்றுக் காலை நுவரெலியா போன்று காட்சியளித்தன. பனி மூட்டத்தின் காரணமாக வீதிகளில் மக்கள் நடமாற்றம் மிகக் குறைவாகவே இருந்தது.

## கோஹ்லி தலைமையிலான இந்திய அணி

# வெளிநாட்டிலும் ஜொலிக்கும்






டில்லி, டிசெ.04

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணி தரமான வேகப்பந்து வீச்சாளர்களைக் கொண்டுள்ளது. கங்குலி தலைமையிலான இந்திய அணியைப் போன்று, தற்போதைய இந்திய அணியும் வெளிநாட்டு மண்ணில் வெற்றி பெறும் என முன்னாள் அதிரடி தொடக்க வீரரான வீரேந்திர சேவாக் தெரிவித்துள்ளார்.

கோஹ்லி தலைமையிலான இந்திய அணி டெஸ்ட் போட்டியில் தொடர்ந்து அசத்தலாக விளையாடி வருகிறது. தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை தலா 3-0 என்ற கணக்கில் வென்ற இந்திய அணி, தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது.

இந்த நிலையில் சேவாக் இது தொடர்பில் மேலும் கூறியிருப்பதாவது:-

கோஹ்லி தலைமையிலான தற்போதைய இந்திய அணி ஆசியாவுக்கு வெளியிலும் டெஸ்ட் தொடரை வெல்லக்கூடிய தரத்தையும், திறமையையும் கொண்டுள்ளது.

கங்குலி தலைமையிலான இந்திய அணி 2000 முதல் 2004 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் போட்டிகளை வென்றது. அந்த அணியின் அளவுக்கு கோஹ்லி தலைமையிலான இந்திய அணியும் சிறப்பாக ஆடும்.

இந்திய அணி வலுவான துடுப்பாட்டத்தைக் கொண்டுள்ளது. அதை கோலி முன்னின்று வழிநடத்தி வருவதை நாம் அனைவரும் பார்த்து வருகிறோம். அதேநேரத்தில் விக்கெட்டை வீழ்த்துவதற்கு சிறந்த பந்துவீச்சாளர்கள் தேவை.

இந்திய அணியில் இப்போது முகமது சமி போன்ற தலைசிறந்த பந்து வீச்சாளர்கள் இருக்கிறார்கள். இதேபோல் இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ் ஆகியோரும் இந்தியாவுக்கு வெற்றி தேடித்தரக்கூடிய திறமை வாய்ந்தவர்கள். அதனால் சொந்த மண்ணில் வெற்றிகளைக் குவித்திருக்கும் இந்திய அணியால், நிச்சயம் வெளிநாட்டு மண்ணிலும் வெற்றிபெற முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

## அஸ்வின், ஜடேஜா, சமி, உமேஷ் யாதவ்



# ஓய்வு

மும்பை, டிசெ.03

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரில் இந்திய அணியில் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, முகமது சமி, உமேஷ் யாதவ் ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. 5 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் 3 போட்டிகள் முடிந்து விட்டன. இதில் இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. 4ஆவது டெஸ்ட் போட்டி வருகிற 8 ஆம் திகதி மும்பையில் ஆரம்பமாகவுள்ளது.

டெஸ்ட் தொடர் முடிந்த பின்னர் இரு அணிகளும் 3 ஒருநாள் போட்டிகளில் மூன்று 20 ஓவர் போட்டிகளிலும் விளையாடவுள்ளன. இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரில் இந்திய அணியில் முன்னணி பந்து வீச்சாளர்களுக்கு ஓய்வு அளிக்க தேர்வு குழு முடிவு செய்து இருக்கிறது. அந்த வகையில், சுழற்பந்து வீச்சாளர்களான அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, வேகப் பந்து வீச்சாளர் முகமது சமி, உமேஷ் யாதவ் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்படவுள்ளது.

இங்கிலாந்து தொடர் முடிந்த பின்னர் இந்திய அணி பங்களாதேஷ், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களிலும் விளையாடுகிறது. இந்த தொடருக்காக இங்கிலாந்துக்கு எதிரான ஒரு நாள் போட்டியில் 4 முன்னணி பந்து வீச்சாளர்களுக்கு ஓய்வு கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் புத்துணர்வுடன் டெஸ்ட் தொடரில் விளையாட முடியும் என்று கருதி தேர்வுக் குழு முடிவு செய்து இருக்கிறது. ஒரு நாள் போட்டித் தொடர் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

## இலங்கை அணிக்கு இரு புதிய பயிற்றுவிப்பாளர்கள்!

கொழும்பு, டிசெ.04

இலங்கை கிரிக்கெட் அணிக்கு இரண்டு புதிய பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் ஹசான் திலகரட்ன இலங்கை அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை உப்புல் சந்தன இலங்கை அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## இந்த ஆண்டின் சிறந்த தடகள வீரருக்கான விருது உசைன் போல்ட் வசமானது

மொனோகோ, டிசெ.04

ஜமைக்காவின் மின்னல் மனிதர் என்று அழைக்கப்படும் உசைன் போல்ட் இந்த ஆண்டுக்கான ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரர் என்ற விருதைப் பெற்றுள்ளார்.

தடகளப் போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ஆண்டு தோறும் IAAF World Athlete என்ற விருது வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இந்த ஆண்டுக்கான சிறந்த தடகள வீரர்களுக்கான விருது வழங்கும் விழா மொனோகோவில் நடைபெற்றது. இதில் ஏராளமான வீரர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், இந்த ஆண்டின் ஆண்களுக்கான சிறந்த தடகள வீரர் உசைன் போல்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



## ஆஸ்திரேலியா – நியூசிலாந்து மோதும் ஒரு நாள் கிரிக்கெட் சிட்னியில் இன்று

சிட்னி, டிசெ.03

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகள் மோதும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி சிட்னியில் இன்று இடம்பெறவுள்ளது.

வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து கிரிக்கெட் அணி குறுகிய கால சுற்றுப்பயணமாக ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளது.

அங்கு சேப்பல்-ஹாட்லி கோப்பைக்கான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் ஆடுகிறது. இதன்படி முதலாவது ஒரு நாள் போட்டி சிட்னியில் இன்று இடம்பெறவுள்ளது

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வென்ற கையோடு நியூசிலாந்து வீரர்கள் ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டு விட்டனர்.

அதனால், இங்குள்ள சூழலுக்கு ஏற்ப தங்களை விரைவில் மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பார்வை பிரச்சினை காரணமாக ரோஸ் டெய்லருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. சுழற்பந்து வீச்சாளர் டாட் ஆஸ்டில், மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத்தில் பந்துவீசக்கூடிய லோக்கி பெர்குசன் ஆகிய புது வரவுகளை நியூசிலாந்து துருப்பு சீட்டாக பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

ஒரு நாள் போட்டி அணிகளின் தரவரிசையில் தற்போது முதல் 4 இடங்களில் முறையே ஆஸ்திரேலியா (118 புள்ளி), தென்னாபிரிக்கா (116 புள்ளி), நியூசிலாந்து (112 புள்ளி), இந்தியா (111 புள்ளி) ஆகிய அணிகள் உள்ளன. இந்த தொடரை ஆஸ்திரேலியா முழுமையாக வென்றால் அதன் புள்ளி எண்ணிக்கை 120 ஆக உயரும். நியூசிலாந்து 109 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்துக்கு சரியும். அதே சமயம் நியூசிலாந்து 3-0 என்ற கணக்கில் கைப்பற்றினால் ஆஸ்திரேலிய அணி 115 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்துக்கு இறங்கும். நியூசிலாந்தின் புள்ளி எண்ணிக்கை 115 ஆக இருக்கும்.

இந்தப் போட்டி இலங்கை நேரப்படி காலை 8.50 மணிக்கு ஆரம்பமாகிறது.

### பஸ் எரிப்பு, கல் வீச்சுக்கள் தொடர்கின்றன

# சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தால் கடும் நடவடிக்கை என அரசு எச்சரிக்கை

தனியார் போக்குவரத்து துறையினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட போது சேவையில் ஈடுபட்ட இ.போ.ச பேருந்துகள் பரவலாக தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில், அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்களுக்குஎதிராககடும்நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் எச்சரித்துள்ளது.

போக்குவரத்து விதிகள் மீறலுக்கான தண்டப்பணத்தை 25 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவதற்கு2017ஆம்ஆண்டுக்கான பட்ஜெட்டில் யோசனை முன்வைக்கப்பட்டதற்கு எதிராக தனியார் போக்குவரத்து துறையினர் கடந்த இரு தினங்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது சேவையில் ஈடுபட்ட இ.போ.ச. பேருந்துகள் மீது நாட்டின்பலஇடங்களிலும்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பு ஏறாவூரிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்து மீது ஊறணியில் கல் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் பேருந்தின் கண்ணாடி ஒன்று உடைந்து சேதமுற்றது. அந்தப் பேருந்தில் 10 பேர் வரையானோர் பயணித்துக்கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம்பெற்றது.

மேலும், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பேருந்து மீது வவுனியாவில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்தப் பேருந்து வவுனியா 2 ஆம் குறுக்குத் தெரு சந்தியில் பயணித்துக்கொண்டிருந்த போது இரவு 7.45 மணியளவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் பேருந்தின் பக்க மற்றும் பின்பக்க கண்ணாடிகள் சேதமடைந்தன.

இதேபோன்று தென்னிலங்கையின் பல இடங்களிலும் அரச பேருந்துகள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றன.

அரச பேருந்துகள் மட்டுமன்றி தனியார் பேருந்துகளும் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன. திருகோணமலை 4 ஆம் கட்டைப் பகுதியில் வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிந்த தனியார் பேருந்து ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை அதிகாலை 1.00 மணியளவில் இந்த தனியார் பேருந்து அடையாளம் தெரியாத நபர்களால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு – திருகோணமலை சேவையில் ஈடுபடும் அந்தப் பேருந்து அதன் உரிமையாளரது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது, பேருந்தின் பின்புறச் சில்லில் மூட்டப்பட்ட தீயின் காரணமாகவே பேருந்தில் தீப்பற்றியிருப்பதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலமாக தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைகாத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு பேருந்து மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பயணி ஒருவர் சிறு காயமடைந்ததார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பஸ்கள் உள்ளிட்ட அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

அரசாங்க தகவல் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச பஸ்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பாகதற்போது பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம)

## சுமந்திரனுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் ஒருவரை நடுநிலையாளராகவைத்துக்கொண்டுதொலைக்காட்சி, சமூகவலைத் தளங்கள் ஊடாக நேரடி ஒலி, ஒளிபரப்புச் செய்யும் வசதியுடன் ஒரு நேரடி விவாதத்துக்கு வரவேண்டும்." – இப்படி 'காலைக்கதிர்' தனது நேற்றைய பத்திரிகையில்எழுதிய ஆசிரிய தலையங்கத்துக்குப் பச்சைக்கொடி காட்டித் தாம் தயார் என அறிவித்திருக்கிறார் கஜேந்திரகுமார்.

தற்போதைய தீர்வு முயற்சிகளில் தமிழர்களின் மாற்ற முடியாத அபிலாஷைகளான சமஷ்டி, இறையாண்மை, தாயகம் ஆகிய கோட்பாடுகள் சிதறடிக்கப்பட்டுவிட்டன என்ற குற்றச்சாட்டு கஜேந்திரகுமாரினாலும் சிலபிறதரப்புக்களினாலும் பகிரங்கப்படுத்தப்பட்டு வருகையில் – தமிழர்கள் சார்பில் தீர்வு முயற்சிகளில் பிரதான பங்களிப்பு வழங்கி வரும் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. அது குறித்து மக்களுக்கு கருத்துக்களை விளக்கும் வகையில் கஜேந்திரகுமாருடன் பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும் என 'காலைக்கதிர்' தனது ஆசிரிய தலையங்கத்தில் கோரியிருந்தது.

'சுமந்திரன் – கஜேந்திரகுமார் இருவருமே திராணி உள்ள தலைவர்கள். இதற்கு பின் நிற்க மாட்டார்கள்' – என்றும் 'காலைக்கதிர்' ஆசிரிய தலையங்கம் இரு தலைவர்களுக்கும் மகுடம் சூட்டி இருந்தது.

நேற்று 'காலைக்கதிர்' ஆசிரிய பீடத்துடன் தொடர்புகொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காலைக்கதிரின் கோரிக்கைக்கு தாம் தயார் என்ற தகவலைத் தெரியப்படுத்தினார்.

"ஒரு விவாதம் அல்ல. ஒரு தொடர் விவாதமே அவசியம் என நான் நினைக்கின்றேன். அதற்கு நான் தயார். அண்மையில்திருநாவுக்கரசு அவர்களின் புத்தக வெளியீட்டில் பரிமாறப்பட்ட கருத்துக்களை அடுத்து, இவ்விடயங்கள் குறித்து பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சுமந்திரன் அவர்களுக்கு கோரிக்கை விடுத்து வந்தேன். ஆனால் அவர் பதிலளிக்கவில்லை. எனினும் அவரது கனிஷ்ட சட்டத்தரணிநிரான் அங்கிட்டல் பதிலளித்தார். தேர்தல்களில் நிராகரிக்கப்பட்டவர்களுடன் விவாதம் செய்யும் தேவை இல்லை என்று அவர் கூறினார்" – இப்படி கஜேந்திரகுமார் காலைக்கதிருக்குத் தெரிவித்தார். (உ)

## பொதுபல சேனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுபலசேனாவின் செயலாளரான வண. கலகொட அத்தஞானசாரதேரர்தலைமையிலான குழுவினரே நேற்று மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டம் செய்யத் திட்டமிட்டிருந்தனர். அவர்கள் ஏறாவூர் நகர், புன்னைக்குடா ஆகிய இடங்களுக்கும் ஏறாவூர் பற்றுப் பிரதேசத்தை அண்டிய பதுளைவீதியில்அரசமரம்உள்ள தனியார் காணி ஒன்றுக்கும் செல்லவிருந்தனர் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் தரப்பில் கூறப்பட்டிருந்தது.

மேற்படி குழுவினரின் நடவடிக்கையால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்றும் எனவே இனவெறுப்புணர்வைத்தூண்டும் இந்த ஒன்று கூடலுக்குத் தடைவிதித்த பொழுதும் கரடியனாறு பொலிஸார் நேற்றுக் காலை நீதிமன்றத்தில் மனுச் செய்தனர்.

இந்த மனுவை ஆராய்ந்த பதில் நீதிபதி ஆதம் லெப்பை மஹம்மத் முனாஜ் வெறுப்புணர்வைத் தூண்டும் – இந்த ஒன்று கூடலைத் தடுக்கும் தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

தடை உத்தரவுகையில்கிடைத்ததும் மட்டக்களப்புப் பொலிஸார் துரிதமாக நடவடிக்கை எடுத்தர். மக்கள் நகரில் கூட்டமாகக் கூடுவதைத் தடுப்பதில் அவர்கள் முனைப்புடன் ஈடுபட்டனர்.

## மட்டு. தேரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்களையும் – குறிப்பாக இளைஞர்களையும் – திரட்டிக் கொண்டு வண. சுமணரத்ன தேரர் மங்களராமய விகாரையை விட்டுத் திடீரென ஆர்ப்பாட்ட ஊர்வலமாக மட்டக்களப்பு நகரை நோக்கி முன்னேற முயற்சித்தார்.

பதற்ற நிலை காரணமாக ஏற்கனவே மட்டக்களப்பு நகரில் குவிக்கப்பட்டிருந்த பொலிஸார், வண. சுமணரத்ன தேரரின் அணியை வழிமறித்துத் தடுத்தனர். அவர்களோடு வாக்குவாதத்தில் ஈடுபட்ட வண. சுமணரத்ன தேரர், பொலிஸார் போட்டிருந்த தடுப்புக்கள் மீது ஏறி அவற்றையும் தாண்டி, பலவந்தமாக ஊர்வலம் செல்ல முயன்றார். அதனால் அப்பகுதியில் பெரும் பதற்றமும் களேபர நிலையும் ஏற்பட்டன.

நேற்று மாலை வரை மட்டக்களப்பில் பதற்றநிலைமை நீடித்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ)

## அடிப்படையே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் இரா. சம்பந்தனையும், அதன் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனையும் நோக்கிப் பாய்ந்திருக்கின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும், முன்னாள் எம்.பியும், தமிழ்க் கூட்டமைப்பின் முன்னாள் பேச்சாளருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு காட்டமாக அவர் கருத்துக்களை வழங்கினார். அங்கு அவர் குறிப்பிட்ட விடயங்களின் சாரம் வருமாறு:-

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வடக்கு – கிழக்கு இணைப்பு இப்போதைக்குச் சாத்தியமில்லை என்று கூறிவிட்டார். நாங்கள் தமிழர்களின் இறையாண்மையைக் கோரவில்லை என்றும் நாடாளுமன்றில் அறிவித்துவிட்டார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படைகள் குறித்து தேர்தல் காலத்தில் எமது மக்களுக்கு சில வாக்குறுதிகளைக் கூட்டமைப்பு வழங்கியிருந்தது.

வடக்கு – கிழக்கு இணைந்திருக்க வேண்டும். தமிழர்களின் இறையாண்மையை – சுயநிர்ணய உரிமையை – ஏற்றுக் கொள்ள வேண்டும். சமஷ்டி முறைமை அமைய வேண்டும். – இவை எல்லாம் உள்ளடக்கிய சுயாட்சிப் பொறிமுறையையே ஏற்றுக் கொள்வோம். – என்று தேர்தல் காலத்திலும் பின்னரும் மக்களிடம் திரும்பத் திரும்பக் கூட்டமைப்பினராகிய நாம் கூறினோம்.

இவைதான் தீர்வுக்கு அடிப்படை. இவை இல்லாத யோசனையைத் தொட்டும் கூடப் பார்க்க மாட்டோம் என்று வீறாப்புப் பேசினோம்.

எங்களுக்குப் பெரும்பான்மை வெற்றியைத் தாருங் கள். இந்த அடிப்படையில் உறுதியுடன் பேச்சுக்களில் கலந்து கொண்டு உரியதைப் பெற்றுத் தருவோம் என்றோம். மக்கள் திரண்டு வாக்களித்து, அந்த வெற்றியையும் ஆணையையும் தந்தார்கள்.

2016 இற்குள் தீர்வு வரும் என்றார் சம்பந்தன் ஐயா. மேற்படி தேர்தலின் போது குறிப்பிட்ட விடயங்களை விட்டுக் கொடுக்காமல் பேசுவோம் என்றார்.

அந்தத் தேர்தலில் கூறப்பட்ட விடயங்களை மேற்கோள் காட்டி தமிழ் மக்கள் பேரவை ஒரு யோசனையை வெளியிட்டது.

அப்போது, அதற்குப் பதில் தரும் விதத்தில், தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாத தீர்வை நாங்களும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று வீறாப்புப் பேசினார் சம்பந்தன் ஐயா.

இப்போது என்ன நடந்திருக்கின்றது?

ஒரு வருடத்துக்கு மேல் அரசுடன் மூடு மந்திரமாகப் பேச்சு நடத்தினீர்கள். பேச்சுக் குறித்து உதடுகளை இழுத்து மூடி, வாயைக் கட்டி மௌனம் சாதித்தீர்கள்.

என்ன அடிப்படையில் பேசுகின்றீர்கள், என்ன பேசுகின்றீர்கள், உண்மையை மக்களுக்குச் சொல்லுங்கள் என்றெல்லாம் நாம் திரும்பத் திரும்பக் கூறிய போது எங்களைக் குழப்பக்காரர்களாக அடையாளப்படுத்த முயன்றீர்கள்.

'தயவுசெய்து குழப்பாதீர்கள்', 'இரகசியமாகப் பேசவிடுங்கள்', 'பேச்சு நடவடிக்கைகளுக்கு ஆப்பு வைக்காதீர்கள்' – என்றெல்லாம் கூறினீர்கள்.

இப்போது என்ன நடந்திருக்கின்றது?

இணைப்பு இப்போதைக்கு இல்லை என்றாகிவிட்டது. தமிழ், தாயகம் என்ற நனவு, கனவாகி விட்டது. இறையாண்மையைக் கேட்கமாட்டோம் என்று நாமே நாடாளுமன்றத்தில் கூறிவிட்டோம். சுயநிர்ணய உரிமை என்ற பேச்சே இல்லை, சமஷ்டி கிடையவே கிடையாது என்று ஜனாதிபதி, பிரதமர் முதற்கொண்டு அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல வரை அரசுத்தரப்பில் எல்லோரும் அறிவித்துவிட்டனர்.

எங்கள் அடிப்படை எல்லாமே தகர்ந்துவிட்டன. இனியும் என்ன முகத்துடன், எதைப்பேசிக்கொண்டிருக்கின்றீர்கள்?

உரிய வேளை (Hi-Time) வந்துவிட்டது – மக்களிடம் உண்மையைச் சொல்வதற்கான சமயம் வந்துவிட்டது. இனியும் நீங்கள் மௌனம் காக்கக்கூடாது; மௌனம் காக்கமுடியாது.

வெளிப்படைத் தன்மை இல்லாமல் பல விடயங்கள் நடந்து கொண்டு செல்கின்றன. உண்மைகளை வெளிக்கொணர வேண்டிய தேவையும் கட்டாயமும் வந்துவிட்டன.

தீர்வுத் திட்டத்தை உள்ளடக்கிய அரசமைப்பு யோசனை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறுகின்றமையை அரசுக்கு நேரத்துடனேயே உறுதிப்படுத்திக் காட்டுவதற்காக, வரவு – செலவுத் திட்டத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் வெற்றி பெறச் செய்வோம் என்று தீர்மானித்தீர்கள். இதற்காக கூட்டமைப்பின் எம்.பிக்களை, அவர்களின் விருப்பத்துக்கும் மாறாக வற்புறுத்தி, வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கி வாக்களிக்கச் செய்தீர்கள். ஆனால் வரவு – செலவுத் திட்டம் முழுமையாக நிறைவேற முன்னரே தங்களுடைய புத்தியை தென்னிலங்கை காட்டிவிட்டது. தீர்வு முயற்சியில் அதன் தொனியும் போக்கும் மாறிவிட்டன.

சம்பந்தன் ஐயா தங்களுக்கு சர்வதேச ஆதரவு இருக்கின்றது என்றார். இந்தியாவின் பக்க பலம் இருக்கின்றது என்றார். அமெரிக்காவும் கூட தங்களுடன் நிற்கின்றது என்றார். ஆனால் நடந்தது என்ன?

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின்படி 18 வருடங்கள் நடைமுறையில் இருந்த வடக்கு – கிழக்கு இணைப்பு இன்று இல்லை என்றாகிவிட்டது.

இணைப்பு இல்லை என்பது இலங்கை – இந்திய ஒப்பந்தத்தைக் கேலிக்கூத்தாக்கும் செயல்.

இணைப்பு இல்லை என்பது குறித்து கூட்டமைப்புத் தலைமை இந்தியாவிடம் ஆட்சேபத்தைத் தெரிவித்ததா? இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட இணைப்பை உறுதிப்படுத்தும்படி இந்தியாவிடம் கேட்டதா? அந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு தரும்படி வற்புறுத்தியதா? அப்படிச் செய்ய முடியாது என இந்தியா மறுத்ததா? இவை குறித்தெல்லாம் தமிழ் மக்களுக்கு கூட்டமைப்பு பதில் கூறவேண்டிய வேளை வந்துவிட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் கூட அம்பாறையை ஊவாவுடன் இணைத்துவிட்டு, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறையை உள்ளடக்கிய பிரதேசத்தைத் தனியான தென்கிழக்கு அலகாகப் பிரித்துவிட்டு, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களை வடக்கு மாகாணத்துடன் இணைக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டதே–

அப்படி இருக்கையில் 18 ஆண்டுகள் தொடர்ந்து சாத்தியமாக இருந்த இணைப்பை, ஏதோ சட்டக் காரணங்களைக் காட்டித் தடுத்துவிட்டு, இனி இணைப்பு இல்லை என்று இன்றைய அரசு கூறினால், அதை ஏற்றுக்கொண்டுஎந்த முகத்துடன் நீங்கள் இணைக்கப் பேச்சு பேசுகின்றீர்கள்? எப்படித் தொடர்ந்து பேசமுடியும்?

ஆகவே, இனியும் இந்த ஒளிவு மறைவுப் பேச்சு வேண்டாம்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசுடன் பேசுங்கள்.

தமிழ் மக்களின் அடிப்படை அம்சங்களை முன்னிறுத்திப் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வாருங்கள். அந்த இணக்கம் நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை அந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.

சர்வதேச அரசு உங்களுக்கு இருக்கின்றது என்பது உண்மையானால், அப்படி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் நேரடியாக விடயங்களைப் பேசித் தீர்மானிப்பதில் சிக்கல்கள் ஏதும் இல்லை.

அப்படித் தீர்மானித்த பின்னர், அதனை உள்ளடக்கிய அரசமைப்பைக் கொண்டு வருவது குறித்து ஆராயலாம். – என்றார். (உ)

காலைக்கதிர்
Kalaikkathir

## பொலனறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லைப் பிரதேசமான ரிதென்னப் பகுதியில் வைத்து நேற்றுப் பகல் பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அதனால் அந்தப் பிரதேசத்திலும் பெரும் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

பொதுபலசேனா மற்றும் பல பேரினவாத அமைப்புக்களைச் சேர்ந்த பிக்குமாரும் மற்றும் தீவிர ஆதரவாளர்களுமே இவ்வாறு மட்டக்களப்புக்கு விரைந்து கொண்டிருக்கையில் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டனர்.

தாம் பூஜை ஒன்றுக்காகவே அங்கு செல்கிறார்கள் எனப் பொலிஸாருடன் வண. ஞானசார தேரர் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போதும் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய தம்மால் அவரை மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்க முடியாது எனப் பொலிஸார் பதிலளித்தனர்.

இந்நிலையில் வீதியை மறித்து தங்கள் வாகனங்களை நிறுத்தி வீதியில் அமர்ந்து அவர்கள் போராட்டம் செய்தமையால் அங்கு போக்குவரத்துத் தடை ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களைச் செய்தி எடுக்க வேண்டாம் என்றும், மீறிப் படம் எடுத்தால் கமெரா உடைக்கப்படும் என்று பொதுபலசேனா அமைப்பைச் சேர்ந்த இளைஞர் குழு அச்சுறுத்தியது.

நீதிமன்ற உத்தரவையும் மீறி வெறுப்புணர்வைத் தூண்டும் சட்ட ரீதியற்ற ஒன்றுகூடல் நிகழுமாயின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸாரால் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்துமட்டக்களப்புக்குச் செல்லும் திட்டத்தைக் கைவிட்டு தென்னிலங்கை திரும்ப அக்குழுவினர் முடிவு செய்தனர் என நேற்று மாலைச் செய்திகள் தெரிவித்தன.

## இனக் கலவர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சிறுபான்மை மக்கள் சமயோசிதமாக அமைதி காக்கவேண்டும்" -இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் மட்டக்களப்பு நகர் மற்றும் ஏனைய பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும் எனது பணிப்புரையின் பேரில் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் குறித்த சாரார் இருக்கும் இடங்களுக்குச் சென்று பிரச்சினைகள் ஏற்பட வழிவகுக்காமல் அமைதி காக்கவேண்டும்" -எனக் கேட்டுக் கொண்டார்.

மக்களின் உணர்வுகளைச் சீண்டிப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு அவர்கள் முயலலாம். இதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகள் அவர்களுக்கு ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொண்டு மக்கள் நடந்து கொள்ள வேண்டும்"-என்று அவர் தெரிவித்தார்.

# சமயங்களின் ஊடாக நல்லிணக்கம்' கிளிநொச்சியில் நேற்று கருத்தரங்கு



சமயங்களின் ஊடாக நல்லிணக்கம் எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்று நேற்று கிளிநொச்சி

கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம் பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச் செயலமர்வில் தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா கருத்துரையாற்றினார்.

நாட்டில் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. சமயங்களினூடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும் அதில் ஒன்றாகும்.

அந்த வகையில் மதகுருமார்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அடுத்து வரும் 26 மாதங்களுக்கு பல்வேறு நிகழ்வுகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வில் இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ம-70)

# பட்டப்பகலில் சட்டத்தரணி வீட்டில் இரண்டரை லட்சம் ரூபா அபேஸ்

### *கொக்குவிலில் நேற்றுச் சம்பவம்*

கொக்குவில் பகுதியில் உள்ள சட்டத்தரணி ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த இரண்டரை லட்சம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை பகல் வேளை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக சட்டத்தரணி நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வீட்டிலிருந்த சிலர் நேற்று வெளியே சென்றிருந்தனர். அங்கு எஞ்சியிருந்தோரும் சற்று உறங்கிவிட்டதாக தெரியவருகின்றது. இந்த நேரம் பார்த்து உள் நுழைந்த திருடர்கள் அலுமாரியில் இருந்து பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர்.

திருடர்கள் வீட்டைவிட்டு வெளியேறும் போது அங்கு பொருத்தியிருந்த கண்காணிப்புக் கமராவையும் சேதப்படுத்திவிட்டுச் சென்றனர் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

சட்டத்தரணி இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து மோப்ப நாய் மற்றும் தடயவியல் நிபுணர்கள் சகிதம் அந்த வீட்டுக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை. (ம-09)







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.